ஈழநாடு
வார மலர்
Eelanadu
Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 18 பக்கங்கள் : 12+ xii




# காணிகள் அற்ற மக்களுக்கு வடக்கில் காணி நன்கொடை!

## மலையக மக்களுக்கு முன்னுரிமை ஜனாதிபதி அநுரகுமார ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜன. 18

காணி அற்றவர்களுக்காக வடக்கு மாகாணத்தில் காணி நன்கொடை வழங்கும் நடவடிக்கை தொடர்பில் உரியவாறு பரிசீலிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா தெரிவித்தார்.

மானிடம் - பூமிதான இயக்கத்தின் கோரிக்கை கடிதத்தை, ஜனாதிபதியிடம் சமர்பித்தபோதே இந்த ஆலோசனை வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, மானிடம் - பூமிதான இயக்கத்தினால் நன்கொடையாக வழங்கப்படவுள்ள காணிகளை நேரில் சென்று பார்வையிட்டதாகவும் அவர் கூறினார்.

குறித்த காணிகள் தொடர்பான ஆரம்ப கட்ட களஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், அவற்றை காணி அற்றோருக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா தெரிவித்தார்.

முன்னதாக, டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட, காணிகள் அற்றோருக்கு, நன்கொடையாளர்களால் வடக்கு மாகாணத்தில் காணிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, மானிடம் - பூமிதான இயக்கம் ஜனாதிபதிக்கு கடிதம் ஊடாக அறிவித்தனர்.

குறித்த காணிகளில் வீடுகளை அமைப்பதற்கான நிதியை விடுவிக்க நடவடிக்கை

11



டான் தொலைக்காட்சி வருடாவருடம் வழங்கும் 'சாதனைத் தமிழன்' விருது இம்முறை ஈழத்தின் பிரபல நாதஸ்வர வித்துவான் பி.எஸ்.பாலமுருகனுக்கு நேற்று வழங்கப்பட்டது. டான் பொங்கல் விழாவில் வைத்து வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், யாழ்.மாநகர முதல்வர் வி.மதிவதனி, டான் குழுமத் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன், சமயத் தலைவர்கள் இணைந்து இதனை வழங்கினர். (அ)

## வடக்கில் அதிக குளிர்!

யாழ்ப்பாணம், ஜன. 18

கடந்த சில நாட்களாக இலங்கையின் ஏனைய கடற்பகுதிகளுடன் ஒப்பிடுகையில், வடக்கு பிராந்தியக் கடற்பகுதியின் கடல் மேற்பரப்பு

11

## பொங்குதமிழ் பிரகடனத்தின் 25ஆம் ஆண்டு நிறைவு யாழில்

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்.பல்கலைக்கழகத்தின் பொங்குதமிழ் பிரகடனத்தின் 25ஆம் ஆண்டு நிறைவு நாள் நேற்று சனிக்கிழமை நினைவு கூரப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் இணைந்து பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்துக்குள் உள்ள பொங்குதமிழ் நினைவு தூபி முன் கூடி பொங்குதமிழ் பிரகடன நிறைவு நாளை நினைவு கூர்ந்தனர்.

இதன்போது பொங்குதமிழ் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

இவ் எழுச்சி நிகழ்வில் வைத்து தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணைய உரிமை, மரபு வழித்தாயகம், தமிழ்த் தேசியம் என்பவை

11



## அமெ. தூதுவராக எரிக் மையர்!



கொழும்பு, ஜன. 18

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், எரிக் மையரை இலங்கைக்கான அடுத்த அமெரிக்கத் தூதராக நியமிக்க பரிந்துரை செய்துள்ளார்.

அமெரிக்க வெளிநாட்டு சேவையின் மூத்த தொழில்முறை உறுப்பினரான எரிக் மையர், தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் மூத்த பணியக அதிகாரியாக

11

## இந்த அரசின் காலத்திலேயே காணி விடுவிப்பு சாத்தியம்!

### ஜனாதிபதியிடம் கூறினார் விகாராதிபதி



யாழ்ப்பாணம், ஜன. 18

இந்த அரசாங்கத்தின் காலத்திலேயே காணி விடுப்புக்கள் சாத்தியம் என்பதால் காணிகளை விடுவிக்க

11

## கல்வி மறுசீரமைப்பு குறித்து தெளிவான கருத்து இல்லை!

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 18

கல்வி மறுசீரமைப்பு தொடர்பாக அரசாங்கத்திற்குள் ஒரு தெளிவான மற்றும் ஒருமித்த கருத்து இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒருபுறம் பிரதமர் கல்வி மறுசீரமைப்புகள்

11

## 88,89 களில் போட்ட விளையாட்டை இப்பொழுது போட வரவேண்டாம்!

### அரசுக்கு நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை



கொழும்பு, ஜன. 18

"1988, 1989 களில் போட்ட விளையாட்டை தற்போது போட வரவேண்டாம். அந்த அரசியல் கலாசாரம் மாறிவிட்டது. அன்று மகிந்த ராஜபக்ஷ இருந்தார். இன்று நாமல் ராஜபக்ஷ இருக்கின்றார். இது புதிய

11

## ரணில் - சஜித் சங்கமம் மிகவிரைவில் நடக்கும்!

### பாலித ரங்கே பண்டார கூறுகிறார்

கொழும்பு, ஜன. 18

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒன்றிணைவதற்கு எவ்வித தடையும் இல்லை என்று முன்னாள் அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

தலதா அத்துக்கோரளவுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியையும் இவரே சிறிது காலம் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

11

## இரணைமடு கமக்காரர் அமைப்புகளின் பொங்கல் நிகழ்வில் பொலிஸ்மா அதிபர்!



கிளிநொச்சி, ஜன. 18

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பொலி ஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய

11

## வேலையின்மை விகிதம் இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 18

2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நாட்டின் வேலையின்மை விகிதம் 4.3 வீதமாக பதிவாகியுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 4.2 வீதமாக பதிவாகியிருந்ததாக குடிசன மதிப் பீடு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது கடந்த 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 3.8 வீதமாக இருந்ததை

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழில் சாபக்கேடான அரசியல் அதிலிருந்து நாம் மீள வேண்டும்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், ஜன. 18

"யாழ்ப்பாணத்திலும் சாபக்கேடான அரசியல் முன்னெடுக்கப்படுகின்றது. அவ்வாறான அரசியலில் இருந்தும் நாம் மீள வேண்டும்"- இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

"முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய செயல்பாடு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

"அகன்று செல்" என்ற தொனிப்பொருளில், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறுகையில்,

"போதைப்பொருளுக்கு எதிராக நாட்டு மக்களை அணிதிரட்டும் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கொழும்பில் இதற்குரிய ஆரம்பகட்ட நடவடிக்கை நடைபெற்றது. 2ஆவது நி...ழ்வு அம்பாந்தோட்டையில் நடைபெற்றது.

மூன்றாவது மாநாடு யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போதைப்பொருள் பாவனைக்கு எதிராக கிராமிய மட்டத்தில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு, மக்கள் அணிதிரட்டப்பட்டு வருகின்றனர்.

போதைப்பொருள் பாவனையில் இருந்து எமது இளைஞர்களை மீட்க வேண்டும். இளைஞர்கள் போதைப் பொருள் பிசாசிடம் சிக்காமல் இருப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும்.

போதைப்பொருள் என்ற அரக்கனுடன் சில அரசியல் அரக்கர்களும் இணைந்துள்ளனர் என்பது கசப்பான உண்மையாகும்.

யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்பும்போது யாழின் மரபுரிமை, கலாசாரம், கௌரவம், அடையாளம் என்பனவற்றை பாதுகாத்து அதனை செய்யுமாறு ஜனாதிபதி எனக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதேவேளை, கொழும்பில் "கோட்சூட்" அணிந்து, யாழில் வேட்டியுடன் அரசியல் பேசும் நபர், யாழில் வரவுள்ள சர்வதேச மைதானத்துக்கு எதிராக வழக்கு போடப்போகின்றாராம்.

எமது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்றன நடவடிக்கைகளுக்கு எதிரானவர்களாக இவர்கள் மாறியுள்ளனர் என்பதை இது வெளிப்படுத்துகின்றது.

தமிழ் அரசுக் கட்சியினர் உட்பட எல்லோருக்கும் நாம் அழைப்பு விடுத்தோம். ஆனால் எவரும் வரவில்லை.

நிகழ்வுக்கு போனால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி அண்ணனுக்கு கோட்சூட் நபர் கூறினாராம். இப்படிதான் சாபக்கேடான அரசியல் யாழ்ப்பாணத்தில் உள்ளது. இந்த நிலையில் இருந்து நாம் மீள வேண்டும்." -என்றார். (எ)

# விசேட அதிரடிப் படையின் சீருடையை ஒத்த ஆடை அணிந்த இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜன. 18

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் சீருடையை ஒத்த ஆடை அணிந்த இளைஞன் ஒருவர் யாழில் கைது செய்யப்பட்டார்.

யாழ். நகரில் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றின் முன்பாக விசேட அதிரடிப் படையினர் அணியும் காற்சட்டையை ஒத்த ஆடையை அணிந்திருந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கைதான சந்தேக நபர் விசாரணைகளுக்கு பின்னர் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(எ-03)

# 2026 ஆரம்பமே இலங்கையில் குவியும் சுற்றுலா பயணிகள்

கொழும்பு, ஜன. 18

2026 ஆம் ஆண்டின் ஆரம்பமான முதல் 15 நாட்களுக்குள் ஓர் இலட்சத்து 31, 898 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதிக்குள், ஒரே நாளில் அதிகளவான சுற்றுலாப் பயணிகளின் வருகை ஜனவரி 15 ஆம் திகதி பதிவாகியுள்ளதுடன், அன்றைய தினம் நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10, 483 ஆகும் எனவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த 15 நாட்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த நாடாக இந்தியா விளங்குவதுடன், அந்த எண்ணிக்கை 23,786 ஆகப் பதிவாகியுள்ளது.

இதற்கு மேலதிகமாக, ரஷ்யாவிலிருந்து 14,785 பேரும் ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து 12,166 பேரும் மற்றும் ஜேர்மனியிலிருந்து 9,260 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.(எ)

வெளிநாடுகளில் மறைந்திருக்கும்

# 95 குற்றவாளிகளுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் வெளியீடு

கொழும்பு, ஜன. 18

வெளிநாடுகளில் தலைமறைவாக உள்ள 95 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ்.யு. வுட்லர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டில் சிவப்பு எச்சரிக்கை மூலம் 10 சந்தேக நபர்களும் 2025 ஆம் ஆண்டில் 11 சந்தேக நபர்களும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நாடு கடத்தல் சட்டத்தின் கீழ் 21 சந்தேக நபர்களை இலங்கைக்கு கொண்டுவர முடிந்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து குற்றச் செயல்களை முன்னெடுத்து வரும் குற்றவாளிகள் பலரை நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

இதன் ஒரு கட்டமாகவே நேற்று முன்தினம் ஐக்கிய அரபு இராஜ்ஜியம், அபுதாபி சர்வதேச பொலிஸ், டுபாய் பொலிஸ் மற்றும் தூதரகங்களின் உதவியுடன் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

கைதானவர்கள் பல கொலைச் சம்பங்களுடன் மற்றும் நிதி மோசடியுடன் தொடர்புடையவர்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (எ)

# தந்தையை அடித்து கொன்ற மகன் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஜன. 18

மதவாச்சி, கடவத்தகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் இரு பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்தார்.

மூத்த மகன் நடத்திய தாக்குதலினாலேயே இந்த மரணம் சம்பவித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

தனது தந்தை தலையில் காயங்களுடன் வீட்டின் முற்றத்தில் விழுந்து உயிரிழந்த நிலையில் கிடப்பதை, அருகில் உள்ள வீட்டில் வசிக்கும் இளைய மகன் கண்டுள்ளார்.

உயிரிழந்தவர் மூத்த மகனுடன் மது அருந்தியதாகவும் இதனால், ஏற்பட்ட தகராறு காரணமாக மகன் மரக்கட்டைத் துண்டால் தாக்கி இந்தக் கொலையை செய்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் 67 வயதுடைய கடவத்தகம, மதவாச்சி பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

42 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் மனநலக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டவர் என தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பில் மதவாச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# உழவியந்திர விபத்தில் சாரதி உயிரிழப்பு!

பதுளை, ஜன. 18

உழவியந்திரம் ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்த விபத்தில், அதன் சாரதி காயமடைந்து பதுளை போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மடுல்சீமை - பசறை வீதியில் மாளிகாதென்ன நோக்கிச் செல்லும் கிளை வீதியின் சரிவான பகுதியொன்றில் நேற்று முன்தினம் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் 43 வயதுடைய வெரல்லபதன, மடுல்சீமை பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 150 கிராம் கேரள கஞ்சாவுடன் கட்டைக்காட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 18

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டு ள்ளார்.

கட்டைக்காடு கிழக்கு பகுதியில் மருதங்கேணி பொலிஸாரால் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேகத்துக்கு இடமாக நின்று கொண்டிருந்த குறித்த நபரை பொலிஸார் சோதனை செய்தபோது உடைமையில் 150 கிராம் கேரள கஞ்சா வைத்திருந்தமைக்காக கைது செய்யப்பட்டார்.

போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நபர் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் மேலதிக நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

இவர் கடந்த வருடம் 70 கிலோ கிராம் கேரள கஞ்சாவை கடல் வழியாக கடத்தி வந்த வேளை வெற்றிலைக்கேணி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-08)

# தைப்பொங்கல் தினத்தன்று 7 வயது சிறுமி துஷ்பிரயோகம்

கண்டி, ஜன. 18

நாவலப்பிட்டி, வெஸ்ட்வேர்ல்ட் தோட்டத்தின் ரிலாகல பகுதியில் தைப்பொங்கல் தினத்தன்று 7 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 35 வயது நபரொருவர் நாவலப்பிட்டி பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமியும் சந்தேக நபரும் ஒரே பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று மதியம், மதுபோதையில் இருந்த சந்தேக நபர் சிறுமியை அவரது வீட்டிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் உள்ள இடமொன்றுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டு அங்கேயே கைவிட்டுச் சென்றுள்ளார்.

சிறுமி நீண்ட நேரமாகியும் வீட்டுக்கு வராததால், பெற்றோரும் தோட்டத் தொழிலாளர்களும் அவரைத் தேடியுள்ளனர்.

சுமார் 4 மணித்தியாலங்களின் பின்னர், தோட்ட லயன் குடியிருப்புகளுக்கு மேலுள்ள பகுதியிலிருந்து சிறுமி அழும் சத்தம் கேட்டதையடுத்து உறவினர்கள் அவரை மீட்டுள்ளனர்.

இதன்போது சிறுமி சந்தேக நபர் குறித்த விவரங்களை வெளியிட்டதையடுத்து, சிறுமியின் பெற்றோர் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி முதற்கட்டமாக நாவலப்பிட்டி மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக பேராதனை போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கம்பளை பிரிவுக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி. ஹேரத்தின் மேற்பார்வையில், நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம். குலதுங்க தலைமையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நாவலப்பிட்டி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி மறுசீரமைப்பு நிறுத்தப்படமாட்டாது

## பிரதமர் ஹரிணி உறுதி



கொழும்பு, ஜன. 18

நாட்டுக்குத் தேவையான மேம்பட்ட சமூகப் பிரஜையை உருவாக்கும் கல்வி முறைமையை ஒருபோதும் நிறுத்தப் போவதில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கல்வி மறுசீரமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து சிலாபம் கல்வி வலய அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கம் இந்த நாட்டைப் பொறுப்பேற்ற போது, மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய மிக முக்கியமான துறையாகக் கல்வித்துறை இலக்கு வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான சமூக மாற்றங்களைச் செய்யும்போது சிலரின் எதிர்ப்புகள் எழக்கூடும். எவ்வாறாயினும் சிறுவர் பாதுகாப்புக் கொள்கைக் கட்டமைப்புக்குள் புதிய கல்வி மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப்படும்.

தவறுகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்த்துக் கொண்டு செல்லும் புதிய கல்வி முறைமையில், சிறுவர்களுக்குத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவது, சிறுவர் பாதுகாப்புக் கொள்கைகள் பாதுகாக்கப்படும் வகையில் ஒரு குறிப்பிட்ட கட்டமைப்புக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொழிற்கல்விக்காக அதிகளவான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு இந்த கல்வி மறுசீரமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலைகளுக்கு இடையில் நிலவும் டிஜிற்றல் சமத்துவமின்மை மற்றும் உட்கட்டமைப்பு வசதிப் பிரச்னைகளை நீக்குவதற்காகத் தற்போது உரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தரம் 6 கல்வி மறுசீரமைப்புகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியதன் மூலம் அநீதிக்குள்ளான மாணவர்களுக்கு விரைவில் நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாற்றத்தை நோக்கி கல்வியைக் கொண்டு செல்லும் இப்பயணத்தில், அதற்கான மக்களின் அங்கீகாரம் மிகவும் முக்கியமானது- என்றார். (எ)

# ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான வழக்கு பெப். 6 வரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 18

முன்னாள் நிதி அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜூன் அலோசியஸ் ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் மேலதிக சாட்சி விசாரணையை பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிற்றர் ஜெனரல் ஜனக பண்டாரவின் நெறிப்படுத்தலின் கீழ் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

இதனையடுத்து, மேலதிக சாட்சி விசாரணைக்காக வழக்கை பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி மீண்டும் அழைப்பதற்கு நீதிபதி உத்தரவிட்டார். (எ)

# மகிந்தவின் முன்னாள் பாதுகாப்பு பிரதானிக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஜன. 18

28 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களை சட்டவிரோதமாக ஈட்டியதாக சந்தேகத்தின் பேரில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்னாள் பாதுகாப்பு பிரதானி நெவில் வன்னியாராச்சிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை ஜூன் 9 ஆம் திகதி அழைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், சந்தேகநபரான நெவில் வன்னியாராச்சியும் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது, நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்த இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு, இம்முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதன் முன்னேற்றத்தை அறிவிப்பதற்காக திகதி ஒன்றை வழங்குமாறும் கோரிக்கை விடுத்தது.

இதனையடுத்து முறைப்பாட்டை ஜூன் மாதம் 9 ஆம் திகதி அழைப்பதற்கு உத்தரவிட்ட நீதிமன்றம், அன்றைய தினம் இந்த விசாரணைகளின் முன்னேற்றத்தை அறிவிக்குமாறும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டது. (எ)

# வெளிநாட்டு சிகரெட்களுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 18

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்கள் மற்றும் பீடி தொகையுடன் சந்தேகநபர் ஒருவரை விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்தனர்.

இதன்போது, பொலிஸார் கைப்பற்றிய குறித்த சிகரெட் மற்றும் பீடி தொகையின் பெறுமதி 20 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகம் என விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேகநபர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் மத்துகம, வலல்லாவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய மோட்டார் வாகன திருத்துநர் என பொலிஸார் கூறினர்.

இவர் நேற்று அதிகாலை 12.40 மணியளவில் இந்தியாவின் சென்னை நகரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளார்.

சந்தேகநபர் கொண்டு வந்த நான்கு பயணப் பொதிகளுக்குள் விளையாட்டுப் பொருட்கள், சேலைகள், சட்டைகள் உள்ளிட்ட பொருட்களுக்கு இடையில் மறைத்து வைத்து, வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்கள் 12,000 அடங்கிய 60 சிகரெட் கார்ட்டூன்கள் மற்றும் இந்தியத் தயாரிப்பு பீடிகள் 23,800 அடங்கிய 19 பீடி பண்டல்களைக் கொண்டு வந்துள்ளமை சோதனைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வரும் 21 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வெடிபொருட்களுடன் சம்பூரில் மூவர் கைது

திருகோணமலை, ஜன. 18

சம்பூர் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் வெடிபொருட்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட முயன்ற மூவர், நேற்று முன்தினம் மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பூர் கடற்பகுதியில் நேற்று முன்தினம் மாலை வழமையான ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், சந்தேகத்துக்குரிய முறையில் நடமாடிய மீன்பிடி படகு ஒன்றை சோதனையிட்டனர்.

இதன்போது, குறித்த படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று டைனமைட் வெடிபொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, டைனமைட் வெடிபொருட்கள், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரப் படகு மற்றும் ஏனைய உபகரணங்களை கடற்படையினர் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட மூவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சம்பூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

கடல் வளங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இவ்வாறான வெடிபொருள் பாவனை குறித்து கடற்படையினர் மற்றும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(எ)

# டுபாய் இஷாரவின் சகாக்கள் மூவர் போதைப்பொருளுடன் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜன. 18

டுபாயிலிருந்து போதைப்பொருள் வலையமைப்பை வழிநடத்தும் பிரதான கடத்தல்காரரான "டுபாய் இஷாரா" என்பவரின் போதைப்பொருளை விற்பனை செய்யும் சந்தேகநபர்கள் மூவரை கம்பளை பொலிஸார் நேற்று முற்பகல் கைது செய்தனர்.

அவர்கள் வசமிருந்து 5 கிராம் ஹெரோயினையும் பொலிஸார் கைப்பற்றினர்.

குறித்த சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிளை பயன்படுத்தி கம்பளை, நாவலப்பிட்டி, உலப்பனை, தொலுவ, கெலிஓயா, பேராதனை வெலிகல்ல ஆகிய பகுதிகளுக்கு இந்த ஹெரோயினை விநியோகித்து வந்துள்ளனர்.

இதன்போது, கம்பளை தொலுவ பகுதியில் இருவரும் கம்பளை மஹர பகுதியில் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பளை அங்கும்மன, துன்தெனிய ஆகிய பகுதிகளில் வசிக்கும் இந்தச் சந்தேகநபர்களுக்கு கொழும்பில் இந்த போதைப்பொருள் வழங்கப்படுவதாக தெரியவந்துள்ளது.

இவர்கள் அனைவரும் 20 மற்றும் 22 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்று தெரியவந்துள்ளது.(எ)

# பல்கலை. மாணவர்களை தாக்கியவர்கள் மறியலில்

கண்டி, ஜன. 18

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்றின் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் 30 மற்றும் 31 வயதுடையவர்கள் எனவும் அஸ்கிரிய, கொதட்டுவ மற்றும் கண்டி பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் மூன்று சந்தேகநபர்கள் கடந்த 15 ஆம் திகதி கிரிபத்கும்புர பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன், மற்றைய நபர் நேற்று முன்தினம் பேராதனை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவர்கள் வெலிஹிரிய பிரதேசத்தில் உள்ள ஓடை ஒன்றில் நீராடச் சென்றிருந்த வேளையில், அவ்விடத்தில் மது அருந்திக் கொண்டிருந்த குழுவொன்றுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான நான்கு மாணவர்கள் தற்போது பேராதனை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர், எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.(எ)

# குறைந்தபட்ச வெப்பநிலை நுவரெலியாவில் பதிவானது

கொழும்பு, ஜன. 18

நேற்று அதிகாலை வேளையில் நாட்டின் குறைந்தபட்ச வெப்பநிலை 8. 0 பாகை செல்சியஸாக நுவரெலியா வானிலை மையத்தில் பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பண்டாரவளை பிரதேசத்தில் நேற்று அதிகாலை பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை 11 .6 பாகை செல்சியஸ் எனவும் பதுளை பிரதேசத்தில் குறைந்தபட்ச வெப்பநிலை 14. 4 பாகை செல்சியஸாகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, பொலநறுவை பிரதேசத்தில் நேற்று அதிகாலை பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை 19.4 பாகை செல்சியஸ் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# 80, 000 கஞ்சா செடிகள் அழிப்பு

கொழும்பு, ஜன. 18

அம்பாந்தோட்டை, கோனகங்கார - யால வனப்பகுதியின் 05ஆம் மண்டல பகுதியில் இரண்டு கஞ்சா சேனைகள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படை புத்தள முகாமின் அதிகாரிகளால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போதே குறித்த கஞ்சா சேனைகள் சுற்றிவளைக்கப்பட்டன.

சுமார் 02 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட 80, 660 கஞ்சா செடிகள் இதன்போது கைப்பற்றப்பட்டதுடன், ஆதாரத்துக்கு மாதிரிகளை எடுத்ததன் பின்னர், தீ வைத்து எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

இதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்ய கோனகங்கார பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுந்திடு, விழித்திடு, உழைத்திடு...

சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினமான ஜனவரி 12-ஆம் தேதியை தேசிய இளைஞர்கள் தினமாக இந்திய மத்திய அரசு கொண்டாடி வருகிறது. இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கோடிக்கணக்கான பெண்கள் படிக்கிறார்கள், கல்வி பெற்று உயர் பதவி வகிக்கிறார்கள். இதற்கு மூல காரணமாகச் செயல்பட்டவர் சுவாமி விவேகானந்தர். ஆம், பெண்களை மதிக்கத் தவறியதால்தான் இந்தியர்கள் மதிப்பிழந்தார்கள் என்பதைக் கண்டறிந்து சுட்டிக் காட்டியவர் சுவாமி விவேகானந்தரே.

இந்திய சமுதாயம் என்ற பறவைக்கு இரண்டு இறக்கைகள் தேவை. ஓர் இறக்கை ஆணின் ஆற்றல்மிக்க வளர்ச்சி. அடுத்த இறக்கை பெண்ணின் பெருமைமிகு வளர்ச்சி என்று தாய்குலத்துக்காகக் குரல் தந்தவர்தான் சுவாமி விவேகானந்தர்.

மனிதர்கள் அனைவரும் எல்லையற்ற சக்தி படைத்தவர்கள். ஆனால், விழிப்புணர்வு இல்லாத தன்மையினால் ராஜ குமாரர்களாக இருக்க வேண்டியவர்கள் பிச்சைக்காரர்களாகப் பிழைத்து வருவதைக் கண்டு சுவாமிஜி மிகவும் வருந்தினார். அந்த நிலையில் இருந்து அனைவரும் விடுபட வேண்டும் என்பதற்காக அவர் அருளிய மகா மந்திரம்தான் இது. எழுந்திடு, விழித்திடு, ஓயாதிரு, உழைத்திடு.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டிய முதல் நிலை எழுந்திரு என்பதுதான். எதிலிருந்து ஒருவன் எழ வேண்டும்?

**1. சுயநலத்திலிருந்து எழுந்திடு!:**

திறமைகளும் தன்னம்பிக்கையும் தகுதிகளும் வளர்த்துக் கொள்ளாமல் "உண்டு உடுத்தித் திரியும் இரண்டு கால் மாடு போல்" ஆட்டுமந்தைகளாக வாழும் பொறுப்பற்ற கூட்டத்திலிருந்து மனிதன் வெளிவர வேண்டும்.



2. எச்சரிக்கையாக இருப்பவர்களுடன் சேர்ந்திடு: இரண்டாம் பகுதி விழித்திடு. வெற்றுக் கூட்டத்திலிருந்து வெளிவந்தால் மட்டும் போதாது. நல்லோர் கூட்டத்தில் ஒருவர் இணைய வேண்டும். யாரெல்லாம் தரமாக, வேகமாக, விவேகமாக முன்னேறுகிறார்களோ, யாரெல்லாம் பொறுப்புடன், சிறப்புடன் செயல்படுகிறார்களோ, யாரெல்லாம் மக்கள் தொண்டில் ஈடுபடுகிறார்களோ அவர்களை அடையாளம் காண வேண்டும். லட்சியம் உள்ள ஒருவன் அவர்களை அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். விழிப்புடன் அவர்களைக் கவனிக்க வேண்டும். அவர்களிடமிருந்து கற்க வேண்டும் என்பது இரண்டாம் நிலை.

3. தேங்காதே, தயங்காதே: மூன்றாம் நிலை மிக மிக முக்கியமானது. "நல்லவனாக இருப்பதும் நன்மை செய்வதும்தான் சமய வாழ்க்கையின் சாரம்" என்பார் சுவாமி விவேகானந்தர்.

அதன்படி நல்ல காரியங்களைச் செய்யும் போதும் நல்லவனாக இருக்கும் போதும் சில சிரமங்களும் சில பிரச்னைகளும் வரலாம். அதற்காக வாழ்க்கையில் ஒருவர் தேங்கியும் தயங்கியும் நின்றுவிடக் கூடாது. தொய்வு அடைந்திடக் கூடாது என்பதற்காக சுவாமி விவேகானந்தர், "நில்லாதே" என்ற எதிர்பதத்தைப் போடுகிறார் முயற்சியில் சோர்ந்து விடாதே என்றும் எச்சரிக்கிறார்.

4. வேண்டியது ஒரு வெற்றி அல்ல. ஒவ்வொன்றிலும் வெற்றி: நல்ல வகையில் தொடங்கிய லட்சியப் பயணத்தில் தடுமாறாமல் போவதற்கு ஒருவர் தொடர்ந்து நல்லோருடன் இணங்கி நல்ல சக்திகளுடன் செயல்பட வேண்டும். அதனால் அவரது வாழ்க்கைப் பயணம் தெளிவாக இருக்கும். அவர் எடுக்கும் முயற்சி அவருக்கும் பிறருக்கும் பயன்படும். விளையாட்டில் ஏதோ ஒரு போட்டியில் வெற்றி பெறுவது பெரிதல்ல. தொடர் வெற்றியே முக்கியம்.

விரும்பிய லட்சியத்தை அடைவதிலிருந்து ஒருவர் தனது கவனத்தைத் திசை திருப்பக் கூடாது. நம் அன்றாட வாழ்க்கையிலும் சரி, ஆன்மிக வாழ்க்கையிலும் சரி கவனச் சிதைவு என்பது பெரிய தடை. அந்தத் தடையைக் கவனத்துடன் ஒருவர் தாண்ட வேண்டும். முடிந்தால் தகர்த்தெறிய வேண்டும்.

கவனச்சிதைவு என்பது கருச்சிதைவு போன்றது. எல்லா நிலைகளிலும் எல்லா நேரங்களிலும் விழிப்புடன் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருப்பதுதான் வாழ்க்கை. அதுதான் முன்னேறும் மனிதனின் இயல்பான நிலை என்று நம் அனைவருக்கும் சுவாமி விவேகானந்தர் காட்டுகிறார்.

ஆட்டுமந்தைகள் போன்று மனிதர்கள் பலரும் கேளிக்கைக் களியாட்டங்களிலும், போட்டி பொறாமைகளிலும், சுயநலத்திலும் சிக்கி அலைகிறார்கள். அப்படிப்பட்டவர்களை சுவாமி விவேகானந்தர் ஆண் சிங்கமாக, வேதாந்த சிங்கமாக இவ்வாறு எழுப்புகிறார்.

"எழுந்திடு, விழித்திடு, லட்சியத்தை அடையும் வரை ஓயாது உழைத்திடு".

இந்த ஒரு செய்தி நம் ஒவ்வொருவரையும் இளமைச் சக்தியுடன் செயல்பட வைக்கும் சமுதாயத்தைச் சுறுசுறுப்பாக்கும் தேசத்தைத் திறனுடன் திடம்பட வைக்கும். இதுவே சுவாமி விவேகானந்தர் தேசிய இளைஞர் தினத்தை நாம் கொண்டாடுவதற்கான நோக்கம் ஆகும். (தினமணி)

## இந்தவார ராசிபலன் 18.01.2026 - 24.01.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - தை 04

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : அமாவாசை

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷராசி அன்பர்களே! பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே கருத்து ஒற்றுமை வலுப்படும். சகோதரர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். அரசாங்கக் காரியங்கள் இழுபறியான பிள்ளைகளால் பெருமை உண்டு. அலுவலகத்தில் பணிச் சுமை அதிகரித்தாலும் அதற்கேற்ற சலுகைகளும் கிடைக்கும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷபராசி அன்பர்களே! குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல்நலம் சீராகும். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வேலைக்கு விண்ணப்பம் செய்திருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுனராசி அன்பர்களே! பணம் வந்தாலும் செலவுகளும் அதிகரிக்கும். சிலருக்குக் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தந்தையின் விருப்பத்தை நிறை வேற்றி மகிழ்வீர்கள். வழக்குகளில் வழக்கறிஞரின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது. பிள்ளை கள் பிடிவாதம் பிடித்தாலும் விட்டுப் பிடிப்பது நல்லது. நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உங்கள் திறமைக்கு அங்கீகாரமும் கிடைக்கும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடகராசி அன்பர்களே! பொருளாதார வசதிக்கு குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்வதன் மூலம் தேவையற்ற பிரச்னைகளைத் தவிர்த்துவிடலாம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். பொறுமையைக் கடைப்பிடிப்பதுதான் நல்லது.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்மராசி அன்பர்களே! வார முற்பகுதியில் நீங்கள் நீண்ட நாள்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். பேச்சினால் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது மிகவும் கவனமாக இருப்பது அவசியம். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக் கிடையே சிறுசிறு பிணக்குகள் ஏற்பட்டு நீங்கும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். பொறுமை அவசியம்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னிராசி அன்பர்களே! இந்த வாரம் நீங்கள் எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும். அவசரப்பட்டு எவருக்கும் எந்த வாக்குறுதியும் தரவேண்டாம். பொருளாதார நிலை சுமாராகத்தான் இருக்கும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது எச்சரிக்கையுடன் இருக்கவும். சகோதரர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். மற்றபடி பண வசதியைப் பொறுத்தவரை பிரச்னை எதுவும் இல்லை. நிர்வாகத் தினரின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாராசி அன்பர்களே! சிந்தித்துச் செயல்படவேண்டிய வாரம். முக்கிய முடிவுகள் எதுவும் எடுப் பதைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மனச் சஞ்சலம் தரும். சிலருக்கு தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்கள் உதவியால் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். பள்ளி, கல்லூரிக் கால நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும். ஆதரவும் கிடைக்கும். சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிகராசி அன்பர்களே! பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அவ்வப்போது சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டாலும் உடனுக்குடன் சரியாகிவிடும். வெளிநாட்டில் இருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அலைச்சலையும் செலவுகளையும் ஏற்படுத்தினாலும் அனுகூலமாக முடிந்துவிடும். வேலையில் மாற்றம் ஏற்படக்கூடும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசுராசி அன்பர்களே! பொருளாதார நிலை நல்லபடி இருக்கும். வீண் செலவுகளும் ஏற்படாது. கணவன் - மனைவிக்கிடையே சிறு சிறு பிரச்னைகள் தோன்றக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித் துச் செல்வது நல்லது. குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் அலைச்சலும் சோர்வும் ஏற்படும். கருத்துவேறுபாடுகள் நீங்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் அதற்கேற்ப சலுகைகளும் கிடைக்கும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகரராசி அன்பர்களே! கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பழைய கடன்கள் விஷயத்தில் முன்னெச்சரிக்கை நட வடிக்கைகள் அவசியம். தந்தைவழி உறவினர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் கடுமையாக உழைப்பீர்கள்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்பராசி அன்பர்களே! ஓரளவு அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம். நீண்டநாளாக உங் களை வருத்திக்கொண்டிருந்த உடல் உபாதைகள் இனி குணமாகும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். மற்றவர் களுடன் மனஸ்தாபம் ஏற்படும் என்பதால் பேசும்போது பொறுமை தேவை. சகோதரர்களுடன் அனு சரணையாக நடந்துகொள்வது நல்லது. மூன்றாவது நபர்கள் குடும்ப விஷயத்தில் தலையிடுவதை கண்டிப்பாகத் தவிர்ப்பது அவசியம். பதவி மாற்றம் கிடைக்கும் என்றாலும் அதனால் நன்மையே ஏற்படும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீனராசி அன்பர்களே! உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் அதிகரித்தாலும் போதுமான பணவரவு இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் உதவியாக இருப்பார்கள். வெளியூர்ப் பயணம் தவிர்ப்பது நல்லது. அவசியம் ஏற்பட்டால் தக்க எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். சிலருக்கு வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் பிரச்னைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு சக பணியாளர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும். பொறுமை அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
18.01.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், தை 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# ஏன் முழு நாடும் ஒன்றாக இல்லை

"முழு நாடும் ஒன்றாக" என்னும் பெயரில் தேசிய வேலைத்திட்டம் ஒன்றை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆரம்பித்து வைத்திருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் வைத்து இதனை ஆரம்பித்து வைத்திருப்பதன் மூலம் அவர் ஒரு செய்தியை மறைமுகமாகத் தெரிவித்திருக்கின்றார். ஒன்றில் இதனை அவர் அறிந்து செய்தாரா அல்லது அறியாமல் செய்தாரா என்பது அவருக்கு மட்டுமே தெரிந்தது. அவர் மேடையில் இருக்கின்றபோது தமிழ் கட்சிகளின் தலைவர்களை தாக்கிப் பேசிய அமைச்சர் சந்திரசேகரனும் ஏனைய தேசிய மக்கள் சக்தியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் நிச்சயமாக இதனை அறிந்திருக்கப் போவதில்லை - ஆனால் சிந்தித்திருந்தால் இதனை கண்டுபிடிப்பது கடினமான ஒன்றுமல்ல.

"முழு நாடு ஒன்றாக" என்னும் வேலைத்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் வைத்து ஆரம்பித்து வைத்திருப்பதன் ஊடாக வெளிப்பட்டிருக்கும் செய்தி, இப்போது நாடு ஒன்றாக இல்லை - தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் என்னதான் வாக்களித்திருந்தாலும் கூட, அவர்கள் தங்களை இலங்கையர்களாக உணரவில்லை. எனவே அவர்களை இலங்கையர்களாக உணச் செய்ய வேண்டும் என்று அநுரகுமார திஸாநாயக்க முயற்சிக்கின்றார். இதன் காரணமாகத்தான் யாழ்ப்பாணத்தில் வைத்து இவ்வாறானதொரு திட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கின்றார்.

காலத்திற்கு காலம் கொழும்பின் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை நோக்கி வருவதும் கவர்ச்சிகரமான அறிவிப்புக்களை மேற்கொள்வதும் சாதாரணமான ஒன்றுதான். ஆனால் அவ்வாறான அறிவிப்புக்களுக்கு அமைவாக முன்னேற்றங்கள் நடந்திருக்கின்றதா என்பதுதுதான் கேள்வி. முழு நாட்டையும் ஒன்றாக கொண்டுவர வேண்டும் என்பது நல்ல திட்டம் - அவசியமான திட்டமும் கூட. ஆனால் தமிழ் மக்களை இலங்கையர்களாக உணர முடியாதளவிற்கு தடுக்கின்ற காரணிகள் என்ன என்பதை அறிந்து, அதனை நிவர்த்தி செய்கின்ற போதுதானே தமிழ் மக்கள் தங்களை ஒரு நாட்டின் மக்கள் என்று உணர்கின்ற நிலைமை ஏற்படும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு மரியாதையான பார்வையுண்டு. ஆனால் தேசிய மக்கள் சக்தி தொடர்பில் அவ்வாறான மரியாதையான பார்வை இருப்பதாகக் கூறிவிட முடியாது. ஏனெனில் அநுர என்னும் ஒருவர்தான் ஜே.வி.பியினதும் தேசிய மக்கள் சக்தியினதும் முகம். அவருக்கு பதிலாக மக்களிடம் வரக் கூடிய முகங்கள் இல்லை. இந்த நிலையில் தன் மீது மரியாதையும் நம்பிக்கையும் கொண்டு வாக்களித்த தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி என்ன செய்யப் போகின்றார் என்பதுதான் கேள்வி.

தமிழ் அரசியல்வாதிகளை, அவரது அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் திட்டுவதன் மூலம் பிரச்சனைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. இதனைத்தான் முன்னைய ஆட்சியாளர்களும் செய்து கொண்டிருந்தனர். விடயம், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை ஜனாதிபதி எவ்வாறு நிவர்த்தி செய்யப் போகின்றார்? இன்றுவரையில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி வாய் திறக்கவில்லை? அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் வாய் திறக்கவில்லை. தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு விதமாக பேசுகின்றனர் ஆனால் முழு நாட்டையும் ஒரு நாடாக்குவதற்காக கனவு காணும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதுவும் கூறவில்லை. இந்த இடம்தான் சந்தேகத்திற்குரியதாக இருக்கின்றது? ஏன் ஜனாதிபதி தொடர்ந்தும் சில விடயங்கள் பற்றி பேச அச்சப்படுகின்றார்? சில விடங்கள் தொடர்பில் வெளிப்படையாக பேசுவதற்கு அச்சப்படும் சூழலில் எவ்வாறு முழு நாட்டையும் ஒன்றுபடுத்த முடியும்?

# ஜூலி சங் - சஜித் சந்திப்பு



கொழும்பு, ஜன. 18

தனது இராஜதந்திர பதவிக் காலச் சேவை நிறைவடைந்து நாட்டிலிருந்து விடைபெற்றுச் செல்லும் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து கலந்துரையாடினார்.

அவரது பதவி காலத்தில் இரு நாடுகளின் உறவுகளை பல்வேறு துறைகள் ஊடாக வலுப்படுத்துவதற்கும் முன்னேற்றம் காணச் செய்வதற்கும் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் எடுத்த முயற்சிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

மிக அண்மைக் காலங்களில் இலங்கை எதிர்கொண்ட அசாதாரண துயர் சம்பவங்களின் போது இலங்கைக்கு மனிதாபிமான ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அமெரிக்கா ஊடாக பெற்றுத் தந்த ஒத்துழைப்புகளுக்கும் சஜித் பிரேமதாஸ தமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார். (எ)

# ரி- 56 மகசின்கள், தோட்டாக்களுடன் ஓய்வுபெற்ற இராணுவ கப்டன் கைது

ரி- 56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தும் 18 மகசின்கள் மற்றும் 25 தோட்டாக்களை தம்வசம் வைத்திருந்த இராணுவத்தின் ஓய்வு பெற்ற கப்டன் ஒருவர் மினுவாங்கொடை - மிரிஸ்வத்த பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.(எ)

# துப்பாக்கிச்சூட்டை திட்டமிட்டவர் கைது

கொழும்பு, ஜன. 18

நவகமுவ, கொரதொட்ட மெனிக்காகார வீதி பகுதியில் கடந்த முதலாம் திகதி இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தொடர்பில் மேலும் பல தகவல்களைக் கண்டறிய பொலிஸாருக்கு முடிந்துள்ளது.

வீடொன்றுக்குள் இருந்த மூன்று நபர்களை இலக்கு வைத்தே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்ததோடு, அதில் ஒருவர் உயிரிழந்ததுடன் ஏனைய இருவரும் படுகாயமடைந்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூடு தொடர்பில் ஹோமாகம பிராந்திய குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இத்தகைமைய விசாரணை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பேரில் பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேரகஸ்ஹந்திய பகுதியில் இந்தக் குற்றத்தைத் திட்டமிட்டமை மற்றும் அதற்கு உதவியமை தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 24 வயதுடைய பொரளை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் கூறினர்.

வெளிநாட்டில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி ஒருவரால் இக்குற்றச் செயல் வழிநடத்தப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஹோமாகம பிராந்திய குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.(எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு கலந்தாலோசனை அவசியம்!



கலாநிதி ஜெகான் பெரேரா

பொது அபிப்பிராயங்களை கருத்தில் எடுக்கத் தொடங்கியிருப்பது அரசாங்கத்தின் நேர்மறையான ஒரு அம்சமாகும். தன்னினச் சேர்க்கை தொடர்பிலான இணையத்தளம் ஒன்றுக்கான தொடுப்பு சேர்க்கப்பட்டதாக வெளியிடப்பட்ட தரம் 6 ஆங்கில பாட நூல் வழிகாட்டி தொடர்பாக மூண்ட சர்ச்சைக்கு அரசாங்கம் பதிலளித்த விதம் மிகவும் ஆக்கபூர்வமான தாக இருந்தது. தவறை விளக்குவதற்கு கடுமையான அக்கறை எடுத்த அரசாங்க தலைவர்கள் ஆங்கிலபாட வழிகாட்டிக்கு உரியதல்ல, அந்த இணையத்தளத் தொடுப்பு அகற்றப்படும் என்று சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுக்கும் உறுதியளித்தனர்.

அவர்கள் மதத்தலைவர்கள், கல்வியாளர்கள் மற்றும் சமூகத் தலைவர்களை சந்தித்து வருகின்றனர்.

பல வருடங்களாக நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கை மிகவும் கடுமையாக அருகிப்போயிருந்த ஒரு பின்புலத்தில், அரசாங்கம் இவ்வாறாக பொதுக் கருத்துக்களை செவிமடுத்து பதிலளிப்பது முக்கியமானதாகும். இது பெற்றோர்கள், ஆசிரியர்கள் பாடசாலை முறைமை ஊடாக சமூகத்துக்கு எடுத்துச் செல்லப்படும் விழுமியங்கள் தொடர்பாக அக்கறை கொண்டவர்கள் உட்பட சமூகத்துக்கு பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு தனக்கு இருப்பதாக அரசாங்கம் உணருகின்றது என்பதன்அறிகுறியாகும்.

ஆங்கிலபாட நூல் வழிகாட்டி தொடர்பிலான இந்த விவகாரம் அரசாங்கத்திற்குள் ஐக்கியத்தை வலுபடுத்தியிருக்கிறது. இடம்பெற்ற தவறுக்கு கல்வியமைச்சராகவும் இருக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரிய மீதே முற்றுமுழுதாக குற்றப் பொறுப்பைச் சுமத்துவதற்கு சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் பெண்ணின வெறுப்பாளர்களும் மேற்கொண்ட முயற்சி அவரைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தின் சிரேஷ்ட தலைவர்களை ஒன்றுபட வைத்தது. பிரதமர் விவகாரத்தில் அரசாங்கத்திற்குள் இருக்கின்ற ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே வி.பி.) பலம் பொருந்திய பிரிவினர் அதிருப்தி கொண்டிருப்பதாக வெளியாகும் ஊகங்களுக்கு மாறானதாக இது அமைகிறது.

மிகவும் முக்கியமாக, முறைமையில் இருக்கக்கூடிய குறைபாடுகளுக்காக அமைச்சர்களை தனிப்பட்ட முறையில் பலிக்கடாவாக்கக்கூடாது என்று அரசாங்கத்திற்குள் இருக்கும் புரிந்துணர்வை இது வெளிக்காட்டுகிறது. பயனுறுதியுடைய ஆட்சிமுறை கூட்டுப் பொறுப்பிலும் தலைவர்கள் மத்தியிலான ஒருமைப்பாட்டிலுமே தங்கியிருக்கிறது. அதுவும் குறிப்பாக, பொதுச் சர்ச்சைகள் தோன்றுகின்ற வேளைகளில் அத்தகைய ஒருமைப்பாடு இன்றியமையாததாகும்.

பிரதமரின் முக்கியமான பாத்திரம் அவர் சர்வதேச முக்கியஸ்தர்களுடன் நடத்துகின்ற சந்திப்புக்களிலும் மக்கள் மத்தியில் அவர் நிகழ்த்துகின்ற உரைகளிலும் தெளிவாக தெரிகிறது. டித்வா சூறாவளிக்கு பின்னர் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் கூட்டத்துக்கு கடந்த வாரம் பிரதமர் தலைமை தாங்கினார். பொது அபிப்பிராயங்களை அரசாங்கம் எந்தளவுக்கு கவனம் செலுத்துகிறது என்பதை செயலணியின் உறுப்பினர்களின் வகையும் தொகையும் மீண்டும் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது.

அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட முன்னைய பொறிமுறைகள் அவற்றின் உறுப்பினர்களாக முற்றிலும் ஆண்களைக் கொண்டவையாகவும் சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவம் இல்லாதவையாகவும் இருந்தன. அவற்றைப் போலன்றி நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயலணி சிவில் சமூகத்தின் பிரதாநிதிகளும் உட்பட சகல தரப்புகளையும் உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது. தீர்மானங்களை மேற்கொள்ளும் அமைப்புக்கள் நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிப்பவையாக இருந்தால் பொதுமக்களின் ஏற்புடைமையையும் நியாயப்பாட்டையும் பெருமளவில் கொண்டிருப்பது சாத்தியம்.

இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி மீட்சியின் பல்வேறுபட்ட அம்சங்களை கையாளும் எட்டு குழுக்களை மேற்பார்வை செய்கிறது. ஒவ்வொரு குழுவும் அந்தந்த துறைசார்ந்த அமைச்சரின் தலைமையில் அமைந்திருக்கிறது. இந்த குழுக்கள் தேவைகள் மதிப்பீடு, பொது உட்கட்டமைப்புக்களை மீளமைத்தில், வீடமைப்பு, உள்ளூர்ப் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரங்கள், சமூக உட்கட்டமைப்பு, நிதி மற்றும் நிதியளிப்பு, தரவுகள் மற்றும் தகவல் முறைமைகள், பொதுத் தொடர்பாடல் ஆகிய விவகாரங்களில் கவனம் செலுத்துகின்றன. இந்த கட்டமைப்பு அகல்வாரிவானதாகவும் நன்கு திடமிடப்பட்டதாகவும் அமைந்திருக்கிறது.

ஆனால், நிறுவன வடிவமைப்புக்களினால் மாத்திரம் வெற்றி உத்தரவாதப்படுத்தப்படுவதில்லை என்பதை 2004 சுனாமிக்கு பிறகு இலங்கை மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாணப் பணிகளின் அனுபவம் உணர்த்துகிறது. களத்தில் உள்ளவர்களுடன் இந்த குழுக்கள் எந்தளவுக்கு ஊடாட்டங்களைச் செய்கின்றன என்பதும் பல்வேறு தரப்புகளிடமிருந்து வருகின்ற யோசனைகளை எந்தளவுக்கு ஏற்பதற்கு தயாராக இருக்கின்றன என்பதும் முக்கியமானது.

ஜனாதிபதி செயலணியின் பணிகளுக்கு உரியவை என்று எதிர்பார்க்கப்படும் துறைகளில் நிபுணத்துவத்தைக் கொண்ட சிவில் சமூகக் குழுகளுடன் பிணைப்புகளை ஏற்படுத்திக்கொள்வது குறித்து பரிசீலனை செய்வது அந்த செயலணிக்கு நல்ல ஒரு தெரிவாக இருக்கலாம். அவசரகால நிவாரணத்துக்கான சிவில் சமூகக் குழுக்களின் கூட்டமைப்பு செயலணியினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற குழுக்களுடன் இணைக்கப்படக்கூடிய பல்வேறு குழுக்களை அமைத்திருக்கின்றது.



**ஒன்றுசேர்ந்து பிரச்சினைகளை அணுகுவது குறிப்பாக, பாதிக்கப்பட்ட தரப்புகளுடனும் அவர்களுடன் பணியாற்றுபவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவது பௌதீகக் கட்டமைப்புக்களை மாத்திரமல்ல, அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான நம்பிக்கையையும் மீளக்கட்டியெழுப்புவதற்கான சிறந்த சந்தர்ப்பத்தை தருகிறது.**

அத்தகைய இணைப்புக்கள் அரசாங்கத்தின் அதிகாரத்தை பலவீனப்படுத்தாது. மாறாக நடைமுறை யதார்த்த கொள்கைகளின் மூலமாக அதை பலப்படுத்தும். சமூகங்களை வெறுமனே பயனாளிகளாக மாத்திரம் நோக்காமல் பிரச்சினைகளின் தீர்வில் பங்காளிகளாக நடத்தும் போது பெரும்பாலும் நிலைபேறான தீர்வுகள் கிடைக்கின்றன. அரசும் சிவில் சமூகமும் இணைந்து செயற்படுவதன் மூலமே அத்தகைய தீர்வுகள் சாத்தியமாகும் என்பதை அண்மைய கண்டுபிடிப்புகள் வலியுறுத்துகின்றன.

டித்வா சூறாவளி பௌதீகக் கட்டமைப்புகளுக்கு அப்பால் பெருமளவு அழிவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. அது சமூகங்களை நிர்மூலம் செய்திருக்கிறது. மண்சரிவுகளினாலும் வெள்ளப் பெருக்கினாலும் சிலர் விழுங்கப்பட்டுவிட்ட அதேவேளை, ஏனைய பலர் எதிர்காலத்தில் நிகழக்கூடிய அனர்த்தங்களினால் பாதிக்கப்படக்கூடியவர்கள் என்பதால் அவர்களது வீடுகளில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இடம்பெயர்வின் விளைவான உணர்வதிர்ச்சி வெறுமனே பொருட்களுடன் சம்பந்தப்பட்டதல்ல, சமூக மற்றும் உளவியல் தாக்கங்களையும் கொண்டது. புதிய இடங்களுக்கு சமூகங்களை மாற்றும்போது மிகுந்த அவதானத்துடனான திட்டமிடல் அவசியம். இது வெறுமனே மக்களுக்கு வீடுகளை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட விடயம் மாத்திரமல்ல்.

சமூகங்களுடன் சேர்ந்து வாழக்கூடியதாகவும் வாழ்வாதாரங்களைப் பெறக்கூடியதாகவும் மக்களை இடம் மாற்றும் செயற்பாடுகள் அமையவேண்டியது அவசியம். அதற்கு இடம் மாற்றப்படுபவர்களுடனான கலந்தாலோசனை முக்கியமானது. சமூகத்தின் சம்மதமின்றி திணிக்கப்படுகின்ற இடம் மாற்றுத் திட்டங்கள் பெரும்பாலும் தோல்வி கண்டுவிடுகின்றன என்பதை அனர்த்தங்களுக்கு பின்னரான மதிப்பீடுகள் நிரூபித்திருக்கின்றன. அவ்வாறு திணிக்கப்படுகின்ற புதிய குடியேற்றத்திட்டங்களை கைவிட்டு மக்கள் வெளியேறியதுண்டு. அதன் விளவாக புதிய வடிவிலான புறக்கணிப்பு வழிவகுக்கிறது. இன்று கூட, 2004 சுனாமியினால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளிலும் கைவிடப்பட்ட வீடமைப்புத் திட்டங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது.

டித்வா சூறாவளியினால் பெருமளவில் பாதிக்கப்பட்ட நாட்டின் பாகங்களில் முன்னெடுக்கப்பட வேண்டியவையாக இருக்கும் பெருமளவிலான புனர்நிர்மாணப் பணிகள் மலையகத் தமிழ்ச் சமூகத்தவர்களின் பிரத்தியேகமான பிரச்சினைகளை கையாளுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தையும் கொண்டுவருகின்றன. அண்மைய இந்திய வம்சாவளியினரான இந்த சமூகத்தவர்களான இந்த மக்கள் இலங்கை சுதந்திரமடைந்த நேரத்தில் அநியாயமான முறையில் நடத்தப்பட்டார்கள். குடியுரிமை, நிலவரிமை மற்றும் வாக்குரிமை அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டது. நீண்டகாலமாகப் புரையோடிப்போய்க் கிடக்கின்ற அவர்களின் பிரச்சினைகள் நாட்டின் மனச்சாட்சி மீதான ஒரு கறை.

மண்சரிவுகளினால் பாதிக்கப்படக்கூடிய மலையகத்தின் அந்த பாகங்களில் வாழ்கின்ற மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான தேவை மலையகத் தமிழ்ச் சமூகத்துக்கு நீதி செய்வதற்கு கிடைத்திருக்கும் ஒரு நல்ல வாய்ப்பாகும். முன்னர் உத்தேசிக்கப்பட்ட தொடர்மாடிக் குடியிருப்புக்கள் அல்லது இங்கிலாந்துப் பாணியிலான நகர்ப்புற வீடுகள் செலவு மிக்கவை என்பதுடன் கலாசார ரீதியிலும் பொருத்தமற்றவை. சமூக ரீதியாக அந்த மக்களைச் சீர்குலைத்து விடும். தற்போது முன்னாலிருக்கும் பணி வீடுகளைக் கட்டுவதல்ல, சமூகங்களை மீளக்கட்டியெழுப்புவதாகும்.

தங்களது வீடுகளையும் சமூகங்களையும் இழந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான பண்புகளைப் பொறுத்தவரை, அவர்களுடன் கலந்தாலோசிப்பது அவசியமானதாகும். அதே முறையில் கல்விச் சீர்திருத்தங்கள் ( ஆங்கிலப்பாட வழிகாட்டி தொடர்பான சர்ச்சை அதில் ஒரு சிறிய பகுதி மாத்திரமே) தொடர்பிலும் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகம் உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்தாராய வேண்டிய தேவை இருக்கிறது.

பேச்சுவார்த்தையை தொடங்குவது என்பது எவருமே தங்களது நிலைப்பாடுகளை அல்லது பண்புகளை கைவிடுவது என்று அர்த்தமாகிவிடாது. மாறாக, வேறுபட்ட யோசனைகளைக் கேட்டறிந்து பேச்சுவார்த்தைகளை நடத்தும்போது சிறந்த தீர்வுகளைக் காண்பதற்கான வாய்ப்புகள் தோன்றுகின்றன. குறிப்பாக,விரைவான பயன்விளைவுகளை காணவேண்டிய நெருக்குதல்கள் தீவிரமாக இருக்கின்ற சூழ்நிலைகளில், கலந்தாலோசனை என்பது சலிப்பையும் வெறுப்பையும் தருவதாக இருக்கலாம். ஆனால், சம்பந்தப்பட்ட சகல தரப்புகளினதும் பங்கேற்புடன் வகுக்கப்படுகின்ற தீர்வுகள் செலவு குறைந்தவை என்பதுடன் நீண்டகால நோக்கில் பெருமளவுக்கு நெகிழ்வுத்தன்மையுடன் தாக்குப் பிடிக்கக் கூடியவையாகவும் இருக்கும்.

டித்வா சூறாவளிக்கு பின்னர் நாட்டை மீளக்கட்டியெழுப்பும் செயற்திட்டங்களைப் பொறுத்தவரை, மலையக தமிழ்ச் சமூகம் எதிர்நோக்குகின்ற வரலாற்று ரீதியான அநீதியைக் கையாளுதல், கல்விச் சீர்திருத்தத்தை முன்னெடுத்தல், மேலும் தாமதமின்றி மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்காக தேர்தல் முறையை மாற்றுதல் ஆகியவையும் தேசிய நல்லிணக்கம் உட்பட வேறு பிரச்சினைகளும் அரசாங்கம் எதிர்நோக்குகின்ற சவால்களாக இருக்கின்றன. இவற்றை வேறுபாடுகளுக்கு அப்பால் பேச்சுவார்த்தைகளும் முரண்பாடில்லாத பொறுமையும் அவசியமாகும்.

முன்னர் குறிப்பிட்டதைப் போன்று, பேச்சுவார்த்தையை தொடங்குவது என்பது எவரும் தங்களது சொந்த நிலைப்பாடுகளையோ அல்லது பண்புகளையோ கைவிடுவதாக அர்த்தப்படாது. மாறாக, மற்றைய தரப்புகள் கூறுவதை கிரகித்து ஆராய்ந்து பரந்தளவிலான ஏற்புடைமையுடன் தீர்வுகளை எட்டுவதேயாகும். கலந்தாலோசனையை துரிதமாக தீர்மானங்களை எடுப்பதற்கான ஒரு தடையாக அல்லாமல், நிலைபேறானதன்மையிலும் நியாயப்பாட்டிலும் செய்யப்படுகின்ற ஒரு முதலீடாக கருத வேண்டியது அவசியமாகும். ஒன்றுசேர்ந்து பிரச்னைகளை அணுகுவது குறிப்பாக, பாதிக்கப்பட்ட தரப்புகளுடனும் அவர்களுடன் பணியாற்றுபவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவது பௌதீகக் கட்டமைப்புக்களை மாத்திரமல்ல, அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான நம்பிக்கையையும் மீளக்கட்டியெழுப்புவதற்கான சிறந்த சந்தர்ப்பத்தை தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவின் காட்சி அரசியலும் இலங்கையின் மாயாஜாலமும்!

**பனங்காட்டான்**

தமிழ் நாட்காட்டியில் தைமாதம் பிறக்கும்போதுதைபிறந்தால் வழி பிறக்கும் என்றுதமிழர்கள் நம்பிக்கைகொள்வதுவழக்கம்.இதனைவாழ்த்தாகவும் கூறிக்கொள்வர்.

பெரும்புயல் சீற்றத்தில் பேரழிவைக் கண்டதீவு அதிலிருந்து மீள்வதற்கான சகல ஏற்பாடுகளையும் எடுத்து வருகிறது. சர்வ தேசம் தாராளமாக அள்ளிக்கொடுக்கிறது.

தைப்பொங்கல் தமிழருக்கான பெருநாள் என்பதை முன் வைத்து வடபகுதிக்கு தமதுவிஜயத்தைமேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமர இங்கு அம்மண்ணின் மைந்தனாகத் தம்மை காட்டிக்கொண்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றினார். ஆனால், தைபிறந்தும் தையிட்டி மக்களுக்கு எந்த விடிவும் கிடைக்கவில்லை. மக்களுக்காக போராடிய மக்கள் சிலர் நீதிமன்றபடிகளில் ஏற்றப்பட்டுள்ளனர்.

அநுரகுமரவின் வடபகுதிவி ஜயத்தின் எதிர்பார்ப்புகள், வாக்குறுதிகள், மக்கள் வழங்கிய வரவேற்பு ஆகியவைகளுக்குள் செல்வதற்கு முன்னர் இவர் தலைமையிலான ஆட்சியின் அரசியற் செயற்பாடுகளை கவனிக்கவேண்டும். இவர்களது பிரதமர் ஹரிணி அமரசூரியவை மையப்படுத்தி விரிக்கப்பட்டுள்ள வலை சற்று தொய்ந்து காணப்படுகிறது.

ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு அறிமுகம் செய்யப்படவிருந்த புதிய கல்வித்திட்டத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்த எதிரணியினர், பாடப் புத்தகத்தில் திட்டமிட்டு நுழைக்கப்பட்ட பாலியல் தொடர்பான விடயங்களை முன்னிலைப்படுத்தி ஆட்சியை அலுப்புத் தட்டவைக்க அங்கலாய்க்கின்றனர்.ஏற்கனவே மக்களால் நிராகரிக்கப்பட்ட விமல் வீரவன்ச, உதயகம்மன்பில போன்றவர்கள் தங்களை மீண்டும் மேடையேற்ற இதனை வாய்ப்பாக்குகின்றனர்.ஆசிரிய சங்கங்கள் போர்க்கொடி தூக்கிநிற்கின்றன. பௌத்த பிக்குகளும் இதற்குள் இழுத்துவிடப்பட்டுள்ளனர்.

மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கும் போக்கில் புதிய பாடத்திட்டத்தை ஆரம்பிப்பதை அரசு ஒருவருடத்துக்கு பின் போட்டுள்ளது. எனினும் இதற்குப் பொறுப்பாகவுள்ள கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரிய பதவி விலக வேண்டுமென்ற கோரிக்கையை எதிரணியினர் கைவிடவில்லை. இதே கோரிக்கையுடன் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்த விமல் வீரவன்சதம்மால் தான் பாடத் திட்டம் பின்போடப்பட்டதாகக் கூறி சத்தியாக்கிரகத்தை (இப்படிக் கூறுவதே பொருத்தமாகத் தெரியவில்லை) கைவிட்டார். நீதிமன்ற வழக்கொன்றுக்கு அன்று செல்லாவிட்டால் பிடியாணை பிறப்பிக்கப்படுமென்ற அச்சத்தினாலேயே இவர் சத்தியாக்கிரகத்தை கைவிட்டதாக ஆட்சித்தரப்பினர் விமர்சித்து வருகின்றனர்.

ஹரிணி அமரசூரிய மீதான நம்பிக்கையீன பிரேரணை மீதானவிவாதம் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 22ம் 23ம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இரு தரப்பினரும் மாறிமாறி தாக்குதல் நடத்துவதற்கு தயாராகி வருகின்றனர். இதற்கிடையில் ஹரிணி எந்தப் பதவியிலிருந்தும் நீக்கப்படமாட்டாரென்றும்,அமைச்சரவை மாற்றமெதுவும் கிடையாதென்றும் அமைச்சரவை முடிவெடுத்துள்ளது. ஆனாலும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கவிடும் நிலையில் எதிரணிகள் இல்லை. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல தமிழ் கட்சிகளும் ஹரிணிக்கு ஆதரவாக நிற்கின்றன. இதற்காக அவர்களுக்கு நன்றி கூறுவதைப் போன்று அலரிமாளிகையில் பல்வேறு மதத் தலைவர்களையும் அழைத்து பொங்கல் விழாவை ஹரிணி அமரசூரிய கோலாகலமாக செய்துகாட்டியுள்ளார்.



**தேர்தல் காலங்களில் தமிழர் தாயகத்தில் ரஜினிகாந்தாக மேடைகளில் தோன்றிய அநுரகுமர இப்போது காட்சி அரசியல் செய்துசெல்பிகளின் நாயகராகியுள்ளார்.தமது பதவிக்காலம் முடிந்து அமெரிக்கா திரும்பும் அந்நாட்டின் தூதுவர் ஜூலிசங், இலங்கையில் உண்மையில் மாயாஜாலம் உள்ளதென்று கூறியுள்ளார். இது யாரைக் குறிக்கிறது?**

அண்மைய நாட்களில் இவரைப் போன்று ஊடகங்களில் இன்னொரு முக்கிய பெண்மணி முக்கியத்துவம் பெற்றிருக்கிறார். நான்கு வருடங்கள் இலங்கையில் அமெரிக்காவின் தூதுவராகக் கடமையாற்றிவிட்டு கடந்த 16ம் திகதி தமது நாட்டுக்குத் திரும்பியிருக்கும் ஜூலிசங், தமது பதவிக்காலம் முடிந்து நாடு திரும்புவதற்கு முன்னர் சில முன்னாள் ஜனாதிபதிகள், தற்போதைய ஜனாதிபதி உட்பட பல முக்கியஸ்தர்களை நேரில் சந்தித்து பிரியாவிடை பெற்ற பின்னர் தமது எக்ஸ் தளத்தில் ஒருகருத்தைப் பதிவிட்டுள்ளார்.

இலங்கையர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் தங்கள் புருவத்தை உயர்த்தும் வகையில் இவரது வாசகம் அமைந்துள்ளது. இலங்கையில் உண்மையிலேயே மாயாஜாலம் உள்ளது என்பது இந்த வாசகம். *There is something truly magical about Sri Lanka* என்றுஆங்கிலத்தில் குறிப்பிட்டுள்ளார்.அத்துடன் நிறுத்தாது, இனி என்ன நடக்கப்போகிறது என்பதில் நம்பிக்கை கொள்கிறேன் என்றும் புரிந்து கொள்ள முடியாத நடையில் பதிவிட்டுள்ளார்.

மாயாஜாலம் உள்ளது என்று இவர் குறிப்பிட்டது எதுவாக இருக்கலாம் என்பது அவரவர் கற்பனைக்கும் சர்ச்சைக்கும் உரியது. காலி முகத்திடலில் இடம்பெற்ற அறகலைய போராட்டத்தின் இயக்குனராக இவரே இயங்கியதாக அப்போது பெருமளவில் பேசப்பட்டது. அறகலைய போராட்டக்காரர்களுக்கு காலி முகத்திடலுக்கு அருகிலிருந்த ஹோட்டலிலிருந்து இரவு பகலா கசுவையான உணவுகள் விநியோகிக்கப்பட்டதற்கும் இவரே ஏற்பாடு செய்ததாக சில ஊடகங்களில் எழுதப்பட்டும் இருந்தது.

அப்படியென்றால்,கோதபாய நாட்டைவிட்டு தப்பியோடி பதவி துறந்தது, மகிந்த ராஜபக்ச பதவி இறக்கப்பட்டு இரவோடிரவாக ஹெலியில் கொழும்பை விட்டுப் பறந்தது, ராஜபச்சக்கள் கூண்டோடு அரசியலிலிருந்து ஒதுக்கப்பட்டது, ரணில் விக்கிரமசிங்க பிரதமராகி ஜனாதிபதியானது, ஜே.வி.பி.யின் அடையாளமான தேசிய மக்கள் சக்தி கடந்த மூன்று தேர்தல்களிலும் வெற்றியைப் பெற்று ஜனாதிபதியாகவும், நாடாளுமன்றமாகவும், உள்ளாட்சிச் சபைகளைக் கைப்பற்றியதும் என்று எதனை இவர் மாயாஜாலம் எனக் குறிப்பிட்டார் என்பது இதுவரை எவருக்கும் புரியவில்லை. அந்தகன் யானையைத் தடவிய கதையாக மாயாஜாலக் கதை நீண்டகாலத்துக்கு தொடரும் சாத்தியமுண்டு.

அநுரகுமரவின் வடபகுதிக்கான விஜயம் சற்று நோக்கப்படவேண்டியது. கடந்த மூன்று தேர்தல் காலத்திலும் தமிழ் பகுதிகளுக்கு இவர் மேற்கொண்ட விஜயங்களுக்கும் இந்த விஜயத்துக்கும் வேறுபாடு காணப்படவில்லை. மழையோ வெய்யிலோ புக முடியாத அலங்காரக் கூடாரங்களில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் ஆசனங்களில் அமர்த்திருந்தனர். வேலணை ஆலயம் ஒன்றின் முன்றலில் பொங்கல் பானையில் இவரே அரிசியிட்டு தைப்பொங்கலை ஆரம்பித்துவைத்தார். மூத்தோர், இளையோர் என ஆண் பெண் இருபாலாரும் திரண்டிருந்தனர். தமிழர் பாரம்பரிய முறைப்படி அநுரகுமர வரவேற்கப்பட்டார். நடன நங்கைகள் மலர்ந்த முகத்துடன் அவரது கரத்தை இறுக்கிப் பிடித்த ஒளிப்படங்கள் இணையங்களில் பரவிக்கிடக்கின்றன.செல்பி எடுத்தவர்கள் இன்னொரு தொகையினர்.

யாழ்ப்பாண நாகவிகாராதிபதியும், நயினாதீவு விகாராதிபதியும் இவரது கைகளில் மந்திரிக்கப்பட்ட நூல்களை கட்டி வாழ்த்தினர். மறந்தும் கூட தமிழர் பிரச்சனை தீர்வுபற்றி எதுவும் கூறவில்லை. தமது அரசின் சில செயற்திட்டங்களை வழமையான பாணியில் எடுத்துக்கூறி கைதட்டலை பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் தமக்கு எந்தப் பாதுகாப்பும் தேவையில்லை - மக்களே எனது கவசம் என்பதைக் காட்டுவதைப் போல பொது வீதியொன்றில் அரைக்காற்சட்டையுடன் நடைப்பயிற்சி செய்த காட்சி பிரபலமாகியுள்ளது. இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் மட்டும் சீருடையில் இவர் அருகில் செல்வதாகக் காட்டப்பட்டது.

இன்னொரு ஒளிப்படம் இவர் உணவருந்துவது. தரையில் தடுக்கொன்றில் சப்பாணிகட்டி வேட்டியுடன் அமர்ந்தவாறு தலைவாழையிலையில் வைக்கப் பட்டிருந்த மூங்கில் குழல் பிட்டை குழம்புக் கறியுடன் கைகளால் பிசைந்து அவர் சாப்பிடும் காட்சி இந்த விஜயத்தின் கிளைமாக்ஸ். தமிழ் சினிமாவில் ரஜினிகாந்த் சிம்பிளாக வந்து எம்மவரில் ஒருவராக காட்சி கொடுத்து பிரபல்யமானது போல அநுரகுமரவின் இம்முறை விஜயம் நன்கு திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. இதனை இவரது காட்சி அரசியல் என்று குறிப்பிட்டால் தவறிருக்காது. இதன் அறுவடையைப் பொறுத்தே வெற்றியைக்காண சிலகாலம் பொறுத்திருக்க வேண்டும்.

சாவகச்சேரி தொகுதியிலுள்ள மீசாலை என்ற இடத்தில் அமைந்துள்ள பாடசாலை வளவில் குடும்ப வீடமைப்புத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். இவர துகட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான இளங்குமரனின் தொகுதி இதுவென்று சொல்லப்படுகிறது. தமிழரசுக் கட்சி சுமந்திரனின் வலது கரமான சயந்தனின் தொகுதியும் இதுதான். அதனால்தான் இந்த இடத்தை அநுர தரப்பினர் தெரிவு செய்திருக்கலாம் என்று வதந்தியும் உண்டு.

இத்தொகுதியிலுள்ள நாவற்குழி என்ற இடத்தில் 1980களில் பிரதமராகவிருந்த பிரேமதாச (சஜித்தின் தந்தை), கம் உதாவ வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பெருமளவுவீடுகளைநிர்மாணித்தார். 1983 யூலை இனஅழிப்பின் பின்னர் ராணுவத்தினரின் குடியிருப்பாக இதுமாற்றமடைந்தது.இப்போதுபௌத்தவிகாரையுடன் சிங்களமக்களின் குடியேற்றத் திட்டமாகியுள்ளது. மீசாலை வீடமைப்புத் திட்டமும் அவ்வாறுமாற்றம் பெறாதிருக்கப் பார்த்துக் கொள்வது தமிழ்த் தேசிய கட்சியினர் என்று கூறிக்கொள்பவர்களின் பாரிய கடமை.

அநுரகுமரவின் வடபகுதி விஜயத்தை தமிழரசுக் கட்சி புறக்கணித்தது. இதுகட்சியின் முடிவு என சுமந்திரன் முதலில் அறிவித்திருந்தார். கட்சிக்கு அழைப்பு அனுப்பப்படவில்லையெனவும் தவிசாளர்களுக் குமட்டும் அழைப்பு வந்ததாகவும் அதனை அவர்கள் பகிஸ்கரித்து விட்டதாகவும் பின்னர் சொன்னார்.

இவரை பதில் செயலாளராக்குவதற்காக தமது பதவியை இராஜினாமா செய்த சத்தியலிங்கம் வேறொரு விளக்கம் கொடுத்துள்ளார். ஜனாதிபதியின் மீது தாங்கள் நம்பிக்கை வைத்திருப்பதாகவும், முன்னையவர்கள் போல இவரிடம் கொடூரமுகம் இல்லையெனவும், இவரது வருகைபற்றி தாங்கள் அறிந்திருந்ததாகவும், ஆனால் தங்களுக்கு அழைப்பு வரவில்லையென்றும் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். அழைப்பு வந்திருந்தால் தாங்கள் போயிருப்போம் என்பதுபோன்றுள்ளதுசத்தியலிங்கத்தின் கூற்று.

அநுரவின் வடபகுதிவிஜயத்தையும் தமிழரசுக் கட்சியின் கருத்துகளையும் பார்க்கும்போது இவ்விடயத்தில் இவர்கள் குழம்பியிருப்பதுபோலதெரிகிறது. கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானத்தின் நிலைப்பாடு என்னவாக இருக்குமோ தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூமார் ப்ரீனா

# இக்பால் அத்தாஸ்: தொழில்முறை திறமைக்கு இணையாக மனித நேயமும் நிறைந்திருந்தது!

1979ஆம் ஆண்டு, அப்போது மிகவும் பிரபலமாக இருந்த 'சன்' செய்தித்தாளின் செய்தி மேசையில் பயிற்சி நிருபராக நான் சேர்ந்த உடனே, முதன்முறையாக இக்பால் அதாஸை சந்தித்தேன். அப்போது அவர் செய்தி ஆசிரியராக இருந்தார். ஆனால் எங்களுக்குத் தெரியாமலேயே, அவர் ஏற்கனவே பத்திரிகையியல் எனும் கலையின் உயிர்ப்பான ஒரு 'மாஸ்டர் கிளாஸாக' இருந்தார்.

செய்தி எழுதுவதற்கான எனது முதல் பாடம் இக்பாலிடமிருந்தே தொடங்கியது. 81 ஆண்டுகளுக்கு முன், செப்டம்பர் 1ஆம் தேதி பிறந்த அவர், செய்தித்துறை உலகில் அரிதாகக் கிடைக்கும் ஒரு ரத்தினம். அவர் பேசும் விதமும் எழுதும் முறையும் ஒரே தன்மையுடையவை - தெளிவானது, ஈர்க்கக்கூடியது, இயல்பாகவே அதிகாரபூர்வமானது.

இக்பால் அதாஸின் பெயருடன் வெளியான எந்தக் கட்டுரையும் ஒரு பெரிய செய்தியாகவே கருதப்பட்டது - இன்றைய மொழியில் சொன்னால் 'பிரேக்கிங் நியூஸ்'. பெரும்பாலும் அது முதல் பக்கத்தையே அலங்கரிக்கும். ஆனால் அவர் ஒருபோதும் தன்னை அல்லது சக பத்திரிகையாளர்களை கவர்வதற்காக எழுதவில்லை. அவர் எழுதியது சாதாரண வாசகனுக்காக. எளிமையான நடை, தெளிவான விளக்கம், பரபரப்பில்லாத லேசான நாடகம் - அவரது எழுத்து எப்போதும் வாசகனை கட்டிப்போடும்.

ஆங்கிலம், தமிழ், சிங்களம் இந்த மூன்று மொழிகளிலும் அவர் அபாரமான புலமை பெற்றிருந்தார். எப்போதும் தனது அடையாளமான 'பிரீஃப்கேஸ்'டன், அமைதியான கம்பீரத்துடன் செய்தியறைக்குள் அவர் நுழைவார். வெளியில், நீல நிற மிட்சுபிஷி லான்சர் கார் (நாங்கள் அதை "எல்-லைட் மாடல்" என்று அழைப்போம்) காத்திருக்கும். அந்த காலத்தில் இத்தகைய வசதிகள் அரிதாக இருந்த நிலையில், அது அமைதியான வெற்றியின் அடையாளமாகவே தெரிந்தது.

பல நேரங்களில் 'தவச' மற்றும் 'தினபதி' பத்திரிகைகளின் செய்தி ஆசிரியர்கள் அவருடன் இருந்துகொண்டே, நாள் தொடங்குவதற்கு முன்பே முக்கிய செய்திகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருப்பார்கள். அந்த உரையாடல்களே எங்களுக்கு செய்தி மதிப்பீட்டின் பாடங்களாக இருந்தன.



இவ்வளவு உயர்ந்த நிலை இருந்தபோதும், இக்பால் மிகவும் எளிமையான மனிதர். முழுமையான ஒரு நற்பண்புடையவர் - அன்பானவர், அணுக எளிதானவர், உதவ தயாரானவர். அவரது தொழில்முறை திறமைக்கு இணையாக மனித நேயமும் நிறைந்திருந்தது.

அவரது செய்தி மூலங்கள் பட்டியல், அந்தக் காலத்தின் "யார் யார்" என்ற பட்டியலைப் போலவே இருக்கும் - அரச உயர் அதிகாரிகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தூதர்கள், அரசியல் தலைவர்கள், கல்வியாளர்கள் அவரிடம் பேசினார்கள் ஏனெனில் அவரை நம்பினார்கள். அவரால் பகிரப்பட்ட தகவல்கள் நம்பகமானவை, முக்கியமானவை.

பொதுவாக காலை 10 மணியளவில் செய்தியறைக்கு வரும் இக்பால், முக்கிய செய்தி வந்தால் இரவு முழுவதும், சில சமயம் விடியற்காலம் வரை தங்குவார். எந்த நேரமாக இருந்தாலும், வழிகாட்டலுக்காக அவரை அழைக்க நாங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தோம். இது மொபைல் போன்கள், லேப்டாப்கள் என எதுவும் இல்லாத காலம்.

அவரது ஒலிவெட்டி டைப் ரைட்டரில் அவர் தட்டச்சு செய்யும் வேகம் அசரவைக்கும். அந்த ஒலி கேட்டாலே, ஏதோ முக்கியமான செய்தி உருவாகிக் கொண்டிருக்கிறது என்று நாங்கள் அறிந்துகொள்வோம். ஆனால் அது என்னவென்று மாலை 6 மணிக்கு 'ப்ரூஃப் கொப்பி' வந்த பிறகே தெரியும்.

இக்பால் இருந்தால் செய்தியறை எப்போதும் உயிர்ப்புடன் இருக்கும்.

சில சமயங்களில், இக்பால் எழுதிய செய்திகளை வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்கு, இப்போது இல்லாத *OTS (Overseas Telegraph Service)* டிக்கர் முறையில் கொண்டு செல்லும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது. இணையம், மின்னஞ்சல், ஆன்லைன் அப்லோடு போன்றவை கனவிலும் இல்லாத காலம் அது.

இது என் அதிகாரப்பூர்வ பணிக்குள் வராத ஒன்று. அது என் ஆசிரியருக்காக செய்த உதவி- ஆனால் எனக்கு அது ஒரு பெருமை. அந்த அனுபவத்தில், சர்வதேச செய்தி பரிமாற்றம் எப்படி நடக்கிறது, நேரத்தின் முக்கியத்துவம் என்ன, துல்லியமும் வேகமும் எவ்வளவு அவசியம் என்பதைக் கற்றுக்கொண்டேன். அது கற்றுக் கொடுக்கப்படவில்லை இயல்பாகவே உட்கொள்ளப்பட்டது. பின்னோக்கிப் பார்த்தால், அதுவே தூய அறிவு.

அந்த காலத்தில் வழிகாட்டுதல் என்பதன் உண்மை அர்த்தம் இதுவே. கட்டமைக்கப்பட்ட பயிற்சிகள் அல்ல. அனுபவம், நம்பிக்கை, செயலில் கற்றல். பொறுப்பிலிருந்தே வளர்ச்சி வருகிறது என்று நம்பிய ஒரு ஆசானின் அமைதியான கண்காணிப்பில்.

ஆண்டுகள் கழித்து, முற்றிலும் வேறு சூழலில், எங்கள் பாதைகள் மீண்டும் சந்தித்தன.

படங்களில், அவர் என் அலுவலகத்திற்கு வந்த ஒரு தருணம் பதிவாகியுள்ளது. அப்போது, இருவரின் வாழ்க்கைப் பயணங்களிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்திருந்தன. செய்தியறையில் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு நாங்கள் பிரிந்தோம். ஆனால் அந்த ஆரம்ப காலத்தில் உருவான பந்தம் ஒருபோதும் மங்கவில்லை.

எங்கள் உறவு இயல்பாக வளர்ந்தது. நான் அவருக்கான நம்பகமான செய்தி மூலங்களில் ஒருவராக மாறினேன். அவர் எனக்காக, எப்போதும் நம்பிக்கைக்குரிய ஊடக தொடர்பாகவே இருந்தார். எங்கள் உறவை சிறப்பாக்கியது, செய்தியறை ஒழுக்கம், பத்திரிகை நெறிமுறைகள், துல்லியத்திற்கான மௌன ஒப்புதல்.

அந்த சந்திப்புகளில் உரையாடல்கள் சமூகமானவை அல்ல. அவை சூழல், பார்வை, நம்பகத்தன்மை ஆகியவற்றில் வேரூன்றியவை. அலங்கார வார்த்தைகளோ வலியுறுத்தல்களோ தேவையில்லை. உண்மைகள் தாமாகவே பேசின - ஏனெனில் நம்பிக்கை ஏற்கனவே இருந்தது.

இன்று அந்தப் படங்களைப் பார்க்கும் போது, கவனிக்கப்படுவது அதிகாரபூர்வம் அல்ல. பரிச்சயம். பகிர்ந்த ஒரு கடந்த காலத்தால் இணைக்கப்பட்ட, பரஸ்பர மரியாதையில் நிலைத்திருக்கும் இரண்டு தொழில்முறை மனிதர்கள். ஆசான், நண்பனாக மாறியிருந்தாலும், வழிகாட்டியாக இருப்பதை ஒருபோதும் நிறுத்தவில்லை.

அதுவே, ஒரு சிறந்த செய்தி ஆசிரியரின் உண்மையான அளவுகோல் - அவர் உருவாக்கும் பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல. அவர் வளர்த்தெடுக்கும் வாழ்நாள் தொழில்முறை உறவுகளும்.

(டெய்லி எவ்.பி.)

# இந்திய அரசியல் ஆய்வாளர் சத்தியமூர்த்தி மறைவு!



வீரகத்தி தனபாலசிங்கம்

தமிழகத்தைச் சேர்ந்த நீண்டநாள் நண்பரான மூத்த பத்திரிகையாளரும் சிறந்த அரசியல் ஆய்வாளரு மான என்.சத்தியமூர்த்தி (73) சிறிதுகால சுகவீனத்துக்கு பிறகு தைப்பொங்கல் தினத்தன்று சென்னையில் கால மானார்.

சமகால சமூக -அரசியல் வரலாற்றில் மிகுந்த ஆர்வம் கொண்டவரான சத்தியமூர்த்தி இந்திய மற்றும் சர்வதேச அரசியல் விவகாரங்கள் குறித்து பல தசாப்தங்களாக நிறையவே எழுதிவந்தார். இந்தியாவின் அயல் நாடுகளின் குறிப்பாக இலங்கை மற்றும் மாலைதீவின் அரசியல் விவகாரங்கள் குறித்து சத்தியமூர்த்தி போன்று இந்தியாவைச் சேர்ந்த வேறு எந்த பத்திரிகையாளரோ அல்லது அரசியல் ஆய்வாளரோ தொடர்ச்சியாக நீண்டகாலம் எழுதியிருப்பதாக கூறமுடியாது.

புதுடில்லியில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் சிந்தனைக்குழாம் 'ஒப்சேர்வர் றிசேர்ச் பவுண்டேசனின்' சென்னை பிரிவின் தலைவராக அண்மைக் காலம் வரை செயற்பட்ட சத்தியமூர்த்தி இலங்கையின் முக்கியமான தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் ஆலோச கராகவும் சிலவருடங்கள் பணியாற்றினார். சிலவாரங்க ளுக்கு முன்னர் சுகவீனமடையும் வரை இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகைகள் சிலவற்றிலும் யாழ்ப்பாணத் தில் இருந்து வெளியாகும் ஒரு தமிழ்ப் பத்திரிகையிலும் அவர் அரசியல் ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவந்தார்.



இலங்கையின் சகல தரப்பு அரசியல் தலைவர்களுடனும் நெருக்கமான உறவுகளைப் பேணிவந்த அவர் இலங்கையின் முக்கியமான அரசியல் ஆய்வாளர்களுக்கு எந்தளவுக்கும் குறைவில்லாத அளவுக்கு இலங்கையின் அரசியல் விவகாரங்கள் குறித்து தெளிவானஅரசியல் ஆய்வுகளை எழுதும் ஆற்றல் படைத்தவராக விளங்கினார். தனிப்பட்ட முறையில் ஆலோசனை கூறுமளவுக்கு எமது அரசியல்வாதிகள் பலருடன் நெருக்கமான பரிச்சயத்தை அவர் கொண்டிருந்தார்.

இலங்கையின் முன்னணி தேசிய தமிழ்ப் பத்திரிகை யான வீரகேசரியை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட 'சமகாலம்' சஞ்சிகையின் ஆசிரியராக நான் பணியாற்றிய காலப் பகுதியில் (2012 - 2015) சத்தியமூர்த்தி எனக்கு ஆலோசனைகளை வழங்கியதுடன் உள்நாட்டுமற்றும் சர்வதேச அரசியல் விவகாரங்கள் குறித்து ஆய்வுக் கட்டுரைகளை கிரமமாக எழுதிவந்தார்.

இலங்கையில் தமிழில் சமூக- அரசியல் விவகாரங் கள் தொடர்பான ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவந்த புதிய முயற்சியான எமது சஞ்சிகையை மேம்படுத்த வேண்டும் என்ற அக்கறையில் சத்தியமூர்த்தி தமிழகத் தையும் புதுடில்லியையும் சேர்ந்த அரசியல் ஆய்வாளர்களையும் எமக்காக எழுதவைத்தார்.

பத்திரிகைத்துறை சார்ந்து எனக்கும் அவருக்கும் இடையில் தொடங்கிய தொடர்பு நாளடைவில் தனிப் பட்ட முறையில் நெருக்கமான நட்பாக மாறியது. கொழும்புக்கு வந்த சந்தர்ப்பங்களில் அவர் என்னைச் சந்திக்கத் தவறியதில்லை. அவரது குடும்பத்தவர்களும் கூட எனக்கு பரிச்சயமானவர்களாக மாறினார்கள்.

குறைந்தபட்சம் இருவாரங்களுக்கு ஒருமுறை என்னு டன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவதை சத்தியமூர்த்தி வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒவ்வொரு சம்பாஷணையும் ஒரு அரை மணித்தியாலத்தைக் கடந்து நீடிக்கும். அரசியல் நிலைவரங்கள் தொடர்பாக பேசுவ தற்கு முன்னர் எனது உடல்நிலை குறித்து மிகுந்த அக்கறையுடன் விசாரிக்கும் அவருடன் இறுதியாக16 டிசம் பர் 2025 அன்று பேசினேன். மீண்டும் பேசுவோம் என்று இருவரும் கூறி சம்பாஷணையை முடித்துக்கொண்டோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அதுவே எமக்கிடையிலான இறுதிச் சம்பாஷணையாகிப் போய்விட்டது.

அயலகத்தைச் சேர்ந்த சிறந்த பத்திரிகையாளர் மற்றும் அரசியல் ஆய்வாளரை நாம் இழந்துவிட்டோம். அவரது மறைவு அரசியல் ஆய்வுத்துறைக்கு பாரிய இழப்பாகும். அவரது மகனுக்கும் மனைவிக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கத்தின் தோட்டத்தில் சிக்கிய தமிழ்ப் பட்டம்?



நிலாந்தன்

வல்வெட்டித் துறைபட்டத் திருவிழா ஒரு பருவ காலப்பொழுது போக்குப் போட்டி மட்டுமல்ல. அது ஒரு பண்பாட்டுப் பெருவிழா. தமிழ் மக்களின் தேசிய ஆன்மாவை பிரதிபலிக்கும் ஒரு பெருவிழா.

பட்டத் திருவிழாக்களின் தொடக்கம் பண்டைய சீனாவாகும். அங்கேபட்டங்கள் விவசாயச் சடங்குகளோடும் யுத்தத் தேவைகளோடும் இணைக்கப்பட்டிருந்தன. சீனாவில் இருந்து ஆசியாவுக்குப் பட்டங்கள் பரவின. யப்பானிலும் கொரியாவிலும் அவை திருவிழாக்கள், பொழுது போக்குக் கொண்டாட்டங்கள் என்ற வளர்ச்சியைப் பெற்றன. இந்தியாவில் "மகர் சங்கராந்தி" என்ற இந்துப் பெருவிழாவோடு பட்டத் திருவிழாவும் இணைத்துக் கொண்டாடப்படுகின்றது.

ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாகவனையும் அம்சங்களில் ஒன்று பொதுப் பண்பாடு ஆகும். ஒருமக்கள் கூட்டத்தின் பண்பாட்டைவெளிப்படுத்தும் ஆடைத் திருவிழாக்கள், உணவுத் திருவிழாக்கள், பட்டத் திருவிழாக்கள் போன்றன அம்மக்கள் கூட்டத்தை ஒரு தேசமாக, உணர்வு பூர்வமாகப் பிணைக்கின்றன.

வல்வெட்டித்துறை பட்டத் திருவிழாவானது, தமிழ் மக்களின் மகிழ்ந்திருக்கும் இயல்பை,கொண்டாட்ட உணர்வை, அழகுணர்ச்சியை, கலையுணர்வை, பட்டம் கட்டும் தொழில்நுட்பத்தை மட்டும் வெளிப்படுத்தவில்லை. அதைவிட ஆழமானபொருளில் தமிழ் மக்களின் வீரத்தை, அரசியல் உட்கிடக்கைகளை வெளிப்படுத்துகின்றது. அந்தப் பட்டங்களில் சமூக



உள்ளதில் பெரியதமிழ்க் கடைசிக்குள் காணப்படும் இரண்டு அணிகளைச் சேர்ந்தவர்கள், ஒருவர் மற்றவரை வில்லனாக்குகிறார்கள். பொங்கல் விழாவில், ஜனாதிபதியோடுகை குலுக்க, செல்ஃபி எடுக்க ஒரு பகுதி தமிழர்கள் முண்டியடிக்கிறார்கள். செல்ஃபி யுகத்தில்,சிங்கத்தின் தோட்டத்தில் சிக்கியபட்டத்தைக் கிழியாமல் எடுக்க இப்படிப்பட்ட கட்சிகளால் முடியுமா?



விமர்சனம் உண்டு,போர் உண்டு, போர்க் காலநினைவுகள் உண்டு.பொழுதுபோக்கு உண்டு.சிங்கக் கொடியும் உண்டு.தமிழ்ப் போர்க் கப்பலும் சில ஆண்டுகளுக்கு முன்பு பறக்கவிடப்பட்டது.ஈழத் தமிழ்ப் பட்டத் திருவிழாக்களில், பருவக்காற்றில் பறக்க விடப்படுவது, தனியபொழுது போக்குப் பட்டங்கள் மட்டுமல்ல. ஈழத் தமிழர்களின் கூட்டு உளவியலுக்குள் பதுங்கியிருக்கும் அரசியல் உணர்வுகளை வெளிப்படுத்தும் பட்டங்களும் உண்டு.

அந்த அரசியல் விருப்பங்களை கலையாக, விளையாட்டாக, போட்டியாகதமிழ் மக்கள் வெளிப்படுத்துகிறார்கள். பாடசாலைப் பிள்ளைகள் தங்களுடைய வினோத உடைப் போட்டிகளின் போதும் அல்லது விளையாட்டுப் போட்டிகளில் இல்லங்களைச் சோடிக்கும்போதும் அங்கேயும் சிலசமயம் அரசியல் வாடைவீசும். அதன் பின் அங்கே புலனாய்வுத்துறை வந்து நிற்கும். கடைசியாக நடந்த சூரன் போரிலும் அந்தஅரசியல் இருந்தது.

கடைசியாக நடந்தபட்டத் திருவிழாவுக்கு சிலநாட்களுக்கு முன்பே ஒரு புலிமுகப் பட்டம் சமூகவலைத் தளங்களில் வலம் வந்தது. ஆனால் அதுவல்வெட்டித்துறையில் பறக்கவிடப்படவில்லை. பதிலாக மண்டான் வெளியில் அன்றுபகல் பறக்கவிடப்பட்டது என்றும் பின்னர் அதைப் படைத்தரப்பு தடுத்து கீழிறக்கிவிட்டதாகவும் தகவல் உண்டு.பறக்க முடியாத பட்டங்களும் உண்டு?

தமிழ் மக்கள் இவ்வாறுவிளையாட்டுக்களிலும், விழாக்களிலும்,போட்டிகளிலும், கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தங்களுடைய அரசியல் பெருவிருப்பத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ வெளிப்படுத்தி வருகிறார்கள்.

ஒருபுறம் ஜனாதிபதி தமிழ்ப் பகுதிகளுக்கு வருகைதரும்போது அவரோடு செல்பி எடுக்க அவரைப் பார்க்க, கைகுலுக்க ஒரு தொகுதி தமிழர்கள் வருகிறார்கள். அல்லது அழைத்துவரப்படுகிறார்கள். அவர்கள் ஜனாதிபதியை நெருங்க முண்டியடிக்கும் காட்சிகளை அரசாங்கத்தின் டிஜிட்டல் புரோமோஷன் அணியும் சில யுடியூப்பர்களும் "வைரல்" ஆக்குகிறார்கள். இதே மக்கள் மத்தியில் இருந்துதான் பட்டத் திருவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், சூரன் போர் போன்ற விழாக்களில் அரசியல் விருப்பம் வெளிப்படக் காண்கிறோம்.



சிறுவயதில் பழைய பாடத்திட்டங்களில் படித்த ஒருபாடல். பண்டிதர் சச்சிதானந்தம் எழுதியது. 50 வயது கடந்த அநேகருக்கு ஞாபகத்தில் இருக்கும். "சிங்கத்தின் தோட்டத்தில் சிக்கி விட்டது எங்கள் பட்டம். தொங்கும் அதை எடுத்து வர தூரப்போகும் புறாவாரே..." என்ற தொடரும் ஒருபாடல் அது.

சின்னப் பிள்ளைகள் பட்டம் ஏற்றி விளையாடும் போதுகாற்றில் அசைந்த பட்டம் தவறுதலாக சிங்கம் படுத்திருந்த தோட்டத்தின் மரக்கிளையில் சிக்கிவிடும். அதை எடுப்பதற்கு சின்னப் பிள்ளைகள் ஒவ்வொரு மிருகத்திடமும் உதவி கேட்பார்கள். முடிவில் ஒட்டகச்சிவிங்கி மட்டும் உதவிக்குவரும். அதன் நீண்ட கழுத்தில் ஏறிபட்டத்தை மீட்பார்கள்.

அது குழந்தைப் பிள்ளைகள் வானில் ஏற்றிய பட்டம்.ஆனால் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலமாக தமிழ் மக்கள் அரசியல் வானில் ஏற்றியபட்டங்கள் யாவும் வாள் ஏந்திய சிங்கத்தின் தோட்டத்தில்தான் வீழ்ந்துவிட்டன. அகிம்சைப் போராட்டத்திலும் ஆயுதப் போராட்டத்திலும் ஏற்றிய எல்லாப் பட்டங்களும் அப்படித்தான். வாள் ஏந்திய சிங்கத்தின் தோட்டத்தில் வீழ்ந்துவிட்டன.

2009க்குப் பின்னரானகடந்த 16 ஆண்டுகளாகசிங்கத்தின் தோட்டத்தில் சிக்கிய தமது பட்டத்தை மீட்க தமிழ் மக்களால் முடியவில்லை. ஒரு புறம் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னொரு புறம், தமிழ்க் கட்சிகள் வாலறுந்த பட்டங்களை ஏற்றிக் கொண்டிருக்கின்றன. தமிழ்மக்கள் அரசியல் நீக்கம் செய்யப்படுகிறார்கள். ஒருபகுதி தமிழர்கள் அரசியலில் சலிப்பும் வெறுப்புமடைந்து வருகிறார்கள். புதியஆண்டின் தொடக்கமே ஆபாசஅரசியல் காணொளியாக இருந்தது.

உள்ளதில் பெரிய தமிழ்க் கடைசிக்குள் காணப்படும் இரண்டு அணிகளைச் சேர்ந்தவர்கள், ஒருவர் மற்றவரை வில்லனாக்குகிறார்கள். பொங்கல் விழாவில், ஜனாதிபதியோடு கைகுலுக்க,செல்ஃபி எடுக்க ஒருபகுதி தமிழர்கள் முண்டியடிக்கிறார்கள்.செல்ஃபி யுகத்தில், சிங்கத்தின் தோட்டத்தில் சிக்கிய பட்டத்தைக் கிழியாமல் எடுக்க இப்படிப்பட்ட கட்சிகளால் முடியுமா? ஒட்டகச் சிவிங்கி எங்கிருந்து வரும்? அல்லது ஒட்டகச்சிவிங்கியாய் உயரப்போவது யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜங்கரன் விக்கினேஸ்வரா

# ஈரானில் ஆட்சி மாற்றம்? அமெரிக்க இராணுவ தலையீடு: முரண்பட்ட உறவில் அரபுலகு!

ஹோர்முஸ் நீரிணை முதல் காஸ்பியன் கடல் வரை பரந்து விரிந்திருக்கும் ஈரானின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பரப்பில், உலக வல்லரசுகள் ஒவ்வொன்றும் தங்களுக்குச் சாதகமான ஒரு அரசை அங்கு உருவாக்க வரலாற்று ரீதியில் முனைந்துள்ளன.

1979 இல் தொடங்கிய கொமேனியின் ஆன்மீக ஆட்சிமுறை இன்று அதன் இறுதி மூச்சுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளது. 2026-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஈரானிய மக்களின் விதியை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கு மற்றும் ஆசிய - பசிபிக் பிராந்தியத்தின் அதிகாரச் சமநிலையை அடுத்த சில தசாப்தங்களுக்கு மாற்றி எழுதப் போகும் சூழல் உருவாகியுள்ளது.

ஈரான் இஸ்லாமியக் குடியரசு என்று பெயரிடப்பட்டிருக்கும் ஈரான், இன்று அதன் 47 ஆண்டுகால குடியரசு வரலாற்றிலேயே மிக முக்கியமான ஒரு ஆட்சி கவிழும் போராட்டத்தை எதிர்கொண்டுள்ளது. ஈரானில் தற்போது நிலவி வரும் கடுமையான உள்நாட்டுக் கலவரங்களை ஒடுக்க, அந்நாட்டு அரசு இணைய சேவையை முழுமையாக முடக்கியுள்ளது.

ஈரானில் இராணுவ ஆட்சி, அமெரிக்க பொம்மையாட்சி, ஜனநாயக ஆட்சி ஆகிய மூன்று முடிவுகளில் எதுவும் சாத்தியமாகலாம் என்ற நிலையில் தான் உள்ளது. ஈரானில் பொருளாதாரச் சரிவு மற்றும் உணவுப் பொருட்களின் விண்ணைத் தொடும் விலை உயர்வுக்கு எதிராக 2025 டிசம்பர் 28 அன்று தொடங்கிய மக்கள் கொந்தளிப்பு, 'ஜனவரி புரட்சி' அல்லது '14 நாள் எழுச்சி' என்ற பெயரில் ஒரு முழுமையான அரசியல் மாற்றத்திற்கான போராட்டமாக தற்போது பரிணமித்திருக்கிறது.

**'14 நாள் எழுச்சி' தொடருமா ?**

190க்கும் மேற்பட்ட நகரங்களில் பரவியுள்ள இந்தப் போராட்டங்கள், வெறும் ஆர்ப்பாட்டங்கள் மட்டுமல்ல என்பதும், அவை 1979 இல் உருவான விலாயதுல் ஃபகீஹ் ஆன்மீக அதிகார அமைப்பை வேரோடு பிடுங்கி எறியும் தருணம் என்றும் மத்திய கிழக்கு ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

தற்போது ஈரானின் 31 மாகாணங்களும் போராட்டக் களமாக மாறியுள்ளன. மனித உரிமைகள் அமைப்புக்களின் தரவுகளின்படி, கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 3500 இற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 10,000 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இருப்பினும், நாட்டின் முக்கிய மருத்துவமனைகளிலிருந்து கசிந்துள்ள தகவல்கள் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 4000 ஐத் தாண்டியிருக்கக் கூடும் என்று தெரிவித்துள்ளன.



ஆனாலும் ஆட்சியைத் தக்கவைக்க ஈரான் அரசாங்கம் தற்போது ஒரு வீதம் என்ற மிகக் குறைந்த அளவிலான இணையத் தொடர்பை மட்டுமே அனுமதித்து, ஒட்டுமொத்த நாட்டையும் ஒரு இணைய இருட்டறையில் வைத்துள்ளது. ஆனால் இந்த அடக்கு முறையையும் மீறி பாதுகாப்புப் படையினரிடையே ஏற்பட்டுள்ள சோர்வும், சில இடங்களில் வீரர்கள் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த மறுத்து பின்வாங்குவதும், ஆட்சியின் அஸ்திவாரம் வெகுவாகப் பலவீனமடைந்துள்ளதைக் காட்டுகிறது.

இந்த 2026ஆம் ஆண்டு மக்கள் புரட்சி வெற்றி பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமென அரசியல் ஆய்வாளர்கள் கருதுவதற்கான மிக முக்கிய காரணமாக அதன் புவிசார் அரசியல் சூழல் பார்க்கப்படுகிறது.

**2025 ஜூனில் இஸ்ரேலின் 12 நாள் போர்:**

கடந்த 2025 ஜூன் மாதம் நடந்த 12 நாள் போரின் போது, இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல்களால் ஈரானின் அணுசக்தி தளங்கள் மற்றும் ஏவுகணை தற்காப்பு அமைப்புகள் பெருமளவில் சிதைக்கப்பட்டன. இது ஈரானின் பிராந்திய செல்வாக்கை பாரிய அளவில் முடக்கியுள்ளது. குறிப்பாக, ஈரானின் நீண்டகாலத் தூண்களாக இருந்த ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் அமைப்புக்கள் மிகவுமே பலவீனமடைந்துள்ள நிலையில், சிரியாவிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதால், ஈரானின் எதிர்ப்பின் வீரியம் மிகவுமே மட்டுப்படுத்தப் பட்டுள்ளதென்பதே யதார்த்த நிலையாகும்.

பொருளாதார ரீதியாகப் பார்க்கும் போது ஈரான் இன்று மிகவும் பலவீனமான ஒரு நிலையிலேயே காணப்படுகிறது. 2026 ஜனவரி தொடக்கத்தில், ஈரானின் முக்கிய பொருளாதாரக் கூட்டணியான வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ அமெரிக்காவால் சிறைபிடிக்கப்பட்டதும், ஈரானின் நிழல் கப்பற்படையின் எண்ணெய் விநியோக நடவடிக்கைகள் முடக்கப்பட்டதும் நாட்டின் வருமானத்தைக் கிட்டத்தட்ட அடியோடு நிறுத்தியுள்ளதெனலாம்.



1979 இல் தொடங்கிய கொமேனியின் ஆன்மீக ஆட்சிமுறை இன்று அதன் இறுதி மூச்சுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளது. 2026-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஈரானிய மக்களின் விதியை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கு மற்றும் ஆசிய - பசிபிக் பிராந்தியத்தின் அதிகாரச் சமநிலையை அடுத்த சில தசாப்தங்களுக்கு மாற்றி எழுதப் போகும் சூழல் உருவாகியுள்ளது.




ஈரானிய ரியால் நாணயம் படுபயங்கரமான வீழ்ச்சியை சந்தித்துள்ளது. வங்கிப் பணப் பரிமாற்றங்களும் முடங்கியுள்ளதால், நடுத்தர வர்க்கம் முதல் பெரிய வணிகர்கள் வரை அனைவரும் இன்று வீதிக்கு வந்துள்ளனர். வரலாற்றில் ஓர் ஆட்சி கவிழ்வதற்குத் தேவையான அனைத்துக் காரணிகளும் ஒரே புள்ளியில் இணைந்துள்ள ஒரு நிலையாகவே இந்நிலை காணப்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**ட்ரம்ப் கடுமையான எச்சரிக்கை:**

மறுபக்கத்தில் டொனால்ட் ட்ரம்ப்பின் கடுமையான எச்சரிக்கைகள் ஈரானிய இராணுவத்திற்கு ஒரு பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளன. போராட்டக்காரர்கள் மீது கடும் வன்முறையைப் பிரயோகித்தால், ஈரானின் முக்கிய மையங்கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

அதே வேளையில், ஈரானின் ஆன்மீக தலைவர் அயதுல்லா அலி கொமேனி நிலைமை மோசமானால் ரஷ்யாவிற்குத் தப்பிச் செல்ல ஒரு ரகசியத் திட்டத்தைத் தயாரித்துள்ளதாகவும் சில உளவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ரஷ்யாவும தற்போது தனது சொந்தப் பிரச்னைகளில் உள்ளது. ஈரானுக்கு இந்தத் தடவை வெளிநாடுகளிலிருந்து எந்தப் பெரிய உதவியும் கிடைப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு.

ஈரானின் தற்போதைய நிலையானது இன்றோ நாளையோ வெடிக்கக் காத்திருக்கும் ஓர் எரிமலையை ஒத்திருக்கிறது. பழைய மதவாத ஆட்சிக்கு இனி எதிர்காலம் இல்லை, எதிர் காலத்தில் ஒரு புதிய ஈரானிய அரசு உருவாக வாய்ப்பு உள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சு, ஈரானியப் போராட்டக்காரர்களின் அடுத்தகட்ட நகர்வுகள், ஒட்டுமொத்த மத்திய கிழக்கின் புவிசார் அரசியல் வரைபடத்தையே மாற்றியமைக்கப் போகின்றனவா என்ற கேள்வி இப்போது சர்வதேச அரசியல் வட்டாரத்தில் முக்கியமான கேள்வியாக மாறியுள்ளது.

**புதிய உலக ஒழுங்கின் மாற்றம்?**

ஈரான் என்பது வெறும் உள்நாட்டு அரசியல் கொந்தளிப்பால் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு போராட்டக் களம் மாத்திரமல்ல, அது இருபத்தியோராம் நூற்றாண்டின் புதிய உலக ஒழுங்கைத் தீர்மானிக்கப் போகும் ஒரு புவிசார் அரசியல் காய்நகர்த்தல் இடம்பெறும் ஒரு சதுரங்கப் பலகை என்று சொல்வதே பொருத்தம்.

ஒருபுறம், ஈரானின் எதிர்ப்பின் அச்சு முழுமையாக சிதைந்து போயிருப்பது இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் பிராந்திய ஆதிக்கத்திற்கு வழிவகுத்துள்ள நிலையில், மறுபுறம் சீனாவின் எரிசக்தி பாதுகாப்பும் ரஷ்யாவின் மத்திய ஆசிய செல்வாக்கும் ஈரானின் நிலைத்தன்மையிலேயே தொங்கிக் கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**ஈரானும் அரபு நாடுகளும்:**

ஈரானை தாக்குவதற்காக அமெரிக்காவுக்கும், இஸ்ரேலுக்கும் உங்களது இராணுவ தளங்களை வழங்குவதனை தவிர்க்குமாறு ஈரான் தனது அருகில் உள்ள அரபு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.

ஈரானின் இந்த வேண்டுகோளினை அரபு ஐக்கிய எமிரேட்சை தவிர ஏனைய அனைத்து அரபு நாடுகளும் ஏற்றுக்கொண்டதுடன், ஈரானை தாக்குவதற்கு தங்களது நாட்டு தளங்களை பாவிக்கக் கூடாதென்று அமெரிக்காவினை வேண்டியதாக அறிய முடிகின்றது.

ஆனால் இது புவி அரசியல் என்பதனால், இதற்குள் ஏதாவது மறைமுக இரகசியங்கள் உள்ளதா என்பது பற்றி நாட்கள் சென்றபின்புதான் அறியமுடியும். அதாவது தங்களது தளங்களை பாவிக்ககூடாதென்று வெளிப்படையாக அறிவித்துவிட்டு மறைமுகமாக அமெரிக்காவுக்கு ஏதாவது ஆதரவு வழங்கப்படுமா என்பது பற்றி இப்போது கூற முடியாது.

**சவுதி அரேபியாவின் முடிவு:**

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், சவுதி அரேபியா மிக முக்கியமான ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா ராணுவத் தாக்குதல் நடத்த தனது வான்பரப்பையோ அல்லது தனது நாட்டில் உள்ள ராணுவத் தளங்களையோ அமெரிக்கா பயன்படுத்த சவுதி அரேபியா அனுமதி அளிக்காது என்று அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.




அமைதி முயற்சிகளை மேற்கொள்ளவும், இந்த பிராந்தியத்தில் போர்ச் சூழல் உருவாவதைத் தவிர்க்கவும், பதற்றத்தைக் குறைக்கவும் சவுதி அரேபியா இந்த முடிவை எடுத்துள்ளது என்று கூறியுள்ளது.

நீண்ட காலமாக ஈரானுடன் நல்உறவு இல்லாமல் இருக்கும் நிலையில், ஈரான் மீதான எந்தவொரு ராணுவ நடவடிக்கையிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள சவுதி விரும்பவில்லை. தூதரக ரீதியான பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் சவுதி அரசு உறுதியாக உள்ளது.

மத்திய கிழக்கில் தனது நாட்டின் பாதுகாப்பையும் நிலைத்தன்மையையும் உறுதி செய்ய சவுதி இந்தத் தீர்க்கமான முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

சவுதி அரேபியா, ஓமன் மற்றும் கத்தார் ஆகிய நாடுகள் ஈரான் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்று வெள்ளை மாளிகையை ரகசியமாக வலியுறுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை முக்கிய அரபு ஊடகமான **'Al Arabiya News'** சவுதி அரேபியா தனது இறையாண்மையைப் பாதுகாக்கவும், பிராந்திய அமைதிக்காகவும் அமெரிக்காவிற்கு வான்பரப்பு அனுமதியை மறுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கப் படைத் தளங்களின் பயன்பாடு குறித்து நிலவும் கட்டுப்பாடுகளை இந்தச் செய்திகள் விளக்குகின்றன. மேலும் ஈரானிய புரட்சி படைகளின் தளபதி, எதிரிகள் செய்யும் கணக்குகளில் எந்த தவறுக்கும் தீர்மானமாக பதிலளிக்க நமது படைகள் தயாராக உள்ளன. ட்ரம்ப் மற்றும் நெதன்யாகு நமது இளைஞர்கள் மற்றும் நமது பாதுகாப்பு படைகளின் கொலையாளிகள் மற்றும் அவர்களின் குற்றங்களுக்கு நாம் சரியான நேரத்தில் பதிலளிப்போம் என்றும் சூளுரைத்துள்ளார். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகள்...

எடுக்குமாறும், ஜனாதிபதியின் யாழ்ப்பாணத் திற்கான விஜயத்தின்போது, குறித்த அமைப்பினர் கோரிக்கை விடுத்தனர்.

குறிப்பாக, டித்வா சூறாவளியால் அதிகம் பாதிக்கப் பட்டுள்ள மலையக பெருந்தோட்டங்களை சேர்ந்த மக்களுக்கு முன்னுரிமை வழங்கி, காணிகள் பகிர்ந்த ளிக்கப்படும் என மானிடம் - பூமிதான இயக்கம் ஜனாதிபதிக்கு வழங்கிய கோரிக்கை கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ)

## பொங்குதமிழ்...

அங்கிகரிக்கப்படவேண்டும் என பிரகடனப்ப டுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## இந்த...

வேண்டும் என ஜனாதிபதியிடம் தான் வலியுறுத்தி யுள்ளதாக நயினாதீவு நாக தீப விகாராதிபதி தெரிவித் தார்.

நயினாதீவுக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற் கொண்ட ஜனாதிபதி நாக தீப விகாராதிபதியை சந்தி த்து, கலந்துரையாடியமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தையிட்டி விகாரை பிரச்னை தீர்க்கப்படவேண்டும். அந்த விகாரையை சுற்றியுள்ள தனியார் காணிகளை அதன் உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்கவேண் டும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளை அவர்களிடமே கையளிக்கவேண்டும்.

காணி கையளிப்புக்கள் இந்த அரசாங்கத்தின் காலத் திலேயே சாத்தியமாகும். எனவே உங்கள் காலத்தில் காணிகளை கையளியுங்கள் என ஜனாதிபதியிடம் கூறினேன்-என்றார். (அ

## அமெரிக்க...

தற்போது பணியாற்றி வருகிறார்.

அந்த பொறுப்பில், தெற்கு மற்றும் மத்திய ஆசியா முழுவதும், அதில் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, கசகஸ்தான், கிர்கிஸ்தான், மாலை தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் உட்பட, நிர்வாகத்தின் கொள்கை முன்னுரி மைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதையும் பணியகத்தை மேற்பார்வை செய்வதையும் அவர் மேற் கொண்டு வருகிறார்.

மையரின் சமீபத்திய பணியிடங்களில், நோர்வேயி லுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இடைக்கால பொறுப் பாளராக பணியாற்றியதும், மேலும் நேட்டோவின் புதிய உறுப்பு நாடுகளில் ஒன்றான வட மாசிடோனி யாவின் ஸ்கோப்ஜே நகரிலுள்ள அமெரிக்கத் தூதரகத் தில் இடைக்கால பொறுப்பாளராகவும் துணை தூதராக பணியாற்றியதும் அடங்கும்.

இந்த நியமனம், 2022 ஆம் ஆண்டிலிருந்து பதவியில் இருந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜூலி சங், கிட்டத்தட்ட நான்கு ஆண்டு கால பணிக்காலத்தை நேற்று முன் தினம் நிறைவு செய்து பதவி விலகியதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. (அ)

## 88,89 களில்...

அரசியல் பரம்பரை என்பதை புரிந்துகொண்டால் சரி."

-இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சொந்த ஊரான அநுராதபுரம், தம்புத்தேகமவில் பொதுஜன பெரமுன கட்சி இன்று நடத்திய அரசியல் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே நாமல் இவ்வாறு கூறினார்.

பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து சென்றவர் களை மீண்டும் கட்சிக்கு வருமாறு அழைப்பு விடுக்கின் றேன். பேச்சு நடத்துவதற்கு நாம் தயாராகவே இருக்கின்றேன் எனவும் நாமல் அழைப்பு விடுத்தார்.

அடக்குமுறைமூலம் தமது அரசியல் பயணத்தை தடுக்க முடியாது எனவும் சூளுரைத்துள்ளார் நாமல். (அ)

## வேலையின்மை...

விட 0.5 வீதம் அதிகம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டின் மூன்றாம் காலாண் டில் பெண்களின் வேலையின்மை ஆண்கள் வேலை யின்மையை விட இரண்டு மடங்கு அதிகம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, பெண்களின் வேலையின்மை விகிதம் 19.2 வீதமாக காணப்பட்டதாகவும் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள் ளது. (அ)

# மனித பாவனைக்கு உதவாத 2,447 ரின் மீன்கள் அழிப்பு

கொழும்பு, ஜன. 18

மனித பாவனைக்கு உதவாத 2,447 ரின் மீன்களை அழிப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அவிசாவளை நீதிவான் நீதிமன் றத்தின் உத்தரவுக்கு அமைய, நீதி மன்றத்தின் கண்காணிப்பின் கீழ் இவை அழிக்கப்பட்டன.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 05 ஆம் திகதி கொஸ்கம பிரதேசத் தில் நுகர்வோர் விவகார அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே, தரமற்ற இந்த ரின் மீன் தொகை கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

நுகர்வோரை ஏமாற்றும் வகை யில் லேபிள்கள் இன்றியோ அல்லது லேபிள்கள் அகற்றப்பட்டோ ரின் மீன்களை களஞ்சியப்படுத்தியமை, தரச் சான்றிதழ் இல்லாமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படை யில் இந்த சுற்றிவளைப்பு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சம்பந்தப்பட்ட வர்த்தகர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து அவருக்கு 20,000 ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (எ)

# பெரும்பாலான பகுதிகளில் வறட்சியான வானிலை

கொழும்பு, ஜன. 18

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வறட்சியான வானிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 5. 30 மணிக்கு வெளியிடப்பட்ட சமீபத்திய வானிலை முன்னறிவிப்பில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகாலை வேளையில் நுவரெலியா மாவட்டத்தின் சில இடங்களில் துகள் உறைபனி ஏற்படக்கூடிய சாத்தி யம் காணப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத் தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட் டுள்ளது.(எ)

# பூஸா சிறைச்சாலை அமைதியின்மை கட்டுப்பாட்டுக்குள்

கண்டி, ஜன. 18

பூஸா சிறைச்சாலையில் ஏற்பட்டிருந்த அமைதி யின்மை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள் ளது என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைதிகள் சிலர் நேற்று முன்தினம் பூஸா சிறைச் சாலையின் டி பிரிவின் கூரை மீது ஏறி, சிறைச்சாலை நிர்வாகத்துக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது அவர்கள் வன்முறையாக நடந்து கொண்டதுடன், சொத்துக்களுக்கும் சேதம் விளை வித்ததாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் அங்கு ஏற்பட்ட அமைதியின்மை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. (எ)

## இரணைமடு...

இரணைமடு கனகாம் பிகை அம்பாள் ஆலயத்தில் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கனகாம்பிகை அம்பாள் ஆலய முன்றலில் இரணை மடு கமக்காரர் அமைப்புக்களின் ஏற்பாட்டில் வருடம் தோறும் நடைபெறும் பொங்கல் நிகழ்வு, இரணைமடு நீர்த்தேக்கத்தின் 106ஆவது ஆண்டு பொங்கல் நிகழ் வாக நடைபெற்றது.

குறித்த பொங்கல் நிகழ்வை பொலிஸ்மா அதிபரும் அவரது மனைவியும் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து, பொலிஸ் சேவா வனிதா இயக்கத்தின் ஏற்பாட்டில் டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கான நிவாரணப் பொதிகளும் வழங் கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி - முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், யாழ்.பல்கலைக் கழக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் நா.பிரதீப ராஜா, வடமாகாண நீர்ப்பாசப் பணிப்பாளர், கண்டா வளை பிரதேச செயலாளர், கரைச்சி பிரதேச செயலா ளர், உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ-05)

## வடக்கில்...

வெப்பநிலை அசாதாரணமாகக் குறைவாக, அதா வது வழக்கத்தைவிட அதிக குளிராக காணப்படுவதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித் துள்ளார்.

இந்த குளிர்ந்த கடல் நீர் வடக்கிலிருந்து கிழக்கு கரையோரமாக இலங்கையின் தெற்குப் பகுதிகளுக்கு கடத்தப்படுவதாகவும், அதன் காரணமாக தெற்கு பகுதியில் காணப்படும் சற்றே அதிகமான கடல் மேற்ப ரப்பு வெப்பநிலை குறைக்கப்படுவதாகவும் அவர் விளக்கியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் பல நாடுகளின் வானிலை மற்றும் காலநிலைப் பாங்குகளைத் தீர்மானிப்பதில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை மிக முக்கியமான காரணியாக விளங்குகிறது என்றும், அதனால் வடக்கு பிராந்தியக் கடற்பரப்பில் தற்போது காணப்படும் இந்த அசாதாரண குளிர் நிலை குறித்து சிறப்பு கவனம் செலு த்த வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத் தினார். (அ)

## கல்வி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும் எனக் கூறுகிறார், மறுபுறம் அரசாங்கத் தரப்பிலேயே அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் தரம் 6 போன்ற வகுப்புகளுக்கான பாடத்திட்ட மாற்றங்கள் மற்றும் மொடியூல் முறைகளை அகற்றுவது தொடர்பாக முரண்பாடான தகவல்கள் நிலவுகின்றன. கல்வி என்பது அரசியல்வாதிகள் அல்லது ஒரு குறிப்பி ட்ட குழுவினரின் தனிப்பட்ட விருப்பங்களுக்கு ஏற்ப மாற்றப்படக்கூடாது. மாறாக, எதிர்கால உலகிற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் சர்வதேச போட்டித்தன்மை கொண்ட மாணவர்களை உருவாக் கும் வகையில் அமையவேண்டும். அரசியல் தேவைக ளுக்காகவும் வடக்கிலுள்ள மக்களின் வாக்குகளை இலக்கு வைத்தும் மத உணர்வுகளைப் பயன்படுத்துவது தவறானது.

தமிழ் மக்கள் வடக்கிலிருந்து கதிர்காமத்திற்குப் பாதயாத்திரை செல்வது போன்ற மத ரீதியான பக்தியை, அரசியல் நோக்கங்களுடன் கொச்சைப்ப டுத்தக்கூடாது. ஜனாதிபதி ஹெலிகொப்டரில் பயணம் செய்வது அல்லது உடற்பயிற்சி செய்வது போன்ற விடயங்களை நான் விமர்சிக்கவில்லை. ஒரு நாட்டின் தலைவருக்கு நேரத்தை மிச்சப்படுத்த ஹெலிகொப்டர் பயணம் அவசியமாகும். ஆனால், கடந்த காலத்தில் ஹெலிகொப்டர் பயணங்களை விமர்சித்தவர்கள் இப்போது அதையே செய்வது முரணாக உள்ளது.

நாட்டின் பொருளாதாரக் கையாள்கை மிகவும் பலவீனமாக இருக்கிறது. அமைச்சர்களுக்குத் தேவை யான திறன் இல்லை. தற்போது டொலர் ஒன்றின் விற்பனை விலை 311 - 312 ரூபாய் மட்டத்தில் உள்ளது. எவ்வாறாயினும், அரசாங்கத்தின் முறையற்ற நிதி மேலாண்மையால் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் டொலரின் விலை 325 - 330 ரூபாய் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது. அரசாங்கம் தனது பொறுப்புகளைச் சரியாக உணராமல், நாட்டை ஒரு தவறான திசையி லேயே கொண்டு செல்கிறது-என்றார். (அ)

## ரணில்...

இந்நிலையில் இரு தரப்பு இணைவு தொடர்பில் க ருத்து வெளியிட்ட வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஒன்றிணைவது தொடர்பில் சாதகமான சூழ்நிலையே உள்ளது. எனவே, தடைகள் இருக்கும் என கருத வேண் டியதில்லை.

எதிர்காலத்தில் சங்கமம் நடக்கும் என உறுதியாக நம்புகின்றோம். விரைவில் இது சாத்தியப்படும்.

ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி யினருக்கு பதவி என்பது முக்கியம் அல்ல. எமக்கு நாடு தான் முக்கியம். நாடு சரியான திசையில் செல்ல வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். ஆனால் இந்த ஆட்சியின்கீழ் அது நடப்பதாக தெரியவில்லை." - என பாலிய ரங்கே பண்டார மேலும் கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu

# மக்கள் நலனுக்காகவே திறைசேரி கதவுகளை திறந்தார் ஜனாதிபதி!

## அமைச்சர் சமந்த வித்தியாரத்ன




கொழும்பு, ஜன. 18

திறைசேரியின் கதவு திறக்கப்பட்டது மக்களின் நலனுக்காக. ஆனால் கடந்த காலத்தில் திறைசேரியின் கதவை திறந்து முன்னர் இருந்தவர்கள் பகிர்ந்து கொண்டனர். ஆனால் இம்முறை திறைசேரியின் கதவு திறக்கப்பட்டு டித்வா சூறாவளியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன என பெருந்தோட்ட மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

வலப்பனை பகுதியில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்க கதவு திறக்கப்பட்டது. விவசாயிகளுக்கு பணம் வழங்கப்பட்டது. எமது மக்களுக்கு வழங்கக்கூடிய அனைத்து நிவாரணங்களையும் நாம் வழங்கியுள்ளோம்.

இதனை வழங்குவதற்கு முன்னின்று உழைத்த அரச உத்தியோகத்தர்களை நாங்கள் கௌரவப்படுத்துகிறோம்.

நாட்டில் ஏற்பட்ட டித்வா சூறாவளியின் பின்னர் பாரிய சக்திகளை நாம் வெளியில் கொண்டு வந்துள்ளோம் .

இந்த அனர்த்தத்தை ஆசீர்வாதமாக எடுத்துக்கொள்ள வேண்டும் - என்றார். (அ)

# நுவரெலியாவில் உறைபனி பொழிவு



கொழும்பு, ஜன. 18

நுவரெலியாவில் நேற்று சில இடங்களில் அதிகாலை வேளை துகள் உறைபனி பொழிவுடன் கூடிய காலநிலை ஏற்பட்டது. இதில் அதிகமாக பல்வேறு இடங்களில் புல்வெளிகளில் பனி துகள்கள் படிந்து படர்ந்து காணப்பட்டன.

நுவரெலியாவில் ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதத்தில் பனி பொழிவு காணப்படும் நிலையில், இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நுவரெலியா நகரிலுள்ள பூங்கா, தேயிலைத் தோட்டங்களில் பனி பொழிந்து காணப்படுகின்றன.

இதனால் தாவரவியல் பூங்கா புல்வெளிகள் ,கிரகரி வாவிக் கரையோரம், பூந்தோட்டங்கள், தேயிலை மரங்கள், அலங்கார மரங்கள் உள்ளிட்ட நீண்ட மரக்கறி தோட்டங்கள் உள்ளிட்ட பகுதிகளில் மீது படர்ந்த ஐஸ் துகள்களின் தாக்கம் அதிகமாகவே இருந்தது. இதனால் சுற்றுச்சூழல் முழுவதும் இரு கண்களையும் வசீகரப்படுத்தும் அளவில் வெள்ளை நிறத்தில் காண முடிந்தது.

அங்கு நிலவும் மாறுபட்ட காலநிலை சுற்றுலா பயணிகளை அதிகம் கவர்ந்துள்ளதால் அவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(அ)

# முல்லைத்தீவு தேறாங்கண்டலில் யானை தாக்கி இளைஞர் மரணம்!

முல்லைத்தீவு, ஜன. 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேறாங்கண்டல் பகுதியில் நேற்று அதிகாலை வயல் காவலில் ஈடுபட்டிருந்த 19 வயது இளைஞர் ஒருவர் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தேறாங்கண்டல் பகுதியை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

காட்டு யானை அச்சுறுத்தலால் தொடர்ச்சியாக உயிரிழப்புகள் ஏற்படுவதாகவும், நிரந்தர தீர்வு ஒன்றை பெற்றுத் தரவேண்டுமெனவும் பிரதேச மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# அசோக ரன்வல எம்.பியின் மனைவி விபத்தில் காயம்!

கொழும்பு, ஜன. 18

முன்னாள் சபாநாயகர் அசோக சபுமல் ரன்வலவின் மனைவி டாக்டர் இந்திராணி ரன்வல செலுத்திச் சென்ற கார் நேற்று அதிகாலை மற்றொரு காருடன் மோதியதில் அவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என பியகம பொலிஸார் தெரிவித்தனர்.

களனி- பியகம வீதியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வலவின் வீட்டுக்கு முன்னால் இந்த விபத்து நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்கு காரணமான காரின் சாரதி, களுத்துறை வடக்கு, ஜாவத்தையைச் சேர்ந்த 30 வயதுடையவர். விபத்து தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் மது அருந்தியிருப்பது பரிசோதனையின் போது உறுதி செய்யப்பட்டது என்று உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேக நபர் மஹர நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பியகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)



# கட்டைக்காடு வீதி புனரமைப்பு

வடமராட்சி, ஜன. 18

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு மேற்கு குடியிருப்பு வீதி பருத்தித்துறை பிரதேச சபையால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

நீண்ட காலம் புனரமைப்பு செய்யப்படாமல் காணப்பட்ட கட்டைக்காடு மேற்கு குடியிருப்பு வீதியால் மக்கள் பெரும் சிரமங்களை சந்தித்து வந்தனர்.

கடந்த காலங்களில் மக்கள் இந்த குடியிருப்பு வீதியை புனரமைப்பு செய்து தருமாறு பலமுறை கோரிக்கை விடுத்தும் அது நிறைவேற்றப்படவில்லை.

தற்போது பருத்தித்துறை பிரதேச சபையால் 420 மீற்றர் நீளமான குறித்த வீதி 1,483,520.00 ரூபாய் செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு நீண்ட காலமாக நிலவி வந்த மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ-02)

# எம்.ஜி.ஆர். பிறந்த தினம் யாழில்!

யாழ்ப்பாணம், ஜன. 18

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 109ஆவது பிறந்த தினம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது.

யாழ். எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தின் ஏற்பாட்டில், கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.இராமச்சந்திரனின் சிலைக்கு முன்பாக நிகழ்வு இடம்பெற்றது.

எம்.ஜி.இராமச்சந்திரனின் சிலைக்கு கல்வியங்காடு வர்த்தக சங்கத் தலைவர் அ.கேதீஸ் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது யாழ். எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தினரால் எம்.ஜி.இராமச்சந்திரன் மற்றும் யாழ் எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கத்துக்கு நெய் விளக்குகள் ஏற்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

எம்.ஜி.இராமச்சந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமான விளங்கிய யாழ். எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கம் கல்வியங்காடு பகுதியில் தனது சொந்த நிதியில் அமைத்த எம்.ஜி.ஆர் சிலைக்கு முன்பாக ஆண்டு தோறும் எம்.ஜி.ஆரின் நினைவு நிகழ்வுகளை செய்து வந்த நிலையில் அவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் இயற்கை எய்தினார். அவரின் மறைவுக்கு பின்னர் அவரின் குடும்பத்தினர் குறித்த நிகழ்வுகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# ஜிந்துப்பிட்டியில் துப்பாக்கிச்சூடு: பாதாள குழு மோதலே காரணம்

கொழும்பு, ஜன. 18

கொழும்பு, ஜிந்துப்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் இரு பாதாள உலகக் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலின் விளைவு என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ். யூ. வுட்லர் தெரிவித்தார்.

இதற்கமைய, இந்தச் சம்பவம் தொடர்பில் 3 பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

சம்பவத்தில் 4 வயது சிறுவனும் 3 வயது சிறுமியும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்ததுடன் அவர்கள் சிகிச்சைக்காக கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மருத்துவக் குழுவினர் சிறுவர்களுக்கு தேவையான சிகிச்சைகளை அளித்து வருவதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளர் கூறினார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த கொழும்பு 13 பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபர், கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். ஜிந்துப்பிட்டி 125 வத்தை பகுதி யிலேயே இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது. ஓட்டோவில் வந்த குழுவினரே இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# 13.9 வீத தாய்மார்களுக்கு கர்ப்ப கால நீரிழிவு நோய்

கொழும்பு, ஜன. 18

இலங்கையில் சுமார் 13.9 வீத தாய்மார்களுக்கு கர் ப்ப காலத்தின் போது நீரிழிவு நோய் வருவதாக இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவரும் நீரிழிவு மற்றும் நாளமில்லா சுரப்பியியல் ஆலோசகருமான வைத்தியர் மணில்கா சுமனதிலக தெரிவித்தார்.

கர்ப்பகால நீரிழிவு நோயானது கர்ப்பத்திற்கு முன்பு அதிக எடை அல்லது உடல் பருமனாக இருப்பது மற்றும் ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்களால் ஏற்படுகிறது என வைத்தியர் மணில்கா சுமனதிலக மேலும் கூறினார்.

கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோயை எதிர்கொள்ளும் தாய்மார்களுக்குப் பிறக்கும் குழந்தைகள், பிற்காலத்தில் நீரிழிவு உள்ளிட்ட தொற்றாத நோய்கள் உள்ளவர்களாக பிறக்கும் அபாயத்தில் உள்ளனர்.

அதிக எடை அல்லது பருமனான பெண்கள் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் மூலமும், வழக்கமான உடல் செயல்பாடுகளில் ஈடுபடுவதன் மூலமும் கர்ப்பத்திற்கு முன்பு தங்கள் அதிகப்படியான உடல் எடையை சுமார் 7 முதல் 10 வீதம் வரை குறைக்க முடிந்தால், இந்த ஆபத்தை கணிசமாகக் குறைக்க முடியும் என வைத்தியர் வலியுறுத்தியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் ஆளுமைகள் பற்றிய சிறப்புத் தொகுப்பு

18-01-2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அனுபவப் பயணம்!

இலங்கை சனசமசமஜாக் கட்சியின் ஊடாக தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தவர். இடதுசாரி இயக்கமுன்னோடிகளில் ஒருவரான என்எம் பெரேராஉடன் நெருங்கிபழகியவர்.

அவர் முதலில் கிளிநொச்சியில் தேர்தலில் நிற்கமுற்பட்டபோதுஅங்கு ஏன் செல்கிறாய் யாழ்ப்பாணத்திலேயே தேர்தலில் நிற்கலாமே என அவரது தாயார் வினவியதாகஅவர் சொன்னஞாபகம்.

அந்நாட்களில் 1950,60களில் கிளிநொச்சி அதன் சுற்றயல் பிரதேசங்கள் சமூக பொருளாதார பிரச்சனைகள் சொல்லிமாளாதவை.

சங்கரி அவர்கள் அப்பிரதேசங்களின் வளர்ச்சிக்காகதன்னைஅர்ப்பணித்திருந்தார்.

ஊராட்சி நகராட்சி என அவரது சமூகஅரசியல் பயணம் நெடியது.

கிளிநொச்சியை தனிமாவட்டம் ஆக்கியதில் அதன் சமூகபொருளாதாரகல்விவளர்ச்சியில் ஒரு பாய்ச்சல் ஏற்படுவதற்கான அத்திவாரம் அவரால் இடப்பட்டது என்றால் மிகையல்ல.

ஆசிரியராக தனது பணியைஆரம்பித்த அவர் இரத்மலானை இந்துகல்லூரியில் கல்வி கற்பித்த காலத்தில் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருஅவர்களைவரவேற்கதனது மாணவர்களை விமான நிலையத்திற்குஅழைத்துச் சென்றவர்.

கொழும்பு சாகிரா கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் இலங்கையின் பன்முகப்பாங்குடனான ஒரு ஆளுமையாகதன்னைஅவர் உருவாக்கிக் கொண்டார்.

அவரது கிளிநொச்சி வீடு காரியாலயம் எப்போதும் பூட்டப்படுவதில்லை என்று கூறுவார்.

இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பிரகாசிக்கும் பலர் சங்கரி அவர்களை நன்றியுடன் நினைவு கூருவார்கள்.

ஆனந்தபுரி என்ற பெயர் இந்த பேரவல யுத்தகாலத்திலும் கிளிநொச்சியில் அழிந்து போகவில்லை என்றால் அதற்குகாரணம் கிளிநொச்சி அதன் சுற்றயல் மக்களின் மனங்களில் அவர் இருந்தார்.

வடக்கில் சாதியம் போலவே பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வுகள் நிலவியகாலத்தில் அவர் பிரதேசங்களின் சமத்துவத்திற்காக நின்றார்.

நாடு தழுவிஅளவில் அவர் இனங்களின் சமத்துவத்திற்காக செயல்பட்டார்.

சக சமூகங்களின் இன்பதுன்பங்களில் எப்போதும் பங்குபற்றினார்.நெற்றிக்குநேரேவிடயங்களைச் சொல்லும் ஆளுமை.

இலங்கையின் சகல இனமத அரசியல் தலைவர்கள் சமயதலைவர்கள் ஊடகவியலாளர்கள் அவர்மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தனர்.

எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும் உற்சாகமான மனிதர் அவர்.

அவரது வாழ்க்கையில் சாகசங்களும் உண்டு.

1960களில் அவர் இங்கிலாந்தில் இருந்து காரில் ராமேஸ்வரம் ஊடாக இலங்கைக்கு பயணித்தவர்.

இந்திய முறையிலானஅரசியல் தீர்வை அவர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருபவர்.

தமிழக அரசியல் தலைவர்களுடனும் சிறந்த பரிச்சயத்தை வைத்திருந்தவர். கலைஞர் கருணாநிதி, குமரி அனந்தன், மபொசி போன்ற மறைந்த தலைவர்களுடனும் இந்து பத்திரிகையின் மூத்த ஆசிரியர் ராம் போன்றவர்களுடனும் உறவை பேணியவர்.

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் விவிகிரி இலங்கைக்கான இந்தியாவின் தூதுவராகவும் பணியாற்றியவர் அவரை அழைத்து தென்னிலங்கையில் தான் இளைஞராக இருந்தகாலத்திலேயே சில கலந்துரையாடல்களை நிகழ்த்தியவர்.

மறைந்த இந்திய பிரதமர்களான ஐகேகுஜரால், மன்மோகன் சிங் போன்றவர்களை சந்தித்திருக்கிறார்.

தவிர தென்னாபிரிக்காவின் டெஸ்மன் டூடு போன்றவர்களையும் சந்தித்து எமது மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை எடுத்துரைத்திருக்கிறார்.

1994 இல் சந்திரிகாஅவர்கள் பதவிக்குவந்ததன் பின்னர் 1997 இல் வடக்கில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெற்றபோதுமறைந்தசரோஜினி யோகேஸ்வரன் அவர்களையும் அழைத்துக் கொண்டு அந்த கெடுபிடியான காலத்தில் ரத்மலானை விமான நிலையத்தில் காத்திருந்தது ஞாபகத்தில்.

எந்த ஜனநாயக இடைவெளியும் இல்லாத காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியை மீளகட்டி எழுப்புவதற்கு அவர் முன் கை எடுத்தார்.

சரோஜினி, சிவபாலன், மதிமுகராசா என தனது சகாக்கள் புலிகளால் படுகொலைசெய்யப்பட்டு




செத்துவிழுந்து கொண்டிருந்தபோது தற்கொலை குண்டுதாரிகள் வெடிமருந்துவீச்சம் துப்பாக்கிச் சன்னங்கள் பறக்கும் தெருக்களில் இரங்கல் கூட்டங்களை நடத்தினார்.

போவதே சாத்தியப்படாது என்ற நிலையில் திருமலை தங்கத்துரை அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர். சித்தார்த்தன் அவர்களும் நானும் அவருடன் பயணித்தோம்.

திருமலைநகர சபை தலைவராக இருந்த, பின்னர் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட சூரியமூர்த்தி அவர்களும் தனதுபிற்காலகட்டத்தில் ஆனந்தசங்கரி அவர்களுடன் இணைந்து வேலை செய்தார்.

சந்திரிகாஅவர்களின் காலத்தில் யாழ் நூலகம் மீள புனரமைக்கப்பட்டபோது அதனை முன் நின்றுசெயல்படுத்துவதில் முனைப்புகாட்டியவர்.

எப்போதும் மக்களை இருளிலேயே வைத்திருக்கவேண்டும் என்றுகருதியவர்கள் எரிந்தநூலகம் அப்படியேஞாபகச் சின்னமாக இருக்கவேண்டும்.அதனை புனரமைக்க கூடாது என்றார்கள்.

யாழ் சமைய சமூக நீதி மறுப்பு அதிகார வர்க்கத்தின் முகம் சுளிப்பு முணுமுணுப்புக்கு மத்தியில் செல்லன் கந்தையா அவர்களையாழ் நகர மேயர் ஆக்குவதற்கு முன் நின்றவர்.

அவரது எதார்த்தமான அரசியல் நிலைப்பாடுகள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் ஆழமான பிளவை ஏற்படுத்தியது.

தமிழர் விடுதலைக் கூட்டணிஎன்றதனதுகட்சியின் பெயரைதக்கவைப்பதற்காகஅவர் நீதிமன்றத்தில் சளைக்காமல் முயற்சிசெய்தார்.

லங்கா சமசமாய கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலை கூட்டணியெனநெடும் பயணம் அது.

ஜனநாயக விரோத அரசியல் நிலைப்பாடுகளுக்கு கட்சியின் ஒருபகுதியினர் நெகிழ்வுத் தன்மை காட்டியதால் தவிர்க்கமுடியாதபிளவுஏற்பட்டது.

இளைஞர்களுடன் சாமானியமனிதர்களுடன் இயல்பாகப் பழகும் இயல்புஅவரிடம் இருந்தது.

தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய ஜனநாயகவிரோத அரசியலை அவர் தயவு தாட்சண்யம் இன்றி விமர்சித்தார்.

இதனால் தான் புலிகளின் ஆலோசகர் லண்டனில் பகிரங்க மேடையில் ஆனந்தசங்கரி அவர்களை ஆபாசமாக வசவுசெய்தார். சங்கரி அவர்கள் அவ்வளவு தூரம் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தார்.

ஆசிரியராக, சட்டத்தரணியாக, அரசியல் தலைவராக, மனித உரிமை ஜனநாயகவாதியாக மக்களின் சமூக பொருளாதார விடயங்களில் கரிசனை கொண்டவராக பல பரிமாணங்கள் அவரிடம் இருந்தன.

காந்திய எளிமை அவரது வழி. அவரது ஜனநாயக அரசியல் செயற்பாட்டுக்காக பிரான்ஸ் தலைநகர் பரிசில் வைத்து யுனெஸ்கொவின் ‘சகிப்புத்தன்மைக்கான’ சர்வதேச விருது வழங்கப்பட்டது.

தனது எழுபதாவது அகவைக்கு பிந்திய முதிய வயதில் அவர் குறிப்பாக இனப் பிரச்சனைக்கான தீர்வு சமூகங்களுடைய சகோதரத்துவம் மனித உரிமை ஜனநாயகம் மக்களின் ஜீவாதார நலன்களை பிரதிபலிக்கும் கடிதங்களையும் கட்டுரைகளையும் எழுதியவர்.

1989இல் படுகொலை செய்யப்பட்ட தலைவர் அமிர்தலிங்கம் அவர்களுக்கு நினைவஞ்சலி கூட்டம் நடத்துவதற்கு முதுகெலும் பற்ற வர்களாக அவரது கட்சி யினர் இருந்தகாலத்தில் தங்க முகுந்தன் மற்றும் கட்சியின் ஜனநாயகவாதிகளின் பங்களிப் புடன் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அஞ்சலி கூட்டத்தை நடத்தியபோது [illegible] மண்டபம் நிறைந்திருந்தது.

அமிர்தலிங்கம் ஒரு சகாப் தம் என்ற நூலையும் புதிது ஒரு நூலையும் வெளியிட்டுவைத் தார்.

தமிழ் அரசியலபரப்பில் துரோகபட்டம் சூட்டப்பட்ட தீண்டாமை பாராட்டப்பட்ட எந்த அரசியல் இயக்கத்துடனும் சேர்ந்து இயங் குவதில் தயங்கியதில்லை.

துரோகியாக இருட்டடிப்பு செய்யப்பட்ட தலைவர் அமிர்தலிங்கத்தை முன்நிறுத் தியவர்.

கிளிநொச்சியில் அடிநிலை மக்கள் மத்தியில் வேலைசெய்த பொதுவுடைமை இயக்கத் தோழர்களுக்கும் அவர் மீதுநன்மதிப்பிருந்தது.

ஒருவீரியமிக்கஆற்றல் உள்ள இளைஞனைப் போல அவர் உறவுகளைபேணியவர்.

1990 களின் பிற்பகுதியில் இருந்து2009 வரைதென்னிலங்கை அரசியல் சமூகசக்திகள் உடனும் தமிழக ஜனநாயக இடது சக்திகள் உடனும் புலம்பெயர் முற்போக்கு ஜனநாயக அணிகளுடனும் உறவைபேண முடிந்தது.

குறிப்பாகமறைந்த தோழர் ஸ்ருட்கார்ட் ஜெமினியின் இணையமும் சங்கரிஅவர்களின் பங்களிப்பை முன்னிறுத்துவதில் குறிப்பிடத் தகுந்தபணியாற்றியது.

நெருக்கடி மிகுந்த காலத்தில் சங்கரிஅவர்களின் உறுதியான நிலைப்பாடுகள் செயல்பாடுகள் தோழர் சுபத்திரன் அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டது.

ரவிராஜ் போன்ற இளைஞர்களையும் சமூகநீதி மறுக்கப்பட்டபின்புலத்திலிருந்துவந்தசெல்லன் கந்தையா போன்றவர்களையும் மாநகர சபை ஊடாக முன்னரங்குக்கு கொண்டுவருவதில் எந்ததயக்கமும் காட்டவில்லை.

இறுதியுத்தநாட்களில் கிட்டத்தட்ட 85 ஆயிரம் பேர் வரை அரசு கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்திருந்தபோது மூன்றரைலட்சம் பேர் வரையில் வன்னியில் இருந்ததாக கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா, மன்னார் அரசு அதிபர்களின் தகவல்களை, முன்வைத்து அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வினவியபோது புனர்வாழ்வுத் துறை அதிகாரியாக இருந்ததிவாரட்ண, பசில் ராஜபக்ஷ ஆகியோருடன் கடுமையாகவாய் தர்க்கமேற்பட்டது. இடதுசாரிதலைவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டஅந்த கூட்டத்தில் ஆனந்தசங்கரிஅவர்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக காணப்பட்டார்.

இந்தக் கூட்டத்தின் பின்னர் ஒருநாள் அவர் தொலைபேசியில் அழைத்து “எங்கட சனங்கள் எல்லோரையும் கொல்லப் போறாங்கள்” என்றார். அந்த நாட்களில் வன்னியில் இருந்த வைத்தியர்களிடமிருந்து அவருக்கு தொலை நகல்கள் வந்துகொண்டிருந்தன. நான் தொலைபேசியில் எதையும் பேசவேண்டாம் என்று சொன்னேன் ஆனால் அவர் கேட்டால் கேட்டுவிட்டுப் போகட்டும் என்றார் அலட்சியமாக.

அந்நாட்களில் மிகுந்த விசனமும் கோபமும் கொண்டிருந்தார்.

தமிழ கூறும் நல்லுலகில் ஆசாடபூதிகளான தலைவர்களுக்கு இருந்தமரியாதைமனசாட்சி கொண்ட வெளிப்படையானமனிதர்களுக்கு இருக்கவில்லை அவர்கள் துரோகிகள்!?

அவர் போன்றவர்கள் பிற்காலத்தில் அரசியல் அதிகாரத்தைஅடையமுடியாமல் போனதற்கு என்னகாரணம் என்பதுவிளங்கிக் கொள்ளப்படவேண்டும் .

இங்கு போலிகள் மதிப்புமிக்கவை.

கடைசியாக ஒன்று 1975 துரோகியாக கொல்லப்பட்ட அல்பிரட் துரையப்பாஅவர்களுடன் தனக்கிருந்தநெருக்கத்தைப் பற்றியும் அவரது நல்லியல்புகளைப் பற்றியும் அவர் என்னிடம் உரையாடியது ஞாபகம்.

பல்வேறுமனிதர்கள் பற்றியும் திறந்த மனதுடனான சுயாதீனமானபார்வை இருந்தது.

தீண்டாமை இருந்தது இல்லை.

சூறாவளியின் ஊடு நெடும் பயணம் மேற்கொண்ட முதுபெரும் தலைவர் அவர். நீடுவாழ்க.

**சிறிதரன் திருநாவுக்கரசு (சுகு)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகசாலையில் அறுபது ஆண்டுகள் வற்றாது வாழும் இளமை

கண்டம் விட்டு கண்டம் சென்ற வேளையிலும் உலகளாவிய ஊடக சாலையில் தமக்கென ஒரு தனியிடத்தை உருவாக்கி அறுபது ஆண்டுகள் தாண்டியும் அறாத்தொடராக பயணித்துக் கொண்டிருப்பவர் கனடாவில் வாழும் திரு எஸ். திருச்செல்வம் அவர்கள்.

திரு என்றும், எஸ் தி என்றும் ஊடகங்களில் நன்கறியப்பட்ட இவர் 2025 அக்டோபரில் ஊடகத்துறையில் அறுபது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் 1965ம் ஆண்டு இவரது ஊடகப்பயணம் ஆரம்பமானது. ஈழநாடுவின் நாடாளுமன்ற மற்றும் அப்போதைய செனட் சபை ஆகியவற்றின் செய்தியாளராக கொழும்பில் கடமை யாற்றிய பின்னர் லேக்ஹவுஸ் ஊடக நிறுவனத்தின் தினகரன் ஆசிரிய பீடத்தில் இணையும் வாய்ப்பு இவ ரைத் தேடிவந்தது.

இவரது ஊடக வாழ்வின் பொற்காலமாக தினகரன் பணிக்காலம் அமைந்தது. இங்கும் நாடாளுமன்ற செய்தியாளராகவும், பிரதமர், அமைச்சர்கள் மற்றும் பிரதானிகளின் விஜயங்களின் போது அவர்களுடன் செல்லும் ஊடகர்கள் குழுவில் முக்கியமானவராகவும் இடம்பெற்றார்.

1969ல் பிரதமர் டட்லிசேனநாயக்கவின் வடபகுதி ஐந்துநாள் விவசாய சுற்றுலா, 1974ல் பிரதமர் சிறி மாவோ பண்டாரநாயக்கவின் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக திறப்புவிழாவுடன் இணைந்த யாழ். மாவட்ட ஒருவார அபிவிருத்தித்திட்ட சுற்றுலா, கொழும்பிலிருந்து நாவலர் பெருமானின் உருவச் சிலை ஊர்வலமாக யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்பட்ட வரலாற்று நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சரித்திர பூர்வ தமிழாராய்ச்சி மாநாடு ஆகியவற்றில் முக்கிய செய்தியாளராக பங்குபற்றியமை இவரது ஊடகப்பயணத்தின் முத்திரைஅனுபவங்கள்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆங்கில செய்திப்பிரிவில் கடமையாற்றிக் கொண்டிருந்த சமகாலத்தில் அதன் தமிழ்ச் சேவையில் அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராகவும் செயற்பட்டார்.

1983 ஜூலையில் தென்னிலங்கையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்பினால் தமது வாழ்விடம், சொத்துகள், நூற்தேட்டம் அத்தனை யையும் இழந்து தமது மனைவியுடனும் மகனுடனும் யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறிய இவரது ஊடகப் பயணத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பமானது. கொழும்பு றோயல் கல்லூரியில் கல்விகற்ற மகன் அகிலனுக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரியில் அனுமதி கிடைக்க, மனைவி றஞ்சிக்கு யாழ்ப்பாணம் சென்.பொஸ்கோ பாடசாலைக்கு இடமாற்றம் கிடைத்தது. இவ்வே ளையில் யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்ப டவிருந்த ஈழமுரசு தினசரியின் பிரதம ஆசிரியர் பதவி இவரை நாடிவந்தது.

இரு மனநிலையில் தடுமாறிய பின்னர், 1983 செப்டம்பரில் ஈழமுரசை பொறுப்பேற்று வாரப்பத்திரிகையாக ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தின் இரண்டாவது தினசரியா கபிறப்பெடுத்த ஈழமுரசு அன்றைய காலத்தின் தேவைகருதியும் வாசகர்களின் வரவேற்பினாலும் அடுத்த சில மாதங்களில் தினசரியாகியது. ஈழமுரசு பத்திரிகையின் தினசரிமற்றும் வாரமலர் ஆகியவற்றின் ஸ்தாபக ஆசிரியராகவும், பிரதம ஆசிரியராகவும் அமைந்து பத்திரிகையை வளர்த்தெடுப்பதில் கூடிய கவனம் செலுத்திய இவர், இதற்கு இயைவாக இளவயதினரை செய்திப் பிரிவுக்கு தெரிந்தெடுத்து ஊடகப்பயிற்சி வழங்கினார்.

ஊடக முதலாளிமாருக்கும் தொழில்முறை ஊடகர்களுக்கும் நீண்டகாலம் ஒத்துப்போக முடியாதென்ற நிதர்சனம் திருச்செல்வம் அவர்களுக்கு 1986 ஆகஸ்டில் ஏற்பட்டது. இதனால் போதிய முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு செப்டம்பர் மாதத்தில் இங்கிருந்து வெளியேறினார். தம்முடன் பணியாற்றிய பெருமளவானவர்கள் அடுத்த சில நாட்களில் ஈழமுரசிலிருந்து வெளியேறியதால் புதிய தினசரி ஒன்றை வெளியிடவேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாததாயிற்று. முரசொலி தினசரியின் பிறப்பின் வரலாறு இது.

இங்கும் நூற்றுக்குநூறு வீதம் செய்திப்பிரிவுக்கு இளையவர்களையே உள்வாங்கி பயிற்சியளித்தார்.




ஈழமுரசில் முன்னர் பணியாற்றிய பாரதி இராஜநாயகம், கிறிஸ்டி றஞ்சன், ரூபன் மரியாம்பிள்ளை ஆகியோரோடு மேலும் பிறேம் சிவகுரு (தற்போது ஐபிசியில் பணியாற்றுபவர்), துஸ்யந்தன் துரைராஜா, எட்வேர்ட் லியோன், வாசகன் இரத்தினதுரை, நிமலராஜன் மயில்வாகனம், ராஜ்மோகன் செல்லையா ஆகிய இளையோர் முரசொலி செய்திப்பிரிவில் இணைக்கப்பட்டனர். இவர்களுள் காலமான இருவர் தவிர மற்றையோர் இன்று உலகின் பல பாகங்களில் முரசொலி பண்ணையில் உருவானவர்கள் என்ற பெயருடன் ஊடகங்களில் சிறப்பாக பணியாற்றி வருவது இவருக்குப் பெருமை தருவது.

திருதிருச்செல்வம் முரசொலி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்தபோது, குறுநாவல், சிறுகதை, கவிதைப் போட்டிகளை நடத்தி எழுத்தாளர்களுக்கு பணப்பரிசு வழங்கி ஊக்கமளித்தார். தினசரி பத்திரிகையில் குறுநாவல்களை தொடர்ச்சியாக வெளியிட்டு அவற்றை நூலாக்கினார். எழுத்தாளர்கள் கே.ஆர். டேவிட் அவர்களின் 'ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை', தெணியான் அவர்களின் 'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்' ஆகிய இரண்டு நூல்களும் இதில் முக்கியமானவை.

1980களின் நடுப்பகுதியில் மாற்றமடைந்த போர்ச்சூழலும், தியாகிதிலீபனின் உண்ணாநோன்பும், அமைதிப்படை என்ற பெயரில் வந்திறங்கிய இந்திய இராணுவத்தின் கொடூரமுகத்தை தமிழ் மக்கள் அடையாளம் காணமுடிந்தது. இதில் முதல் பலியானது ஊடகங்கள். 1987 அக்டோபர் 10ம் திகதி முரசொலி அலுவலகம் இவர்களால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது. அடுத்த கட்ட நடவடிக்கையாக முரசொலி ஆசிரியராக இருந்த இவர் காரணம் ஏதுமின்றி கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் கோட்டை சிறைச்சாலையில் இந்திய இராணு வகைதியாக 82நாட்கள் அடைத்து வைக்கப்பட்டு மனநிலை ரீதியான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார்.

எனினும், இவர் தமது ஊடக பயணத்தை அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. பத்து மாதங்களின் பின்னர் மீண்டும் தமது குழுவினரின் பூரண ஒத்துழைப்போடு முரசொலியை வெளியிட ஆரம்பித்தார். குண்டுத்தகர்ப்பு, சிறைத்தண்டனை எதிலும் பயனில்லை என்பதை உணர்ந்த இந்திய இராணுவமும் அவர்களது ஒட்டுக்குழுவினரும் இவரைக் கொலை செய்ய முடிவெடுத்தனர். 1989ம் மேமாதம் 10ம் திகதி இதற்கான நாள் குறிக்கப்பட்டது. அன்று காலை இவரது வீடு அமைந்திருந்த பிரதேசத்தை இந்திய இராணு வம் சுற்றிவளைத்து தமது கட்டுப்பாட்டில் வைத்தி ருக்க, ஒட்டுக்குழுவினர் நால்வர் இவரது வீடு சென்று கொலை முயற்சியை மேற்கொண்டனர்.

சமயோசிதமாக இவர் தப்பிவிட, இவரது ஒரே பிள்ளையான அகிலனை அவர்கள் துப்பாக்கிக்கு இரையாக்கினர். பல்கலைக்கழக புகுமுகவகுப்பு மாணவரான அகிலன் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி, விளையாட்டு, சமூகப்பணி ஆகியவற்றில் முன்னணியில் திகழ்ந்ததோடு மாணவர் தலைவனாகவும் இருந்தவர். அகிலனின் மரணத்தைத் தொடர்ந்து தமது பாதுகாப்பு கருதி திருச்செல்வம் தம்பதியினர் வேறு வழிகளால் கொழும்பைச் சென்றடைந்தனர். கொழும்பின் ஆங்கில, தமிழ், சிங்கள பத்திரிகைகள் அகிலனின் கொலையை கண்டித்து ஆசிரிய தலையங்கங்கள் எழுதின. இலண்டன் பிபிசி ஆங்கிலத்திலும் தமிழிலும் திருச்செல்வத்துடனான செவ்வியை ஒலிபரப்பியது.

அகிலனின் மரணத்தின் 14ம் நாள் திருச்செல்வம் அவர்களின் தந்தையாழ்ப்பாணத்தில் காலமானது இவருக்குத் தெரியாமலே இறுதிச் சடங்குகள் முடிவுற்றன. நான்கு நாட்களுக்குப் பின்னரே தகவல் இவருக்குக் கிடைத்தது.

இவ்வேளையில் சர்வதேச மன்னிப்புச்சபை இவரையும் மனைவியையும் இலங்கையிலிருந்து பாதுகாப்பாக வெளியே கொண்டுசெல்லும் ஏற்பாடுகளை மேற்கொண்டது. அனைத்துலக ஊடக அமைப்பான 'பென்' (PEN) இதற்கு முழு அனுசரணை வழங்கியது. இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இவர்களுக்கு அடைக்கலம் வழங்க முன்வந்தன.

1989 ஜூன் மாதத்தில் திருச்செல்வமும் அவரது மனைவியும் கனடிய கடவுச்சீட்டில் அந்நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு சென்ற இவர்கள் இருவரும் முப்பத்தைந்து ஆண்டுகள் தாண்டியும் தங்கள் தாயகம் திரும்பாது அங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த முப்பத்தைந்து ஆண்டு காலம் இவரது ஊடக வாழ்வின் மூன்றாவது கட்டமாகப் பார்க்கப்படுகிறது. 1991ல் தமிழர் தகவல் என்ற மாத சஞ்சிகையை ஆரம் பித்து தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இன்றுவரை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறார். அகிலனின் ஞாபகார்த்தமாக அவர் பிறந்த 5ம் திகதி யில் மாதாந்தம் இச்சஞ்சிகை வெளிவருவது குறிப்பி டத்தக்கது. ஒவ்வொரு வருடமும் உலகளாவிய படைப்புகளைத் தாங்கிய ஆண்டுமலர் வெளியிடப் படுகிறது. இதனோடு இணைந்ததாக தமிழர் தகவல் விருதுவிழா 1992ம் ஆண்டிலிருந்து கனடாவில் இடம் பெற்று வருகிறது. இதுவரை 300 வரையான பிரமுகர் கள் கல்வி, கலை, இலக்கியம், தன்னார்வத் தொண்டு, ஊடகப்பணி, சமூகப்பணி, ஆன்மிகப்பணி, வாழ்நாள் சாதனை ஆகியவைகளுக்காக விருதுகளும் தங்கப்பதக்கங்களும் வழங்கி மாண்பேற்றப்பட்டுள்ளனர்.

தமிழர் தகவல் ஆண்டு மலர்கள் வரலாற்றைப் பதிவாக்கி, பதிவை வரலாறாக்கி வருகின்றன. இதனை ஆவணப் பொக்கிசம் என்று பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன் எப்போதும் கூறுவார். தமிழர் தகவல் இதழ்கள் தமிழர் வாழும் நாடுகளிலும் இலங்கையிலும் நூலகங்களில் பேணிப் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

கடந்த மூன்றுதசாப்தங்களாக உலகளாவியரீதியிலானவானொலிகள்,தொலைக்காட்சிகளில் அரசியல் ஆய்வாளராக பங்காற்றிவரும் திருதிருச்செல்வம், கனடா, இலங்கை உட்பட பல பத்திரிகைகளில் பல்வேறு பெயர்களில் தொடர்ச்சியாக அரசியல் கட்டுரைகளையும், பத்திகளையும் எழுதிவருகிறார்.

இவரது ஐம்பது ஆண்டுகால ஊடகப் பணியை குறிக்கும் வகையில் ஐம்பது பிரமுகர்களின் காத்திரமான படைப்புகளைத் தாங்கிய 'ஊடகத்திரு எஸ்தி 50' என்ற நூல் 2015ல் கனடாவிலும் இங்கிலாந்திலும் வெளியிடப்பெற்றது.

1998ம் ஆண்டு கனடிய பலவின ஊடக அமைப்பு இவருக்கு ஆளுமை ஊடகவியலாளர் விருது வழங்கி சிறப்பித்தது. 2001ல் சர்வதேசதொண்டர் ஆண்டையொட்டி றொறன்ரோ நகர முதல்வரினதும், ஒன்ராறியோ அரசாங்கத்தினதும் சிறப்பு விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டது. 2007ம் ஆண்டு ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் 'குடிவரவாளர் சாம்பியன்' விருதினை அறிமுகம் செய்தபோது முதலாவது ஆண்டிலேயே அவ்விருதினைப் பெற்றவர் இவர். கனடாவின் பிரபல எழுத்தாளரும், ஊடகவியலாளருமான 'ஜூன் கால்வூட்' ஞாபகார்த்தமாக பிரஜாவுரிமை அமைச்சு வழங்கியஅதியுயர் சேவைவிருது 2012ம் ஆண்டில் இவருக்கு வழங்கப்பட்டது, 2019ம் ஆண்டில் கனடியத் தமிழ் இலக்கியத் தோட்டம் இவரது அரை நூற்றாண்டுக்கும் மேலான ஊடகப்பணிக்காக சிறப்பு விருது வழங்கியது. தமிழர் தகவலின் முப்பத்தைந்து ஆண்டுகால வெளியீட்டுப் பணியை மதித்து கனடா திருமறை கலாமன்றம் 2025ல் கலைத்தூது விருது வழங்கிமதிப்பளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கரங்களில் தந்த கை விளக்கு

# கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்

ஈழத் தமிழினம் இடருறும் வேளைகளில் ஆபத்பாந்தவர்களாக பலரை காலம் அவ்வப்போது அனுப்பிவைப்பதனாலேயே இவ் இனம் இன்றளவும் பெருமை குன்றாது தன் தனித்துவத்துடத்துடன் திகழ்கின்றது. அவ்வாறு இருபத்தோராம் நூற்றாண்டில் ஈழத்தமிழர்களின் காப்பரணாக காலத்தால் அனுப்பி வைக்கப்பட்ட பெருமகனேகலாநிதி. செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன். அவரது மேதாவிலாசமே பல சந்தர்பங்களில் எம் சமூகத்தையும் இனத்தையும் பாதுகாக்கும் கவசங்களாக அமைந்துள்ளன. அவருக்கு வழங்கப்படும் தனித்துவ மரியாதையும் விருதுகளும் வாழ்த்துக்களும் அவருக்குப் பெருமை சேர்க்கும் அடையாளங்கள் என்பதைத் தாண்டி இச் சமூகம் அவருக்கு வழங்கும் தனது நன்றியுணர்வின் அடையாளங்களாக கொள்ளத்தக்கன. பெருநிறுவனங்களால், மக்கள் செல்வாக்குமிக்க பெரும் தலைவர்களால் ஆற்றக்கூடிய அல்லது ஆற்ற வேண்டிய காலக் காரியங்களை ஒரு தனிமனிதனா கஆற்றும் அவரது வல்லமை எவருக்கும் வாய்க்காத பெரும் வரம். அவ் வரம் விளைவிக்கும் சமூக அனுகூலங்கள் பெரிது. காலம் கடந்தும் நிலைபேறாய் நிற்கும் காரியங்களின் கர்த்தாவான கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனுக்கு வழங்கப்படும் வாழ்நாள் சாதனையாளர் விருதுதக்கதிலும் தகும்.

கலாநிதிஆறு. திருமுருகன் பற்றி அவரது மணிவிழா மலரான திருமுருகன் 60இல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "கலாநிதிஆறு .திருமுருகனை நினைக்கும் கணமெலாம் எனக்கு என் வாழ்நாளின் ஓர் பசுமையான ஞாபகம் மனதின் ஆழத்தில் இருந்து எப்போதும் மேல்எழும். எங்கள் தந்தையார் ஏழு பிள்ளைகளைப் பெற்ற ஒரு சாதாரண லிகிதராகப் பணியாற்றிய அரச உத்தியோகத்தர். அப்பாவின் வருமானம் எங்கள் குடும்பத்தின் அத்தனை தேவைகளையும் உச்ச பட்சமாகப் பூர்த்திசெய்யப் போதாது. அப்பாவின் சுமைகளில் பாதியை சுமந்து கொள்வதற்கான சில ஏற்பாடுகள் எங்கள் வீட்டில் இருந்தன. அவற்றுள் முதன்மையானது எங்கள் வீட்டில் இருந்த பசுமாடு. அது காலையில் வீட்டிலிருந்து தானாகவே புறப்பட்டால் தன் கண்ணில் அகப்படும் இரையாக்கக்கூடிய புல் பூண்டுகளை எல்லாம் உணவாக உட்கொள்ளும். தனக்கான தண்ணீரைத் தானே தேடியருந்தும். மாலையானதும் வீடுதிரும்பும். வீடு திரும்பியதும் தெருவோரங்களிலும் வயல் வரம்புகளிலும் இருந்து தானுண்ட புல் பூண்டுகள் மூலம் பெற்ற சத்தியை எங்கள் குடும்பத்தின் ஒன்பது பேருக்கும் தனது கன்றுக்குமாக இணைந்து பாலாகச் சொரியும். இந்த அதிசய உணர்வை நினைக்கும் போது பசுவின் உன்னதம் மகோன்னதமானது எனும் தத்துவம் எனக்குள் எழுவதுண்டு. இந்தப் பசுவையொத்தவர் தான் எங்கள் ஆறு.திருமுருகன் ஐயா. உலகம் முழுவதும் உலாவி எவர் எவரிடமோ இருந்தெல்லாம் செல்வங்களைப் பெற்றுவந்து எங்கள் மண்ணுக்கு பாலாகச் சொரியும் பசு அவர். பசுவையொத்த சாதுவான குணத்தையும் அவர் தான் சார்ந்தோர் மத்தியில் பிரதிபலிப்பவர். முழுமுதற் கடவுள் சிவன் தன்னருகே பசுவை வைத்திருக்கும் தத்துவத்தின் உட்பொருளை விளக்க எமக்கு வாய்த்த தவப் புதல்வர் ஆறு.திருமுருகன் ஐயா".

துணைவேந்தர் அவர்களது மேற்குறிப்பிட்ட கூற்று கலாநிதிஆறு. திருமுருக்கன் அவர்களின் வாழ்வின் மகத்துவத்தை மிகக் கச்சிதமாக எடுத்துக் கூறுகின்றது. புல வழிகளிலும் இன்னல்களைச் சந்திக்கும் எமது ஈழத்தமிழ்ச் சமூகத்துக்கு எவ்வெவ் பணிகளை எப்போது ஆற்றவேண்டுமோ அதனை தருணம் உணர்ந்து ஆற்றுகின்ற ஞானமனிதர் ஆறு.திருமுருகன் அவர்கள். சாதாரண ஒரு பாடசாலை ஆசிரியராக, பத்தோடு பதினொன்றான கோவில் சொற்பொழிவாளராக ஆரம்பித்த அவரது வாழ்வு இன்று அடைந்திருக்கும் பல் பரிமாணவிரிவும் வீச்சும் அவருக்கு காலம் வழங்கிய அங்கீகாரமும் கொடையும் ஆகும்.

யாழ்ப்பாணம் கோப்பாயை பூர்வீகமாகவும் கொண்ட நல்லாசிரியர் ஆறுமுகம் அவர்களுக்கும் இணுவிலைச் சேர்ந்த நல்லாசிரியை சரஸ்வதி அவர்களுக்கும் மூன்றாவது புதல்வனாகவும் நான்காவது மகவாகவும் 1961 மேமாதம் 28ஆம் திகதி வைகாசி விசாகத்தன்று பிறந்தவர் ஆறு.திருமுருகன். இவர் தனது ஆரம்பக் கல்வியை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பயின்று, உயர் கல்வியை பேராதனை பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு பட்டதாரியானார். மஹரகம தேசியகல்வி நிறுவகத்தில் பட்டப்படிப்பின் கல்வியியல் டிப்ளோமாப் படிப்பை மேற்கொண்டார். 1989ஆம் ஆண்டில் சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலையில் ஆசிரியராகநியமனம் பெற்றார்.பின்னர் 1993ஆம் ஆண்டில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று, பகுதித் தலைவராகவும், உப அதிபராகவும், பின்னர் பிரதி அதிபராகவும் பணியாற்றி 2008 மார்ச் மாதம் 16ஆம் திகதிமுதல் அதே கல்லூரியின் அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். இவரது ஆசிரிய சேவையைப் பாராட்டும் வகையில் 1991ஆம் ஆண்டுயாழ். மாவட்டக் கல்வித் திணைக்களமும், 2002ஆம் ஆண்டு வலிகாமம் கல்வி வலயமும் நல்லாசிரியர் விருதை வழங்கிக் கௌரவித்தது. சமூகப் பணிகளை முன்னெடுத்து செல்வதை இலகுவாக்கும் நோக்குடன் அவர் தனது 50வது வயதில் அரச பதவிகளை ஓய்வுறுத்தி இன்றளவும் தனது சமய, சமூப் பணிகளை முழுநேரமாக ஆற்றி வருகிறார்.



தனது தந்தைதாய் வழிவாய்த்த பரம்பரை இயல்புகளும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்விகற்கும் காலத்தில் அவரது ஆசிரியர்களான அமரர்கள் கலாநிதி.க. சிவராமலிங்கம்பிள்ளை, தேவன் மாஸ்டர் மற்றும் மூதறிஞர் சொக்கன் போன்றவர்களின் வழிப்படுத்தலும் பெருமனிதர்களின் தொடர்பும் அவரை தமிழின் பால்ஈர்த்தன. சைவசமயத்தின் பால் ஈடுபாடு கொள்ளச் செய்தன. அத்துடன் இரண்டாம் ஈழப்போர் காலத்தில் இந்திய இராணுவம் இவ் மண்ணில் நிலை கொண்டிருந்த சமயம் அவர் சந்தித்த அச்சுறுத்தல்களும் வன் முறைகளினால் மரணத்தின் வாசல் வரை சென்று மீண்டு மறுபிறப்பான அவரது வாழ்வும் இன்று அவர் வாழும் வாழ்வுக்கான பாதையை வகுத்துக் கொடுத்தன எனஅவர் அடிக்கடி சொல்வதுண்டு.

1980களின் நடுப்பகுதியில் கம்பன் கழகத்தின் பேச்சாளராக அரங்குகள் கண்ட அவர் பின்னர் தனித்துவமான ஆன்மீகத் தொடர்சொற்பொழிவாளராக காலத்தால் கைகாட்டப்பட்டார். அவரது சொல்லின் பெருக்கும் சொல்லவரும் கருத்தை சுவைபடச் சொல்லும் ஆற்றலும் செஞ்சொற்செல்வர் எனும் உயர் அடைமொழியை அவருக்காக்கியது. இவ் பட்டம் இணுவில் காரைக்கால் விசாலாட்சி சமேதவிஸ்வநாதப் பெருமான் ஆலயத்தில் நடைபெற்ற தொடர்சொற்பொழிவின் நிறைவில் வழங்கப்பெற்றது தன் சொல்லின் ஆற்றலால் விளையும் அறுவடையை தனக்காக்காது அதனை சமூக விளைவுக்கான நீராகபாச்சும் தீர்க்கமான முடிவினை அவர் எடுத்ததன் விளைவே இன்றுஅவரால் விளைந்திருக்கும் ஆயிரம் நன்மைகளின் அடித்தளம்.

1990களின் நடுப்பகுதியில் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினால் ஞானப்புதல்வனாக தத்தெடுக்கப்பட்டார் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள். அம்மாவின் ஆசியும் வழிகாட்டலும் இவரது ஆன்மீகவாழ்வின் செல்நெறியைத் செப்பனிட்டன. அம்மாவுக்குப் பின்னர் தெல்லிப்ளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகச் செயற்படவும் அம்மாவின் அறப்பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கவும் அவருக்கு வாழ்நாள் வாய்ப்புக்கிட்டியது. தனது சொற்பொழிவின் நிறைவுகளில் தனக்கு வழங்கப்படும் அன்பளிப்புக்களை தர்மகாரியங்களுக்குச் செலவிடும் திடசங்கற்பம் கொண்ட இவரதுவாழ்வு இறையருளாலும் இயற்கையின் பெருங்கருணையாலும் ஆசிர்வதிக்கப்பட்டன. செல்லும் திசையாவும் வெல்லும் சொல் இவருடையதாகியது. இங்கிலாந்தில் ஆரம்பித்த இவரது வெளிநாட்டுச் சொற்பொழிவுகள் இன்றளவும் அமெரிக்கா, கனடா, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தியா எனவருடம் தோறும் தொடர்கின்றன. அந் நாடுகளுக்குச் சென்று வந்தபோது கிடைத்த பெருநிதிப் பங்களிப்பினால் இந்தமண்ணில் அரசாங்தினால் கூட செய்யமுடியாத பல நிலைப்பேண் காரியங்களை கலாநிதி.ஆறு.திருமுருகன் ஆற்றி முடித்திருக்கின்றார்.

குறிப்பாக தனது ஆளுகையின் கீழாக சிவபூமி அறக்கட்டளைஎனும் அமைப்பைத் தாபித்து அதன் மூலம் சிவபூமி முதியோர் இல்லங்களை தொல்புரம் மற்றும் கீரிமலையிலும், விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான் சிவபூமி மனவிருத்திப் பாடசாலைகளை கோண்டாவில், கிளிநொச்சி. திருகோணமலை, மற்றும் முள்ளிவாய்க்காலிலும் அமைத்தார். அத்துடன் நாவற்குழியில் திருவாசக அரண்மனை மற்றும் அரும்பொருட்காட்சியகம், மாவிட்டபுரத்தில் திருக்குறள் வளாகம், மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் திருமந்திர அரண்மனை, கண்டிகலகா, திருகோணமலை, கீரிமலை மற்றும் கொழும்பில் சிவபூமி நிலையங்கள், மடங்கள் எனபல நூற்றாண்டு கடந்தாலும் நிலைத்த அடையாளங்களாகத் திகழவல்ல பெரும் காரியங்களை ஆற்றினார். இவரது இக் கருமங்களுக்குப் பின்னால் இவ் இனம் சந்திக்க விருந்தபெரும் அடையாள அழிப்புக்கள் தடுத்து நிறுத்தப்பட்டன என்பதை கூர்ந்து அவதானிக்கும் போது உணரக் கூடியதாகவுள்ளது. இந் நிறுவனங்கள் மூலம் அடையப்ப பெற்ற சமூக அடைவுகள் மிக வினைத்திறனானவை. குறிப்பாக கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவர்கள் பரா ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் பெற்றமையும் அப் பாடசாலை இலங்கையின் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான பாடசாலைகளில் முதன்மை நிலை பெற்றமையும், துர்க்காபுர மகளிர் இல்லப் பிள்ளைகள் இலங்கையின் பலபல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பெறுவதும், ஆதரவற்ற பல பெரியவர்கள் தமது இறுதி நாள்களை சிவபூமி முதியோர் இல்லத்தில் அமைதியாக கழித்து இறைபதம் அடைவதும் இவரது செயல்வீச்சினால் விளைந்தவை.

சிவபூமி அறக்கட்டளைப் பணிகளுக்கு அப்பால் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவராக இன்றளவும் இருந்து யாழ்ப்பாணத்தில் இந்து மாமன்ற வளாகம், நல்லை ஆதினமண்டபப் புனரமைப்பு, என்பவற்றை முன்னின்று செயற்படுத்தினார். அத்துடன் இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் சட்டநிபுணர் கந்தையா நீலகண்டனுடன் இணைந்து இந்திய அரசாங்கத்தின் பெரும் நிதியுதவியைப் பெற்று மன்னார் திருக்கேதீஸ்வர திருத்தலத்தை கருங்கற் கோவிலாக கட்டியெழுப்பி மன்னாரின் தேன்பொந்தின் மகத்துவத்தை மீண்டும் நிலைபெறச் செய்தார். முறிகண்டியில் இந்து மாமன்றத்தின் நிலையம் தாபிக்கப்பட கருவியாகினார். நல்லூரில் துர்க்காதேவி தேவஸ்தானம் மூலம் மணிமண்டபம் ஒன்றைக் கட்டி அதனை கலாசார பல்நோக்கு பயன்மிக்கதாக இன்றளவும் பேணுகின்றார். துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை மற்றும் இந்து மாமன்றம் மூலம் இறுதிப் போரினால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் ஆதரவு கொடுத்து அவர்களது வாழ்வுக் குநம்பிக்கையொளியேற்றினார்.

கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்களின் சமூகப் பணிகள் விளைவித்ததாக்கத்தின் அளவறிந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவகலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது. அதே பல்கலைக்கழகத்தின் பேரவையில் இவர் நீண்டகாலம் உறுப்பினராக விருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் பல அறிவுப் பணிகளுக்கு ஆலோசனை வழங்கியதுடன் ஆதரவும் கொடுத்தார். குறிப்பாக தமிழ்த் துறையில் நிறுவப்பட்ட கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதிய நியதிகளை மீளவரைவதில் இவர் எடுத்த அதீத அக்கறைகாரணமாக இன்று பல அறிவுப் பணிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதுடன் அவ் நிதியத்திலிருந்து தமிழியல் நூலகம் ஒன்றும் தாபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கலாநிதிஆறு. திருமுருகனார் ஆற்றிய ஆற்றும் பணிகள் அளவிடற்கரியன. அவரது சாதனைகளையும் அடைவுகளையும் இந்த சிறுகட்டுரையில் உள்ளடக்குவது என்பது இயலாதகாரியம். இருப்பினும் இன்று அவர் டான் தொலைக்காட்சியின் வெள்ளிவிழா நாளில் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெறும் தருணத்தில் அவரது பணிகள் சிலவற்றை இக் கட்டுரை கோடிட்டுகாட்டியுள்ளது. உண்மையில் வாழ்நாள் சாதனையாளர் என்பதற்கு அர்த்தம் கொடுக்கும் கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்களின் வாழ்வு இன்னும் இன்னும் நீள்வதாக. இனம் வாழ அவர் வாழட்டும்.

**இ.சர்வேஸ்வரா**
விரிவுரையாளர் கல்வியியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமையும் ஆளுமையும் உடைய பேராசிரியர்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் வேலணையை சேர்ந்த ஆசிரிய தம்ப திகளான பண்டிதர் அம்பலவானர் பொன்னுத்துரை ஆசிரியை, பொன் னுத்துரை நாகரத்தினம் அவர்களின் புதல்வராவார். அவருக்கு ஆறு சகோதரர்களும், ஐந்து சகோதரிகளும் ஆவார். அவர்கள் யாவரும் பல்கலைக்கழக பட்டதாரிகள். அவரின் நெருங்கிய உறவினர் பலர் ஆசிரியர்களாவார். அவரின் தந்தை அதிபராக இருந்த போதும் விவசாயத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர்.

பேராசிரியர் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியைக் கரம்பன் சண்முகநாத வித்தியாலத்திலும், இடைநிலைக் கல்வியின் முற்பகுதியை ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரியிலும், பிற்பகுதியை யாழ்ப் பாண இந்துக் கல்லூரியிலும் கற்றார். இந்துக் கல்லூரி விடுதியில் ஆறு வருடங்கள் தங்கியிருந்து கற்ற அவர் கல்லூரியின் மாணவத் தலைவர்களில் ஒருவராகவும், பல சங்கச் செயற்பாடுகளிலும், கடேற் அணியிலும் அங்கத்தவராக இருந்து துடிப்புடன் செயலாற்றினார். அன்றிலிருந்து இன்றுவரையும் இந்துக்கல்லூரியின் செயற்பாடுகளில் தன்னை முற்றாக இணைத்துக் கொண்டுள்ளார். பழைய மாணவ சங்கத் தலைவராக இருந்து கல்லூரியின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டு வருபவர்.

அவர் 1961இல் இலங்கைப் பல்கலைக்கழம் பேராதனையில் புவியியலைச் சிறப்புப் பாடமாகக் கற்று, சிறப்பாக சித்தி பெற்று 1965இல் உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். 1969இல் தனது கலாநிதிப் படிப்பிற்காக இங்கிலாந்தில் 'டர்ஹம்' பல்கலைக்கழத்தில் இணைந்து தனது கலாநிதி ஆய்வை மேற்கொண் டார். கலாநிதிப் பட்டம் பெற்று 1972இல் நாடு திரும்பி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியேற்றார். 1978இல் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்றார். பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூலக் கற்கை நெறியை வலுப்படுத்துவதில் சிறந்த பங்களிப்பை வழங்கினார்.

1980இல் செப்ரெம்பரில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் புவியியல் பேராசிரியராக நியமிக்கப்பட் டார். 1985இல் பிரித்தானியா பொது நூலக அமைப் பின் புலமைப் பரிசு பெற்று இங்கிலாந்தில் ஒரு வருடம் தனது கல்விப் புலமையை மேம்படுத்தினார். பல்கலைக் கழகங்களில் நாற்பத்தொரு வருடம் பணியாற்றினார். அதனுள் இருபத்தாறு வருடங்கள் பேராசிரியராகப் பணி புரிந்துள்ளளார். புவியியல் துறையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய பேராசிரியர் என்னும் பெருமைக் குரியவராவர். 2006இல் அவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அவரின் சேவையைக் கருத்திற் கொண்டு "வாழ்நாள் பேராசிரியர்" என்னும் நியம னத்தை வழங்கியது. இதன் கல்விப் பணிகள் சிலவற் றைச் செய்து வருவதுடன் அதனுடன் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டுள்ளார்.

பேராசிரியர் அவர்கள், தனது கல்விப் பணிக்கப் பால் கல்வி நிர்வாகத்திலும் பெரும் பங்காற்றியுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர் நலன் சேவை அமைப்பின் பிரதி இயக்குனராகவும் செயற்பட்டுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தில் ஒன்பது வருடங்கள் புவியியல் துறைத் தலைவ ராகவும், இரு தடவைகள் கலைப்பீடாதிபதி யாகவும், ஏழு வருடங்கள் துணைவேந்தராகவும், ஒன்பது தட வைகள் பேரவை உறுப்பினராகவும் 2000இல் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் சங்கத்தின் தலைவராகவும் பணிகள் பல புரிந்துள்ளார்.

அவர் பீடாதிபதியாக இருந்த காலத்தில் கலைப் பீடத்தில் கல்வி விரிவாக்கத்தை மேற்கொண் டார். சமூகவியல் பாடத்தில் சிறப்புக்கலை, உளவியல், மனைப் பொருளியல் சமுதாய - பிராந்தியத் திட்டமிட், மானுவடவியல், ஊடகவியல் ஆகிய பாடங்களை புதிதாக அறிமுகப்படுத்தினார். மேலும், இராமநாதன் நுண்கலை பிரிவில் பாரிய மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டு முதன் முறையாக ஆற்றுகைத் துறை உருவாக்கப்பட்டது. முதன்முறையாக கர்நாடக சங்கீதம், பரத நாட்டியத் துறைகளில் பட்டதாரி கற்கை நெறிளை ஆரம்பித்தார். மேலும், சித்திரமும் வடிவமைப்பும் என்னும் புதிய கற்கைநெறியையும் அறிமுகப்படுத்தி தமிழ் பிள்ளைகளின் உயர் கல்வி வாய்ப்பை விரிவாக்கம் செய்தார்.



கலைப்பீடத்தின் கீழ் வெளிவாரி கற்கைநெறியை உருவாக்கி கலைத்துறையிலும் வணிகத்துறையிலும் பட்டப்படிப்புகளை மேற்கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டது. இதனால், வெட்டுப் புள்ளியால் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கிடைக்கப்பெறாத மாண வர்கள் பலர் பயனடைந்தனர். பெரும் எண்ணிக்கையான பட்டதாரிகள் இதன்மூலம் உருவாக்கப்பட்ட னர்.

மேலும், விளையாட்டுத்துறையிலும் மீன்பிடி கற் கைத்துறையிலும் டிப்ளோமா கற்கைநெறிகள் ஆரம் பிக்கப்பட்டு இதன்வழியாக பலர் வேலை வாய்ப்புப் பெறும் சந்தர்ப்பங்கள் கிட்டின.

சமூகத்தை வலுவூட்டவும் தொழிலாளர் திறனை மேம்படுத்தவும் புறநிலை கற்கை அலகும் தொழிலா ளர் கற்கை அலகும் உருவாக்கப்பட்டன. புறநிலை கல்வி அலகின் செயல்பாடு சமூகத்தை பல்கலைக்கழ கத்துடன் நெருக்கமாக இணைத்தது. சமூக நலன், சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு குறுகிய காலக் கற்கை நெறிகள் பலவற்றை பேராசிரியர் உரு வாக்கியமை குறிப்பிடத்தக்கது.

1995இல் ஏற்பட்ட வலிகாமம் இடப்பெயர்வினால் பல்கலைக்கழக திருநெல்வேலி வளாகம் முற்றாகச் செயலிழந்ததுடன் பாதிப்பும் அதிகம். 1996 ஏப்ரலில் யாழ்ப்பாணம் மீள்குடியமர்வுடன் பல்கலைக்கழகத்தை இயக்க வேண்டிய நிலை உருவானது. இந்நிலையில், 1996 மே மாதம் பதில் துணைவேந்தராக நியமிக்கப் பட்ட பேராசிரியர் அவர்கள் தனது கடின உழைப்பால் பல்கலைக்கழக உட்கட்டமைப்புகளை சீராக்கி, குறுகிய காலத்தில் பல்கலைக்கழக சமூகத்தை அணி திரட்டி பல்கலைக்கழகத்தை இயங்க வைத்தார். யுத்தளம் காரண மாக முடிவு பெறாதிருந்த உட்கட்டுமானங்கள் அவ ரின் காலத்தில் கூட்டி முடிக்கப்பட்டன. பல்கலைக்க ழகம் பல வழிகளில் முன்னேற்றம் கண்டு, 1999இல் தனது வெள்ளிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது.

பேராசிரியர் அவர்கள் பல்கலைக்கழகத்துக்கு வெளி யில் பல பொறுப்பான பதவிகளை வகித்துள்ளார். வடக்கு மாகாண புனர்வாழ்வு, புனருத்தாரண சபையின் இயக்குநர்களில் ஒருவராக அரசமொழி ஆணைக் குழுவின் அங்கத்தவராகவும் உள்ளூராட்சி வட்டார நிர்ணய மீள்பரிசீலனைக் குழு உறுப்பினராகவும் மாகாண சபை எல்லை நிர்ணய மீள்பரிசீலனை குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் மீள்குடியமர்வு காலத்தில் அவரின் பணி மிகவும் காத் திரமானது எனலாம். உள்ளூராட்சி எல்லை நிர்ணய செயல்பாட்டில் அவரின் பணி நாடளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அவரின் செயல்பாட் டால் நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகளில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் வலுவாக்கப்பட்டது.

பேராசிரியர் அவர்கள் சங்கங்கள், சபைகள் பலவற் றில் அங்கத்தவராக இருந்து சிவில் சமூக செயல்பாடு களைச் சிறப்பாக மேற்கொண்டார். யாழ்ப்பாணம் மீள்குடியமர்வுக் காலத்தில் சமாதானத்துக்கும் நல் லெணத்துக்குமான மக்கள் சபை தலைவராக இருந்து செயலாளர் அமரர் எஸ். பரமநாதனுடன் இணைந்து பணிகள் பல செய்தார். இச்சபைக்கு நல்லை. ஆதீன குரு பரமாச்சார்ய சுவாமிகளும் பேராயர் சவுந்தரநாயகமும் அன்று போஷகர்களாக இருந்தனர். இச்சபை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அன்றாடப் பிரச்னைகள் பலவற்றுக்கு தீர்வு கண்டது. பேராசிரியர் அவர்கள் யாழ்ப்பாண போதான வைத்தியசாலை, பொதுநூலகம், யாழ். மாநகர சபை, யாழ். பிரதேச செயலகம், யாழ். மாவட்ட செயலகம் ஆகியவற்றில் காலத்துக்குக் காலம் பல்வேறு ஆலோசனை, அபிவி ருத்தி குழுக்களில் இணைந்து பணியாற்றியுள்ளார்.

பேராசிரியர் அவர்களின் எழுத்துகளும் பேச்சுகளும் குடித்தொகை, நகராக்கம், பிரதேச அபிவிருத்தி, தமிழ் மக்களின் பிரச்னைத் தீர்வு, சமூக மேம்பாடு, உயர்கல்வி விரிவாக்கம் போன்றவை பற்றியதாகக் காணப்படுகின்றன. தாராளக் கல்வி நோக்குடைய வரான பேராசிரியர் அவர்கள் சமூகத்தின் எல்லாப் பிரிவினரும் சிறந்த கல்வியைப் பெறுவதன் மூலமே அறிவுசார் பொருளாதாரத்தை முன்னெடுத்து வீட் டையும் நாட்டையும் உயர்வடையச் செய்யலாம் என்பதில் உறுதியாகவுள்ளார்.

பேராசிரியர் அவர்கள் நல்லை ஆதீன சுவாமிகளால் "ஒப்புரவாளர்" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், யாழ். மாநகராட்சி மன் றத்தால் அவரின் சமய, சமூகப் பணிகளை கௌரவிக் கும்முகமாக "யாழ்" விருது *Global Asian Achievers Council* அவரின் சமூகசேவை, அபிவிருத்தி, தலைமைத்துவம், சமூக நல்லிணக்கம் ஆகிய பணிகளுக்காக *MAN OF TE NATION* - 2025 என்னும் விருதை வழங்கிக் கௌரவித்தமையும் வழங் கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் அகில இலங்கை சமதான நீதவான் என் னும் பட்டத்தையும் அவர் பெற்றுள்ளார். அவரின் பணிகள் மேலும் தொடர வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

**பேராசிரியர் க. குகபாலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சிவலிங்கம் SIR

## மரபுத் தமிழை நகைச்சுவை கலந்து தரும் நற்றமிழ்ப் பேராசான் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா அவர்களின் வாழ்வியல் தரிசனம்

ஈழத்துத் தமிழ் பேராசிரிய மரபில் இரு மரபும் துய்ய வந்த பேராசிரியராக விளங்கி பேராசிரியர் சிதம்பரப்பிள்ளை சிவலிங்கராஜா அவர்கள் சிறப்புப் பெறுகிறார். பல சைவத் தமிழ் அறிஞர்களை பன்முக ஆற்றலாளர்களை தமிழிற்கு தந்த வடமராட்சியின் கரவெட்டி மண் இவரது பிறப்பிடம். அங்குள்ள கட்டைவேலி மெ. மி. த.க பாடசாலையில் தனது ஆம்பக்கல்வியையும், விக்னேஸ்வராக் கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியையும் கற்றவர். கரவெட்டியில் வாழ்நத பணிடிதர் வீரகத்தியிடம் தழிழ் இலக்கண இலக்கியங்களை பண்டித முறை சார்ந்த பாடங்கேட்டல் முறையூடாக கற்றவர். அங்கு தான் இவரது மரபிலக்கிய இலக்கணக் கல்விக்கான அடித்தளம் இடப்படுகிறது. அத்தோடு தனது பேச் சாற்றலால் அக்கால அரசியல் மேடைகளையும் அலங்கரித்தவர் குறிப்பாக சிவசிதம்பரத்தினுடைய தேர்தல் மேடைகளில் இவரது கம்பீரக் குரலும் ஒலித்தது. இதனால் இவர் அக்காலத்தில் ஈழத்துக் கருணாநிதி என அழைக்கப்பட்டவர். இது அவருடைய ஒரு மரபு என்றால் மறுவளமாக இத்தகைய பின்னணிகளோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையில் கற்பிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டார். அங்கு இவர் தமிழ்ப் பேராசிரியர்களை வித்தியானந்தன், கைலாசபதி, சிவத்தம்பி, சண்முகதாஸ் என மிகப்பெரும் தமிழ்ப் பேராளுமைகளிடம் தமிழைக் கற்றும் பேறு பெற்றார். இதனால் தமிழின் நவீன விடயங்களிலும் புலமை பெற்றார். இதுதான் அவரது மறுமரபு இவ்வாறு இரு மரபும் துய்ய வந்த தமிழ்ப் பேராசிரிய ஆளுமையாக நாம் இவரைக் கண்டு மகிழ்கிறோம்.

1945இல் இவ்வுலகில் தோன்றிய இவர் இன்று எண்பது அகவை கடந்து எம் மண்ணின் தழிழ் முதுசொத்தாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்தில் தன்னோடு ஒன்றாகக் கற்ற நெடுந்தீவைச் சேர்ந்தவர் சரஸ்வதி என்பவரைக் காதலித்து கரம் பிடித்தவர். தனது இல்லறப் பயனாக சிவதி, ரகுராமன் ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்று அவர்களை கல்வியில் உயர வைத்து இன்று அவர்கள் வைத்தியத்துறையில் மருத்துவ பீடத்தில் உயர் பதவிகளை அலங்கரிக்கும் வைத்திய கலாநிதிகளாகவும் உள்ளனர். இவர்கள் வழி பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்திருப்பவர் இவரது அன்பு மனையாள் சரஸ்வதி அம்மையார் அவர்கள் உடுவில் மகளிர் கல்லூரியில் தமிழ், நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரியையாக விளங்கி ஓய்வு பெற்றவர்.

பேராசிரியர் அவர்களது நகைச்சுவை உணர்வென்பது அவரோடு கூடப்பிறந்த ஒன்று என்று கூறலாம். அது கரவெட்டி மண்ணுக்குரிய மண்வாசம் என்றும் கூறலாம். இவ்வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவரிடம் தமிழை சிறப்புக் கலையாகவும் பின்னர் முதுமாணிக் கற்றையாகவும் பயின்றவன் என்ற வகையிலும் அவர் பிறந்த வடமராட்சி மண்ணைச் சேர்ந்தவன். அவர் பிறந்த கரவெட்டி மண்ணைப் புகுந்த இடமாகக் கொண்டவன் என்ற வகையிலும் இதனை அனுபவிக்கும் பேறு பெற்றவர்களில் நானும் ஒருவன் குறிப்பாக அவருது திருமணம் பற்றி அவர் நகைச் சுவையாக குறிப்பிடும் போது எனக்கு நாக்கிலும் சரஸ்வதி இருக்கிறாள்



நெஞ்சிலும் சரஸ்வதி இருக்கிறாள் என்றும் நான் வல்லைப் பாலத்துக்கு அங்காலை பிறந்து பண்ணைப் பாலத்துக்கு அங்காலை பெண் எடுத்தவன் என்று கூறிக்கொள்வார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழை சிறப்பாகக் கற்ற இவர் பின்னர் அங்கேயே தமிழ்த்துறை விரிவுரையாளராகி பின்னர் தமிழ்த்துறை தலைவராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். மரபிலக்கியம், நாட்டரியல், 19ஆம் நூற்றாண்டு ஈழத்து இலக்கியம் போன்ற துறைகளில் அதிக தாடனம் செய்து கொண்டவர். தான் என்றைக்கோ படித்த மரபிலக்கிய பாடல்களை எல்லாம் மனனமாக ஒப்புவிக்கும் திறன் படைத்தவர். இரட்டுற மொழியும் நகைச்சுவைகளால் எம்மையெல்லாம் சிரிக்க வைப்பவர். மிகச்சிறந்த மேடைப் பேச்சாளர், மரபு கவிதைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடந்த பல தமிழியல் ஆய்வு மாநாடுகளில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை சமர்ப்பித்த சிறப்புக்குரியவர்.

எப்போதும் தான் பிறந்த கரவெட்டி மண்ணின் கிராமிய வாழ்வியலை மறக்காது எங்கு சென்றாலும் அந்த மண்ணின் சிறப்புகளை எடுத்துச் சொல்பவர். தற்போது, திருநெல்வேலியில் வசித்தாலும் இன்றும் கரவெட்டியில் இடம்பெறும் தனது உறவுகளின், நண்பர்களின் இன்ப, துன்பங்களில் கலந்து சிறப்பிக்கும் பண்புடையவர். இன்றைய தலைமுறை மறந்து போன பல விடயங்களை அவரது வாயினால் கேட்பதே தனிச்சுவை. தனக்கென தலைமுறைகள் கடந்த மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்கியவர்.

டான் தொலைக்காட்சியை பொறுத்தவரை அதன் நிகழ்ச்சிகளான "கவிதைகள் சொல்லவா", சங்கப் பலகையின் "நிலையும் நினைப்பும்", "நல்ல தமிழ் செய்வோம்" போன்ற நிகழ்ச்சிகளில் இந்த வயதிலும் கலந்து தன்னுடைய அனுபவங்களை - இலக்கியப் புலமையை வெளிப்படுத்திய சிறப்புக்குரியவர்.

தமிழ் கூறும் நல்லுலகத்துக்கும் ஈழத்து தமிழியலுக்கும் இவர் ஆக்கி அளித்த - தொகுத்தளித்த அருங்கொடைகளாக "வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும்", "ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி", ஈழத்துத் தமிழ் உரை மரபு, யாழ்ப்பாணத்து வாழ்வியல் கோலங்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் தமிழ் கல்வி (சரஸ்வதி அவர்களுடன் இணைந்து எழுதியது), யாழ்ப்பாணப் பண்பாடு மறைந்தவையும் மறந்தவையும், ஈழத்துத் தமிழ் உரை மரபு, சொல்லினால் ஒரு மாளிகை (கவிதைத் தொகுதி) பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்வி வித்துவ சிரோன்மணி கணேசையரின் வாழ்வும் பணியும், அகநானூறு (களிற்று யானை நிரை - பதிப்பு), யாழ்ப்பாணத்துக் கல்வி வளர்ச்சியில் இந்திய ஆசிரியர்களின் பங்களிப்பு, (சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது - சோ. ப. அவர்களால் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது) ஆறுமுகநாவலரது பணிகள் பற்றிய தொகுப்புநூல், சிறுவர்களுக்கான மேடைப் பேச்சு பயிற்சி நூல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். 2005ஆம் ஆண்டுக்குரிய சம்பந்தர் விருதையும் இவர் வென்றுள்ளார். மேலும் பல விருதுகளையும் வென்றுள்ளார். இன்னும் பல சிறப்பான படைப்புகளை இவரிடமிருந்து எதிர்பார்க்கிறோம். எம் தமிழ் ஆசான் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரைப் பற்றிய இவ் ஆக்கத்தை எழுத சந்தர்ப்பம் வழங்கிய டான் தொலைக்காட்சி குழுமத்தினருக்கும் விழாக் குழுவுக்கும் நன்றி கூறி இப்பதிவை நிறைவு செய்கிறேன்.

**வேல்நந்தகுமார்,**
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

எமது விளம்பரதாரர்கள்

Dialog, Commercial Credit, SLTMobitel, Ritzbury, DPMC, Nippon Paint, afc, Samaposha, People's Bank, Little Lion, Crescent, Elephant House, CBL Lanka Soy, Cargills, db, Fonterra, gsk, HNB, Nestle, Singer, Swadeshi, Maliban, Revlon, Abans, Janatha, NLB, Signal, BOC, AIA, Commercial Bank, Domino's, Dulux let's colour, LOLC, Pepsi, Munchee, SLIC Life, Unilever, Reckitt Benckiser, Atlas

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் மாண்புறு சத்திரசிகிச்சை நிபுணர்

இலங்கை முழுவதும் நன்கு அறியப்பட்டவரும் வடக்கு மாகாணத்தின் முதன்மை சத்திர சிகிச்சை நிபுணருமான பேராசிரியர் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ரவிராஜ்போர் நெருக்கடிகள் சூழ்ந்திருந்த காலப்பகுதியில் எமது தாயகப் பிரதே சத்தில் தங்கிநின்று மக்களுக்கு சேவையாற்றிய மகத்தான மருத்துவர்களுள் முதன்மையானவர். மருத்துவத் துறை சார்ந்து அவரது வகிபாகம் பன்மைத் துவ பரிமாணம் மிக்கது. சத்திரசிகிச்சை நிபுணர், பேராசிரியர், போதானா வைத்தியசாலையின் பணிப்பாளர், இலங்கை மருத்துவ பேரவையின் செயற்குழு உறுப்பினர், மருத்துவக் கற்கைக ளுக்கான உயர் பட்டப்படிப்புகள் நிறு வனத்தின் சபை உறுப்பினர், சத்திர சிகிச்சைத்துறைசார் உயர் பரீட்சைக ளின் பரீட்சகர், மருத்துவ பீடத்தின் பீடாதிபதி என அவரது வாண்மைத்துவ வகிபாகங்களும் தலைமைத்துவ வகிபாகங்களும் நீண்ட வரிசையைக் கொண்டன.

தமிழர்கள் மத்தியில் தம்மை அர்ப் பணித்து வாழ்ந்த வைத்திய நிபுணர்கள் பலர் வரலாற்றில் இடம் பிடித்துள்ளனர். அவர்கள் எல்லோர் மத்தியிலும் சத்திரசிகிச்சைப் பேராசிரியர் ரவிராஜ் தனித்த அடையாளம் கொண்டவராக திகழ்கின்றார். மருத்துவத்துறை சார்ந்த சிகிச்சையியல், கற்பித்தல் மற்றும் நிர் வாகம் என மூன்று தளங்களில் தனது தடத்தை ஆழமாக பதிந்திருக்கின்றார் பேராசிரியர் அவர்கள். அதற்கும் அப்பால் அவரது இலகுவாக சமூகமயமாகும் தனித்துவக் குணம் அவரை இன் னும் வேறுபடுத்திக்காட்டும் பண்பு மிக்கது. பல சமூக மட்ட அமைப்புக்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு எவர்க்கும் எளியனாகவும் அணுகுவதற்கு இலகுவான மனிதராகவும் அவர் இருப்பது அவருக்கேயுரித்தான தனி அடையாளம்.

பேராசிரியர் ரவிராஜ் அவர்கள் 1959ஆம் ஆண்டு யூலை மாதம் 18ம் திகதி சுன்னாகத்தில் நன்கு அறியப்பட்ட மருத்துவர் சுப்பிரமணியம் மற்றும் இரட்ணமணி தம்பதிகளின் ஏகபுதல்வனாக பிறந்தார். தந்தையாரின் பணி நிமிர்த்தம் அனுராதபுரத்தில் முன்பள்ளிக் கல்வியைக் பெற்றுக் கொண்டபேராசிரியர் அவர்கள் பின் னர் தமது பூர்விக இடத்துக்கு திரும்பி உடுவில் மகளிர் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் கற்றார். அதன் பின்னர் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியில் இடைநிலைக் கல்வி மற்றும் உயர்தரத்தைக் கற்று அங்கிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு தெரிவானார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத் தின் இரண்டாவது அணி மாணவராக 1979 இல் இணைந்து கொண்டஅவர் 2015ஆம் ஆண்டு அதே பீடம் பிரசவித்த மாணவன் ஒருவர் அப் பீடத்தின் பீடாதிபதியாகும் வரலாற்றுச் சந்தர்பத் தின் வழி மருத்துவபீடத்தின் பீடாதிபதியாகினார். இரண்டு தடவைகள் போட்டியின்றி மருத்துவபீட பீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட அவர் 2021 வரைபீடாதிபதிக் கட மைளை ஆற்றினார்.

மருத்துவபீடத்தில் கல்விகற்கும் காலத்தில் மிகவும் துடிப்புள்ளவரகவும் ஆற்றல் உள்ளவராகவும் விளங்கிய பேராசிரியர் அவர்கள் பேராசி ரியர்கள் கருணை நாதன், வேற் பிள்ளை மற்றும் சிறிஸ்கந்த வர்மன் ஆகியோரிடம் சத்திரசிகிச்சைக் கல்வியையும் வைத்திய நிபுணர் கள் திருமதி. எஸ்.கணேச மூர்த்தி, சிறிகரன், நாகேஸ் வரன் மற்றும் ரஞ்சதயாளன் ஆகியோரிடம் சிகிச்சை மருத்துவவியல் கற்கைகளையும் பயின்றார். பேராசிரியர்கள் சிவசூரியா மற்றும் தயா ளசேகரன் ஆகியோரிடம் மகப்பேற்று பெண் நோயியல் கல்வியையும் பேராசிரியர் இராமதாஸ் மற்றும் வைத்தியர் வாம தேவன் ஆகியோரிடம் குழந்தை வைத் தியக் கல்வியையும் கற்றார்.

1984ஆம் ஆண்டு இரண்டாம் வகுப்பு மேல் சித்தியுடன் தனது மருத் துவப் பட்டப் படிப்பை பூர்த்தி செய்த பேராசிரியர் அவர்கள் 1985 ஆம் ஆண்டு



யாழ்ப்பாண போதனா வைத் தியசாலையில் தனது மருத்துவ உள்ளகப் பயிற்சிக்காக இணைகின் றார். இதுவே அவரது வாழ்வின் திருப்பு முனையான காலம். அங்கு சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் மற்றும் பொது வைத்தியநிபுணர் ஜேம்ஸ் ஆகியோரி டம் பயிற்சி பெற்றார். அரசாங்க மருத்துவராக இணைந்த பின்னர் பேராசிரியர் கருணைநாதன் வைத்திய அநிபுணர்கள் கணேசரட்ணம், பொன்னம்பலம் மற்றும் சேவியர் ஆகியோரின் கீழ் சிரேஸ்டவிடுதிப் பொறுப்பு வைத்தியராகப் பணியாற்றினார்.

சத்திரசிகிச்சைநிபுணர் பொன்னம் பலத்திடம் அவர் பெற்றுக் கொண்ட பயிற்சியும் வழிகாட்டலும் சத்திரசிகிச்சையியல் துறைசார்ந்த ஆர்வத்தை தோற்றுவிக்க அந்தத்துறை சார்ந்த பட்டப் பின் படிப்பைத் தொடரும் முயற்சியில் வெற்றிபெற்ற பேராசிரியர் ரவிராஜ் அவர்கள் யாழ்ப்பாணத்தின் முதலாவது சத்திரசிகிச்சையியல் பதிவாளர் எனும் தகமையைப் 1997 இல் பெற்றுக் கொண்டார். அந்தத் தகமையுடன் திறன் வாய்ந்த சத்திரசிகிச்சை நிபுணர் கணேசரட்ணத்தின் கீழ் தனது சத்திரசிகிச்சைப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். தனது வெளிநாட்டுப் பயிற்சியை அவுஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூரில் நிறைவு செய்த அவர் அதன் பின்னர் யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலையின் சத்திரசிகிச்சை நிபுராக 1999ஆம் கடமையாற்றத் தொடங்கி 2024 இல் ஓய்வு பெற்றார்.

போர் நெருக்கடிகள் மிகுந்த காலப் பகுதியில் பொருளாதாரத் தடைகள், மருத்துவ உபகரணங்களின் பற்றாக் குறை, மருந்துகளுக்கான கட்டுப்பாடு மற்றும் தட்டுப்பாடு, நிர்வாகரீதியான இரட்டைச் சூழல், தொலைத் தொடர்பு வசதி கள் இன்மை என பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் நின்று தனது அயராத சேவையை வடக்கு மக்க ளுக்கு வழங்கினார். அதிலும் தகுதி வாய்ந்த மருத்துவ நிர் வாகிளுக்கு பற்றாக்குறை யான அக் கால கட்டத்தில் 2005 தொடக்கம் 2007 வரை போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். அதன் பின்னர் 2012 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் சத் திரசிகிச்சையியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையா ளராக இணைந்து கொண்ட அவர் பின்னர் துறைத் தலைவர் மற்றும் இரண்டு தடவைகள் மருத்துவ பீடாதிபதிஎனும் தகமைகளைப் பெற்றார். நிறைவில் சத்திரசிகிச்சைத் துறை யின் இருக்கைப் பேராசிரியராக நியமனம் பெற்றார். அவரது தலமைத்துவம் மருத்துவபீடத் தின் மற்றுமொரு மறுமலர்ச்சிக் கால மாக அமைந்தது. பீடம் தன்னை பௌதி கவள ரீதியாக மேம்படுத்திக் கொண்டது.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான மருத்துவக் கல்விஅனுபவத்தில், இலங்கையின் பலபகுதிகளில் ஆயிரக்கணக்கான பட்டப்படிப்புமற்றும் மேற்படிப்பு மாணவர்களை பயிற்றுவித்து வழிநடத்தி உள்ளார். கொழும்புப் பல்கலைக்கழகத் தின் மருத்துவக் கற்கைகளுக்கான பட் டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PGIM) பயிற்றுநர், பரீட்சகர், பாடத்திட்ட வடிவமைப்பாளர் மற்றும் ஆய்வுவழி காட்டியாககடந்த 23 வருடங்களாகச் செயற்படுகின்றார். பொது அறுவைச் சிகிச்சை பட்டபபின் படிப்பு பாடத் திட்டங்களை உருவாக்கி, பல சத்திரசி கிச்சை நிபணர்களையும் அவர்களது ஆய் வுகளையும் மேற்பார்வை செய்துள்ளார். மருத்துவப் பட்டப்படிப்பு சார்ந்துதிறன் அடிப்படையிலான மதிப்பீடுகள் போன்ற நவீனகற்பித்தல் - மதிப்பீட்டு முறைகளை அறிமுகப்படுத்தினார். சத்திரசிகிச்சை, காயப்பராமரிப்பு, மருத்துவக் கல்விமற்றும் பாடத்திட்ட மேம் பாடுதொடர்பான 15க்கும் மேற்பட் ட துறைகளில் வளவாளராகப் பங்கேற்றுள்ளார்.

மருத்துவத்துறைசார்ந்த ஆய்வுத்து றையிலும் அவர் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கியுள்ளார்.முழுமை யான ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஆய் வுச் சுருக்கங்கள் உட்பட 55 ஆய்வு வெளியீடுகளை வெளியிட்டுள்ளார். பல் வேறு தேசிய மற்றும் சர்வதேச மாநாடு களில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளதுடன் பட்ட மற்றும் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கான மூன்று சத்திரசி கிச்சை துறைசார் பாடநுல்கள், சமூகசுகாதார விழிப்புணர்வுக்கான ஆறு நூல்களையும் எழுதியுள்ளார். மேலும் இலங்கை சத்திரசிகிச்சையாளர் கல்லூரி வெளியிட்ட *History of Surgery* உள்ளிட்ட ஐந்து மருத்துவ நூல்களில் அத் தியாயங்களையும் அவர் எழுதியுள்ளார்.

பல்வேறுநிறுவனங்களின் வளர்ச்சி யிலும் அவர் முக்கியபங்கு வகித்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவகட்டிடம், 100 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமதிப்புள்ள அறுவைச் சிகிச்சை உபகரணங்கள், பத்துமாடிகள் கொண்ட சிகிச்சையியல் ஆய்வுக் கட்டடம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ, கல்வி மற்றும் ஆராய்ச்சி வசதிகளின் மேம்பாட்டில் அவர் நேரடியாக ஈடுபட் டுள்ளார். இங்கிலாந்தின் சத்திரசிகிச்சைக்கான றோயல் கல்லூரி மற்றும் சிங்கப்பூர் சுகாதார சேவைகள் ஆகிய வற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்க ளைஏற்படுத்தி, இலங்கை மருத்துவர்களுக் கான சர்வதேசபயிற்சிமற்றும் ஆராய்ச்சி வாய்ப்புகளை விரிவுபடுத்து வதில் தனது பங்களிப்பை நல்கியுள்ளார்.

தேசிய அளவில், இலங்கை மருத்து வசபையின் பலகுழுக்களில் பணியாற்றி, தொழில்முறை ஒழுக்கம், உள்ளகப் பயிற்சி மற்றும் வெளிநாட்டு மருத்துவ பீடங்களின் அங்கீகாரம் தொடர் பான பணிகளில் பங்களித்துள்ளார். மேலும் யாழ்ப்பாண மருத்துவ சங்கம், இலங்கை சத்திரசிகிச்சையாளர் கல்லூரியின் யாழ்ப்பாணக் கிளை, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை, மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் தலைவராக இருந்து பல கல்வி அமர்வுகள், வேலைப்பட்டறைகள் மற்றும் மாநாடுகளை ஏற்பாடு செய்துள்ளார்.

அவரது சேவைகளுக்கான அங்கீகா ரமாக, 2014 ஆம் ஆண்டு "சிறப்பு சேவைக்கான" இலங்கை சத்திர சிகிச் சையாளர் கல்லூரி விருது, யாழ்ப்பாண மருத்துவபீடபழையமாணவர் விருது கள், புனித ஜோன்ஸ் ஆம்புலன்ஸ் சேவைபதக்கங்கள் உள்ளிட்ட பல கௌரவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மருத்துவத்துறைசார் உத்தியோக பூர்வ ஓய்வுக்குப் பின்னரும் ஓயாதுச மூக நன்மை கருதி உழைக்கும் மனித ராகஅவர் என்றும் திகழ்கிறார். வடக்கு மருத்துவத்துறையில் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவிராஜ் அவர்கள் என் றும் தவிர்க்கமுடியாத ஆளுமையாக காலத்தால் என்றும் நினைவுகொள் ளப்படுவார் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருதுடன் வெள்ளியும் பவளமும்!

டான் டி.விக்கு இது வெள்ளிவிழா ஆண்டு! கோகிலா மகேந்திரனுக்கு இது பவள விழா ஆண்டு!

டான் தொலைக்காட்சி தனது 25-வது ஆண்டு வெள்ளிவிழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், ஈழத்து மண்ணின் 12 மகத்தான ஆளுமைகளுக்கு '39 வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கி கௌரவிக்கிறது.

ஒரு ஊடகம் 25 ஆண்டுகளைக் கடப்பது என்பது சாதாரணமானதல்ல. அது ஒரு தலைமுறையையே செதுக்கிய பயணம்.

இந்தச் சாதனைப் பயணத்தில், தகுதியான ஆளுமைகளை அடையாளம் கண்டு கௌரவிப்பது டான் டிவியின் முதிர்ச்சியைக் காட்டுகிறது.

இந்த வெள்ளியின் வெற்றியில் ஒரு பவளக்கல்லாக ஜொலிப்பவர் மதிப்பிற்குரிய திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள்.

கோகிலாமகேந்திரன் அவர்களுக்கு வழங்கப்படவுள்ள இந்த விருது, அவரது பல்லாண்டுகால அர்ப்பணிப்புக்கும் ஈடு இணையற்ற உழைப்பிற்கும் சூட்டப்படும் மணிமகுடம் ஆகும்.

கல்வி, கலை, இலக்கியம், உளவியல் எனப் பல துறைகளில் ஒளிரும் இவரைப் போன்ற ஆளுமைகளை டான் டிவி கௌரவிப்பது எமது தலைமுறைக்கு ஒருபெரியபிரகாசம்.

திருமதி கோகிலா மகேந்திரன், எழுத்தாளர், நாடகக் கலைஞர், ஓய்வுபெற்ற வலிகாமம் மண்டல துணைக் கல்வி இயக்குநர், உளவியல் ஆலோசகர், டான் டி.வி உளவியல் நிகழ்ச்சித் தயாரிப்பாளர், மகாஜனா கல்லுரி தந்த இலக்கியத் தாய்.

தமிழ்த் தாயின் செம்மொழிப் பண்பாட்டுக் களஞ்சியத்தில், பல்துறைச் சாதனைகளால் தம்மை ஒரு சிகரமாக உருவாக்கிக் கொண்ட ஒருசிறப்புமிக்க ஆளுமை.

மேடைநாடகங்கள் ஊடாகச் சமூகமாற்றத்தைப் பேசியதோடு, டான் டி.வியின் உளவியல் நிகழ்ச்சிகள் மூலம்இல்லங்கள் தோறும் ஆறுதல் தரும் தேவதை.

ஒருகையில் பேனா, மறு கையில் உளவியல் ஆலோசனை, நெஞ்சமெல்லாம் தமிழ் என கோகிலா வாழும் வாழ்வு - சாதனை செய்யத் துடிக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒருபாடப்புத்தகம்.

வலிகாமம் மண்டலத் துணைக் கல்வி இயக்குநராக அவர் ஆற்றியபணி, வெறும் நிர்வாகம் மட்டுமல்ல அதுஒருதலைமுறைக்கானவழிகாட்டல்.



இலக்கியம், நாடகம், கல்வி, உளவியல் ஆலோசனை எனப் பரந்துபட்ட தளங்களில் ஆழமான முத்திரை பதித்த கோகிலா, மகாஜனா கல்லூரி ஈன்றெடுத்த இலக்கியத் தாயாக, ஆயிரக்கணக்கான மாணவர்களின் எழுத்தாற்றலுக்கு நீரூற்றிய நற்பணி ஈடு இணையற்றது.

ஈழத்து இலக்கிய உலகில் ரூகூ 39 பெண்ணியக் குரலாகவும் ரூகூ 39 திகழ்பவர் கோகிலா மகேந்திரன். அவரது படைப்புகள் பல சமூக மாற்றங்களுக்கு வித்திட்டுள்ளன. சிறுகதை, நாவல், நாடகம் எனத் தமிழ் இலக்கியத்தின் எல்லாத் துறைகளிலும் அவர் முத்திரை பதித்துள்ள அவரது எழுத்துக்கள் எப்போதுமே ஓய்வெடுப்பதில்லை. கோகிலா மகேந்திரனின் சமூக நோக்கும், துணிச்சலான எழுத்தும் பாராட்டுக்குரியவை. விருது பெறுவது குறித்து அவர் ஒரு உளவியல் கட்டுரை எழுதினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! ஏனெனில், அவருக்கும் தமிழுக்கும் இடையிலான உறவு அத்தகு ஆழமானது.

"இலக்கியத் தாய்" என்று சும்மாவா சொன்னார்கள்?

"தாய்" என்றால் அன்பு மட்டும் போதாது, அறிவும் வேண்டும் என்பதற்கு கோகிலா ஒரு சிறந்த உதாரணம்.

"மாணவர்கள் தவறு செய்தால், மற்றவர்கள் தண்டனை கொடுப்பார்கள். இவரோ அந்தத் தவறையே ஒரு சிறுகதையாகவோ அல்லது நாடகமாகவோ எழுதி, அந்த மாணவனையே அதில் நடிக்கவைத்து விடுவார்." என்றொரு கதையும் அரசல்புரசலாக உண்டு!

கோகிலா மகேந்திரன் சிறந்த நாடகக் கலைஞர். மேடையில் அவர் ஏற்றாத வேடங்களே இல்லை எனலாம். நிஜ வாழ்க்கையிலும் அவர் ஒரு "39மல்டி-டாஸ்கிங்" கலைஞர்.

ஒருபுறம் கல்வித்துறையின் கம்பீரம், மறுபுறம் எழுத்தாளரின் நிதானம். இவர் கோப்புகளைப் பார்த்ததை விட, மனித மனங்களை வாசித்ததே அதிகம்.

டான் டி.வியில் அவர் நடத்தும் உளவியல் நிகழ்ச்சிகள் மிகவும் பிரபலம் என்று பிரபலமானவர்களே சொல்வார்கள்.

நாம் தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, அவர் திரையில் தோன்றி "உங்களுக்கு ஏதோ கவலை இருக்குதில்லையா?" என்று கேட்கும்போது, "அடடா! எப்படிச் சரியாகக் கண்டுபிடித்தார்?" என்று பார்த்தவர்களுக்கு தோன்றும்.

உண்மையில், கோகிலா மகேந்திரன் அவர்களிடம் பேசப்போனால் மிகக் கவனமாக இருக்கவேண்டும். நாம் சாதாரணமாகப் பல் துலக்கிக் கொண்டிருப்போம், அதைவைத்துக்கொண்டே "ஏன் இன்று இடது பக்கமாகத் துலக்குகிறீர்கள்? உங்கள் ஆழ்மனதில் ஏதோ போராட்டம் நடக்கிறது போலிருக்கே!" என்று ஒரு நீண்ட உளவியல் விளக்கம் கொடுக்கும் சக்தி அவரிடமுண்டு. அவரின் முன்னால் அமர்ந்து பேசுவது என்பது, ஒரு எக்ஸ்-ரே மெஷினுக்கு முன்னால் நிற்பது போன்றது!

ஆழ்மனதை அப்படியே பிரதிபலித்து விடுவார்!

மாணவப் பருவத்திலேயே, தெளிவான கற்பித்தல் திறன், அசைக்கமுடியாத ஒழுக்கம், குறிப்பிடத்தக்க கிரகிக்கும் திறன் மற்றும் சிந்தனையின் கூர்மை ஆகியவற்றால் தம்மை வகுப்பின் தனிப் பெருமையாக்கிக் கொண்டவர் கோகிலா.

உளவியல் ஆலோசகராக, மனிதமனத்தின் சிக்கல்களைத் தீர்ப்பதில் ஆராய்ச்சி மனப்பான்மையுடன் செயற்படும் கோகிலா எழுபத்தைந்து வயதுஎனும் கட்டத்தைஅடையும் இந்த நேரத்தில், அவரது வாழ்க்கை, ஒரு பன்முகத்திறனாளர் எவ்வாறு ஒரு சமூகத்தின் அறிவுச் செல்வத்தைவளப்படுத்தமுடியும் என்பதற்கான ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டு.

இலக்கியம், கல்வி, நாடகம், உளவியல் எனும் நான்கு தூண்களில் நிற்கும் இவரது சாதனைக் கோயில், வரலாற்றின் நல்ல பக்கங்களில் என்றென்றும் நிலைக்கும்.

ஈழத்து மண்ணின் கலை, பண்பாடு மற்றும் கல்வி வளர்ச்சிக்கு கோகிலா ஆற்றிய அரும்பணிகளை அங்கீகரிக்கும் இந்த விருது, விருதுக்கே பெருமை சேர்க்கிறது.

**எஸ். ஜெகதீசன் - கனடா**

# ஆசிரியத்துறைசார்ந்த வாழ்நாள் சாதனையாளர் வி.எஸ்.குணசீலன்

உலகிற்குப் பொருந்தும் உன்னத மனிதர்களைச் செதுக்கும் சிற்பிகளாக நல்லாசிரியர்கள் போற்றப்படுகின்றனர். ஒவ்வொரு மனிதனது வாழ்வியலிலும் ஒரு முன்மாதிரி மனிதனாவது காணப்படுகையில் பெரும்பாலும் அவர் ஆசிரியர் ஒருவராக விளங்குவதே வழமை. இவ்வகையில் எம்மண்ணில் கற்று உயர்ந்து விளங்கும் பலருக்கான உதாரண புருஷர் திரு. வி.எஸ். குணசீலன் ஆசிரியர் என்றால் மிகைப்படாது.

1959.10.26 கரவெட்டியில் வல்லிபுரம் சின்னத்தம்பி - சிவகாமி தம்பதியரின் மகனாகப் பிறந்த இவர் நெல்லியடி மத்திய கல்லூரியின் பழைய மாணவர். உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானம் பயிலும் காலத்தில் தனது 17 ஆவதுவயதில் சகோதரனை இழந்து சில மாதங்களுள் அரச உத்தியோகத்தராக விளங்கிய தந்தையை 1977இல் இடம்பெற்ற இனவன் முறைக்குப் பறிகொடுத்தார். இருப்பினும் கல்வியைப் பெறுவதில் தளர்வுறாது - அன்னையின் வழிகாட்டலில் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞானப் பட்டதாரியானார்.

அரச சேவையில் உயிரியல் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரா கவல்வை சிதம்பரக் கல்லூரி மற்றும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை என்பவற்றில் பணியாற்றியதோடு 20 ஆண்டுகளுக்கும் மேலாக பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைகளில் விஞ்ஞானத்துறை சார்ந்த ஆசிரியர்களுக்கு உயிரியல் போதித்து 2019 இல் அரசபணியில் இருந்து இளைப்பாறுகை பெற்றார்.

திரு. வி.எஸ்.குணசீலன் பிரபலமாக அறியப்படுவது அவரது தனியார் துறைசார்ந்த உயர்தர மாணவர்களுக்கான உயிரியல் கல்விப் போதனையாலாகும். 1986 தொடக்கம் இன்றுவரை வடமராட்சி மற்றும் யாழ் நகரைமையப்படுத்திய கல்வி நிலையங்களில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்குப் போதித்துள்ளார். தாவரவியல் மற்றும் உயிரியல் போதித்து வருகின்றார் என்பதைக் காட்டிலும் வாழ்க்கையின் மகிமையை உணரச் செய்கின்றார் என்றே அவரது மாணவர்கள் பலரும் குறிப்பிட்டுப் பெருமை கொள்கின்றனர் இன்று மருத்துவத்துறை உள்ளடங்கலாக பல்வேறு உயர்பதவிகளை அலங்கரிப்போரில் கணிசமானோர் ஆசிரியர்களிடம் கற்றமையைப் பெருமையாகக் குறிப்பிடுகின்றனர்.



போர்க்காலக் கல்வி என்பது இன்றைய தலைமுறை அறியாத ஒன்று. நாளாந்தம் எதிர்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சுகள் விமானத் தாக்குதல்கள் குண்டுவெடிப்புகள் வாழ்வாதார நெருக்கீடுகள் என்பவற்றின் மத்தியில் கூட ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டபோது வடபுலக் கல்விநிலை வீழ்ச்சிகண்டிருக்கவில்லை என்பது நாம் அறிந்ததே. இதற்குப் பின்புலமாக அன்றைய ஆசிரியர்களே பிரதான காரணராக விளங்கினர். இவ்வாறான ஆசிரியர்கள் சிலருள் அன்றுபோல் இன்றைய மாணவர்களும் வாஞ்சையுடன் கற்கும் வண்ணம் கல்வி வழங்கும் ஆசான் என்றால் எல்லோ ரது பார்வையும் குணாசேரை நோக்கியேகுவியும்.

அதனது நன்றி வெளிப்பாட்டை மாணவர்கள் கொண்டாடி வருகின்றனர். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக 2017 இல் கனடாவிற்கு அழைக்கப்பட்டு சமுதாயசிற்பி என்ற விருது வழங்கி கௌரவித்தனர். இதே போன்று 2018 இல் இலண்டனில் மாணவர்கள் ஒன்று சேர்ந்து பெருமெடுப்பிலான விழா ஒன்றை முன்னெடுத்தனர். 2019இல் அவுஸ்திரேலியாவில் சிட்னி மெல்பேர்ண் பிறிஸ்பேர்ண் கன்பரா எனப் பல்வேறு இடங்களிலும் கௌரவிப்புகளை மேற்கொண்டனர்.

இவரது முன்மாதிரியான ஆசிரியத்துவத்திற்கான கௌரவமாக யாழ்ப்பாண மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழு வழங்கும் 2025 ஆம் ஆண்டுக்கான யாழ்விருது ஆசிரியர் திரு. வி. எஸ்.குணசீலன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை மன்றத்தின் கௌரவபோஷகராக விளங்கும் இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடப் பழைய மாணவர் சங்கத்தின் தற்போதைய தலைவராக விளங்கி பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் பொன்விழாவை முதல் நிகழ்வாக முன்னெடுத்த முன்னோடியாகவும் விளங்குகின்றார்.

வடமராட்சி மருத்துவர்கள் இணைந்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் மருத்துவர்களுக்கான ஓய்வு விடுதியை அமைத்தபோது தமக்கு உயிரியலைக் கற்பித்ததம்பிராஜா, குணசீலன் ஆகிய இரண்டு ஆசிரியப் பெருந்தகைகளின் பெயர்களைக் கல்லில் பொறித்து அவர்கள் இருவரைக் கொண்டு விடுதியைத் திறந்து வைத்தமைகூட ஆசிரியத்துவம் வாழ்கிறது என்பதற்கானசான்று ஆகும்.

25 ஆண்டுகள் காலவரலாற்றைக் கொண்டடான் தொலைக்காட்சி ஆசிரியத்துவத்திற்கும் முக்கியத்துவம் வழங்குகின்றது. இதற்கென கல்வி தொலைக்காட்சி என்ற அலைவரிசையைத் தொடக்கி இன்றுவரை வெற்றிகரமாக இயக்கிக் கொண்டிருக்கின்றது. இச்சூழலில் பலரது வாழ்விலும் ஒளியேற்றிய நல்லாசான் ஒருவருக்கு ஆசிரியத்துறைக் கானடான் தொலைக்காட்சி வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருதைதிரு. வி. எஸ்.குணசீலன் அவர்களுக்கு வழங்குவது சாலச்சிறந்ததாகும்.

உலகோர் வாழ்த்துகளுடன் நீண்ட ஆயுளுடனும் நிறைந்தவளங்களுடனும் வாழ்வாங்குவாழப் பிரார்த்தித்துஎங்கள் அன்புஆசானுக்கு இனிய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சந்திரமௌலீசன் லலீசன்**
**(ஆசானின் மிகப்பழையமாணவன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும்போது வாழ்த்துவோம்!

மண்ணால் மனிதனுக்குப் பெருமை, அவ்வாறே மனிதனாலும் மண்ணுக்குப் பெருமை.

எம்மிடை பயன் தரும் பனைகள் பல உள. பனையை நாம் கற்பகதரு எனப் போற்றிப் புகழ்கிறோம். அத்தகைய பனைக்கு ஒப்பிடக் கூடிய ஒருசிலரே நம் நடுவே வாழ்கின்றனர். அவர்களுள் ஒருவராகக் கோடிட்டுக் காட்டக் கூடியவர் மறவன்புலவு கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதே அவரின் தாரகமந்திரம். தமிழுக்கு மட்டுமன்று, சைவத்துக்கும் தொண்டாற்றுகின்ற அவ்வாறான தொருமனிதரைக் கற்பதருவுக்குஒப்பிடுவதில் பெருமை எமக்கே.

பொதுப் பணிக்கு என்ன வேண்டும்? இரவு பகல் என்று பாராது, தொண்டாற்றுகின்ற பக்குவம் வேண்டும். அஃது அவரிடம் உள்ளமுதன்மைமிக்கபண்பு.

மறவன்புலவு க. சச்சிதானந்தன் 1941 திசம்பர் 5 அன்று யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் மு. கணபதிப்பிள்ளை, தங்கம்மா ஆகியோருக்குமகனாகப் பிறந்தவர்.

மறவன்புல வுசகலகலாவல்லி வித்தியாசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பள்ளிப் படிப்பைமுடித்துக் கொண்டார். 1963ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் விலங்கியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார்.

இந்தியஅரசின் புலமைப் பரிசில் பெற்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் கடல்சார் உயிரியலில் முதுகலைப் பட்டத்தை 1966இல் பெற்றார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மீண்டும் ஒரு மாணவனாக ஈராண்டுகள் பட்டமேல் படிப்பு. விலங்கியல் முதன்மைப் பாடம். கடல் உயிரியல் துணைப் பாடம் என அவர் கற்கைகள் நீண்டன.

அப்போது தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 1500 இலங்கை மாணவர் கல்விகற்றனர். இலங்கை மாணவர்களுக்கென ஒரு சங்கம். அதற்கு இவரை அழைத்ததோடு 1964 ஆவணியில் அக்கூட்டத்தில் தலைவராக ஒரே மனதாக இவரைத் தேர்ந்தெடுத்தனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் பட்டதாரி மாணவர்களுக்கு விரிவுரையாளராகப் பணியாற்றியவர். உள்ளூராட்சிஅமைச்சராக இருந்தமாண்புமிகு மு. திருச்செல்வத்துக்குத் தனிச் செயலாளராகக் கடமையாற்றியவர். கொழும்பில் இலங்கைக் கடற்றொழில் திணைக்களத்தில் அறிவியலாய்வாளராகக் கடல்-சார் அறிவியல் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டவர்.

1969இல் டோக்கியோசென்றுகடல்சார் உயிரிவேதியியலில் பயிற்சிபெற்றார். 1973 இல் சிங்கப்பூர் நன்யாங்குபல்கலைக்கழகத்தில் கடல்சார் நுண்ணுயிரியல் பயிற்சிபெற்றார்.

1977ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் பாதிப்புற்றார். இலங்கைக் கடற்றொழில் திணைக்களத்தில் அறிவியலாய்வாளர் பணியில் இருந்து தானாக விலகினார்.

யாழ்ப்பாணத்தில் காந்தளகம் பதிப்பகத்தைத் தொடங்கினார். கை மணிக்கூடு வணிகத்திலும் ஈடுபட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இரண்டாண்டுகள் விலங்கியல் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

பின்னர் ஐக்கிய நாடுகள் ஆலோசகராக ஆசியா, ஆப்பிரிக்கா, பசிபிக் நாடுகளில் பணியாற்றினார். தமிழ் மொழி, விலங்கியல், கடற்றொழில் ஆகியதுறைகளில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவரது ஆய்வுக் கட்டுரைகள், தமிழ், ஆங்கிலம், யப்பான், பிரஞ்சு, அரபு, சுவாகிலிமொழிகளில் வெளி வந்தன.

1992ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

தென்னகத்தில், சென்னையில் 1980ஆம் ஆண்டில் காந்தளகம் என்ற பெயரில் பதிப்பகத்தைத் தொடங்கினார். கடந்த 45 ஆண்டுகளாகத் தமிழகத்தில் பதிப்பாளராக வெற்றி நடைபோடுகிறார். "பதிப்புத் தொழில் உலகம்" என்றமாத இதழை ஐந்தாண்டுகள் தொடர்ச்சியாக நடத்திவந்தார்.

இவர் ஒரு சிறந்த எழுத்தாளரும், பதிப்பாளரும் ஆவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுக் குழு மற்றும் நடுக் குழு உறுப்பினராக 1977-1979, 1986-1990, பின்னர் 2014 ஆம் ஆண்டிலும் பணி புரிந்தார். 2016 தொடக்கம் இலங்கை சிவசேனையின் தலைவராக உள்ளார்.

மின்னம்பலவெளியில் இவரது சாதனைகள் பல. தமிழ்நூல். காம் (*tamilnosl.com*)என்ற இணையதளத்தில் 35 ஆயிரத்திற்கும் மேலானநூல்களைப் பட்டியல் இட்டு, மின் வணிகத்தை நடத்தி வருகிறார்.

பன்னிருதிருமுறைகளைத் தேவாரம். ஆர்க் (*thevaaram.org*) இணையதளத்தில் பதிந்து, 120 நாடுகளில் நாள்தோறும் 20,000 சொடுக்காளருக்கு உதவுகிறார்.



பன்னிருதிருமுறைகளை ஆங்கிலம், இந்தி, சிங்களம், மலாய், யேர்மன், அசாமியம், பர்மியம், தாய்லாந்து, தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம், உள்ளிட்டமொழிகளில் மொழிபெயர்ப்பித்து இணையதளத்தில் வெளியிட்டுள்ளார்.

திருப்பதி தேவத்தானத்தின் மொழிபெயர்ப்பு ஒருங்கிணப்பாளராக உள்ளார். தமிழக ஆளுநரின் மொழிபெயர்ப்பு ஒருங்கிணப்பாளராகஉள்ளார்.

கடந்த 1957 - 1959 காலப்பகுதியில் தமிழரசுக் கட்சியின் வார இதழ் சுதந்திரனின் மாணவர் பக்கங்களில் எழுதத் தொடங்கியவர். அக்காலப் பகுதியில் கவிஞர் காசி ஆனந்தனும் அப் பக்கங்களில் எழுதிக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் அறப்போர் தொடங்கிய 1961 மார்ச்சு மாதத்தில், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்றவாறே தமிழகத் தலைவர்களிடம் ஆதரவு கேட்டார். கவிஞர் காசி ஆனந்தன் உள்ளிட்ட இலங்கை மாணவர்கள் பலருடன் சேர்ந்தார். இலங்கைத் தமிழர் அறப்போருக்கு ஆதரவாகச் சென்னைக் கடற்கரையில் ஒரு மாபெரும் கூட்டத்தை நடத்தத் திராவிடமுன்னேற்றக் கழகத்தைத் தூண்டியவர். அத்துடன் அதனை முன்னெடுக்க உதவியவர்.

வினோபாவே எழுதிய பகவத் கீதையின் தமிழாக்கம், உலூயிபிசரின் காந்தியின் வாழ்க்கை போன்றநூல்களைப் படித்ததன் மூலம் பலரின் அநுபவங்களைப் பெற்றதோடு இன்றுவரைஅவற்றைப் பேணுகின்றவர் என்ற அடிப்படையில் முதன்மை பெறுகிறார்.

அவர் வாழ்க்கையில் முக்கிய திருப்புமுனையாக அமைந்த காலகட்டம். 1966 அக்டோபர். அப்போதைய அரசில் தமிழரசுக் கட்சியின் சார்பாக இலங்கையில் உள்ளூராட்சிஅமைச்சராக இருந்தவர் இராணியின் வழக்குரைஞர் மு. திருச்செல்வம் (நீலன் திருச்செல்வத்தின் தந்தையார்). 1976 நவம்பர் 19ஆம் நாளில் அவர் இறக்கும் வரை 13 ஆண்டுகள் நம்பிக்கைக்குரிய உதவியாளராக இருந்தவர். அந்தநாள்களில் தமிழரசுக் கட்சித் தொண்டரானார். தமிழ்த் தேசிய உணர்வு அவர் வாழ்வானது.

1963இல் கொழும்பில் பம்பலப்பிட்டி மெல்பன் நிழற்சாலையில் மூத்த உறவினர் பேராசிரியர் முனைவர் ஆ. கந்தையாஅவர்களுடன் தங்கியிருந்தார்.

அக்காலத்தில் அவருக்கு அகில இலங்கை இந்து மாமன்றம், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை ஆகியவற்றில் பணி செய்கின்ற வாய்ப்புக் கிட்டியது. சேர் கந்தையா வைத்தியநாதன் அவ்வமைப்புகளின் தலைவராக இருந்து இவரை ஊக்குவித்தார். அவருக்கு அலுவலக, நூலகப் பணிகளில் உதவியதோடு திருக்கேதீச்சரத்திலும் பணிகளை மேற்கொண்டவர்.

கொழும்பு இந்துவாலிபர் சங்கத்தின் "இந்து இளைஞன்" என்ற இதழில் எழுதியவர். இலங்கையின் இந்து இளைஞர் சங்கங்களை ஒருங்கிணைத்து ஒரே குடையுள் கொண்டு வருகின்ற கருத்தியலோடு இவர் பெரும்பணி மிகவும் முக்கியமானது. 1971 தொடக்கம் 1977 வரை இலங்கையின் 75 இந்து இளைஞர் மன்றங்களை இணைத்து இந்து இளைஞர் பேரவையை நிறுவினார். அதன் தலைமைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். யாழ்ப்பா ணத்தில் நடைபெற்றநான்காவதுஅனைத்துஉலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு அமைப்புக் குழுவில் காத்திரமாகப் பங்களித்தவருள் இவரும் ஒருவர்.

இவரிடம் உள்ள விசேட திறமை யென மக்கள் தொடர்பாடல் பணியைக் குறிப்பிடலாம். சந்தித்த மாத் திரத்திலே எவரையும் கவரக் கூடியவர். அறிவியல் எல்லை களைத் தாண்டிப் பேசுவது இவர் இயல்பல்ல எனவும் அஃது அவர் பண்பல்ல எனவும் குறிப்பிடலாம்.

தமிழ், சைவம், அரசியல் சார்ந்தபரப்பிலே ஏறத்தாழ 70 ஆண்டுகள் இவர் தளராது பணியாற்றி வருவதே அதற்குச் சான்று.

யாழ். மாநாகர சபை வேட் பாளர், பொதுவுடைமைக் கட்சியார், இவரது ஆசிரியர், மு. கார்த்திகேயனுக்கா கத் தேர்தல் பிரசாரப் பணியில் ஈடுபட்ட போது இவ ருக்குவயது 16. இலங் கைத் தமிழரசுக் கட்சியின் அறப் போருக்காகத் தமிழகத்தில் அனைத்துக் கட்சியினரிட மும் பேசிய மாணவன். பின் யாழ் கச்சேரிக்கு முன் போராட் டத்தில் பங்கேற்றார். அப்போது இவருக்கு வயது 19.

வண்ணார் பண்ணை அருள் மிகு விசுவேசப் பிள்ளையார் திருக்குள மீளமைப்புத் திருப்பணியைத் தனது 19 ஆவது வயதிலும், திருத்தேர் மீளமைப்புத் திருப்பணியைத் தனது 24 ஆவது வயதி லும் மேற்கொள்ள அவன் அருளாசியைப் பெற்றவர்.

சிங்களம் மட்டும் சட்டத்தை முறியடிக்க அரசாங்க எழுவினைஞர் சங்கவழக்குக்காகச் சென்னையில் வழக்குரைஞர்கள் உதவிபெற உழைக்கையில் இவருக்கு வயது 21. தமிழக இலங்கைமாணவர் சங்கத் தலைவராக இருந்தபோதுசென்னைத் தூதரகத்தில், பெப்ருவரி 4 சுதந்திரதினவிழாக் கொண்டாட்டத்தில் கொடியேற்றமறுத்தபொழுது இவருக்குவயது 23.

யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரி வகுப்பு விரிவுரையாளராகப் பொறுப்பேற்றபோது வயது 25. உள்ளூராட்சிஅமைச்சர் மு. திருச்செல்வத்தின் தனிச் செயலாளரானபோது வயது 25. இலங்கைக் கடற்தொழில் அமைச்சின் அறிவியல் ஆய்வாளராகையில் வயது 26.

ஐநா உலக உணவு வேளாண் ஆலோசகராகையில் வயது 29. இலங்கை இந்து இளைஞர் பேரவைத் தலைமைச் செயலாளராகையில் வயது 30. கடற்றொழில் ஆய்வு அலுவலர் தொழிற்சங்கத்தின் செயலாளரான போதுவயது 31. யாழ்ப்பாணத்தில் நான்காவது அனைத்துலக்ததமிழாராய்ச்சி மாநாட்டைநடத்திய காலத்தே இவருக்குவயது 32.

பதிப்பாளராக, கைமணிக்கூடு வணிகரானபோது வயது 36. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகவிரிவுரையாளரானபோது வயது 37. மீண்டும் ஐநா ஆலோசகராகப் பணியேற்றபோது வயது 38. சென்னையில் பதிப்பாளராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டபோது வயது 45.

ஈழத் தமிழர் அரசியல் எதிர்காலம் தொடர்பாக, தமிழகத்தின் அனைத்துத் தலைவர்களுடன் சம அளவு நல்லுறவைப் பேணிய வரேமறவன்புலவு க. சச்சிதானந்தன். எவரையும் எந்தநேரமும் சந்திப்பார். கலைஞர் மு. கருணாநிதி இவரின் உழுவலன்பர். அவர் தனது 67ஆவது வயதில் மறவன்புலவுசச்சிதானந்தன் கேட்டதற்கிணங்க, ஒரேநாளில் ஈழ ஏதிலியருக்காக 100 கோடிரூபாய் தமிழகஅரசு வழி நிதியை ஒதுக்கினார்.

இலங்கைத் தமிழர் சிக்கல் தொடர்பாக, இந்தியப் பிரதமர்கள் பலருக்குத் தொடர்பாளராகப் பணியைத் தொடங்கியது போதுவயது 43. அவர் தனது 49ஆவது வயதில் தில்லியில் உள்ள இராஜீவ் காந்தி இல்லம் சென்றமைதொடர்பாகக் கைதுசெய்யப்பட்டார். சென்னையில் பயங்கரவாதத் தடைநீதிமன்றத்தில் இன்னமும் வழக்கு நடைபெறுகிறது. அதனால் இவர் தன் கடவுச் சீட்டுகளுக்காக இன்றும் அலைகிறார்.

இவரது 55ஆவது வயதில் விடுதலைப் புலிகளுக்கு மருந்து கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் சென்னைச் சிறையில் ஒருமாதம் தடுத்து வைக்கப்பட்டார். அவர் தனது 59ஆவது வயதில் இந்திய அரசின் நாடு கடத்தல் ஆணையை நீதிமன்றம் வழி தடுத்தார். அக்காலத்தேபிரதமர் வாஜ்பாயிக்காகவிடுதலைப் புலிகளிடம் பேசினார். தனது 65ஆவது வயதில் பிரதமர் மன்மோகன்சிங்கை இலங்கைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திக்கஏற்பாடுசெய்தார்.

இவ்வாறான அவர் பற்றிய தகவல்கள் இணைய வெளியில் விரவிக் கிடக்கின்றன. வாழும்போது வாழ்த்துவோம் என்பதே அறநெறி. வாழ்த்துவதற்குத் தகமை உடையவர். பாராட்டப்பட வேண்டியவர். புகழ்வதற்குரிய அத்தனை தகமைகளும் அவரிடம் இருக்கின்றன. *He deserves to be celebrated* என்ற ஆங்கிலத் தொடர் இவருக்குமிகவும் பொருத்தமானது. ✦

**கணபதி சர்வானந்தா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கனவுச் சிற்பி!

இலங்கையில் தமிழர் நாம், தமிழ்க் கலைகள் என்ற ரீதியிலும் உணர்விலும், கர்நாடக இசையையும், பரத நாட்டியத்தையும் நமது இசை, நடனமாக கொண்டிருக்கிறோம். பல்கலைக்கழகத்தில் ஏற்றிவைத்திருக்கிறோம்.

ஆனால், தமிழர் தாமென்றாலும், நம்முடைய மற்றெல்லா வாழ்வம்சங்களிலும் நமக்கான தனித்த அடையாளம், வேறுபாடு உண்டு. அது எளிதில் வேறுபடுத்தி அறியக்கூடியது. பேச்சு வழக்கில், எழுத்தில், உடையில், உணவில், பண்பாட்டு, மத சடங்குகளில் என்று, பொதுவாக அனைத்திலுமே இந்த அடையாளம் தென்படுகிறது. இது, இலங்கையின் தமிழ்த் தேசிய இனத்தின் தனித்த அடையாளம். ஆனால், ஒரு தேசிய இன அடையாளமாக அந்த இனத்தை எங்கும் பிரதிநிதித்துவப்படுத்தி அடையாளப்படுத்தவல்ல அதி முக்கியமானதான இசையில், நடனத்தில், நம்முடையதான அந்த அடையாளம் இல்லை. இந்த உணர்வின் தெளிவில், முதன்முதலில் உந்துதல்கொண்டவர் கலைஞர் வேல் ஆனந்தன்.

தேவதாசிகளின் சதிர் நடனம் இலங்கையிலும் ஆடப்பெற்றது. 1930களில் 'பரதநாட்டியம்' என்ற நாமகரணமும், பிராமண பெண்ணான ருக்மிணி அருண்டேலின் பரதநாட்டிய அரங்கேற்றமும் ஏற்படுத்திய மறுமலர்ச்சியில், பரதநாட்டியம் இந்தியாவில் சமூக அந்தஸ்தின் சின்னமாக மாற ஆரம்பித்தபோது, இலங்கையிலும் அது அவ்விதமாகவே சிறிதளவில் பரவவும், பேணப்படவும் தொடங்கியது. கூடவே, கேரள மாநிலத்தின் கதகளியும் ஆந்திர மாநில கூச்சுப்புடியும் அறிமுகமாயின.

உண்மையில், இலங்கைத் தமிழர்களிடத்தான தற்போதைய நடன பரம்பலின் பிதாமகராக கதகளி நடன பேராசான் குரு கோபிநாத்தையே கருதலாம். 1940களின் தொடக்கத்தில் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் மருகர் சு. நடேசபிள்ளையின் அழைப்பில் இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வரா கல்லூரி (தற்போதைய யாழ். பல்கலைக்கழகம்) ஆகியவற்றின் நிதியுதவிக்காக நிகழ்ச்சியளிக்க தனது குழுவினருடன் வந்த குரு கோபிநாத், இராமநாதன் கல்லூரியிலும் பின்னர், யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் வி. ஆர். இராசநாயகம் என்பவர் நிறுவி நடாத்திய யாழ். நடன பாடசாலையிலும் கதகளி வகுப்புக்களை ஆரம்பித்தார். இந்த அறிமுகத்தில்தான் கொக்குவில் 'கலாபவனம்' ஏரம்பு சுப்பையா மாஸ்டரும், 'கீதாஞ்சலி' வி. கே. நல்லையா போன்றவர்களும் பின்னர் சென்னை சென்று கோபிநாத்திடம் மேலும் பயிற்சிபெற்று, யாழ்ப்பாணத்தின் நடனக்கலைப் பரம்பலுக்கு வித்திட்டார்கள். குரு. கோபிநாத்தின் ஆலோசனையில், யாழ். நடன பாடசாலையுடன் தொடர்பாயிருந்த டபிள்யூ. எம். குமாரசாமியின் புதல்வி திரிபுரசுந்தரி இலங்கையின் முதல் மாணவியாக, வழுவூர் இராமையா பிள்ளையிடம் பரதநாட்டியம் பயின்றார்.

நெடுந்தீவைச் சேர்ந்த கதகளி ஆடல் கலைஞரான வேல் ஆனந்தன், குரு கோபிநாத்தின் சிஷ்யர். நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் சுப்பையா மாஸ்டரிடம் நடன கற்கையை ஆரம்பித்தவர், புது டில்லியிலும், திருவனந்தபுரத்திலும், சென்னையிலும் பல ஆண்டுகள் குரு. கோபிநாத்திடம் அவரது விஸ்வ கலாகேந்திரா நிறுவனத்தில் பயின்று, அவருடன் அவரது நடன குழுவில் ஆடி, அதன் பிரதிமையாக 'வேல் ஆனந்தன் நடன குழு'வை இலங்கையில் ஒரு கனவாக்கியவர். திருநெல்வேலி 'கலைக் கோவில்' அவரது நாட்டிய நிறுவனம். வேல் ஆனந்தன் புது டில்லியில் கதகளியுடன் கூடவே பரதநாட்டியத்தையும் கற்க வைத்தார் குரு. கோபிநாத். பந்தணைநல்லூர் பாணியின் சுப்பராயபிள்ளையிடம் கற்றார்.

வேல் ஆனந்தனின் வருகை யாழ்ப்பாணத்து ஆடல் அரங்குக்கு - யாழ்ப்பாணத்து கலை உலகுக்கு ஒரு புதிதாக - ஒரு புது மலர்ச்சியாக அமைந்தது. அவருடைய ஆடல், பல அதிர்வுகளை ஏற்படுத்தத் தொடங்கியது. மக்கள் ரசனை பெருகியது. வசதிபடைத்த வட்டத்துக்கு வெளியிலும் ஆடல் கலை துளிர்த்துத் தழைக்கத் தொடங்கியது.

இசைக் கலைஞர்களுடன் ஒப்பிடுகையில் நடன கலைஞர்கள் மிகச் சிலரே. இசையிலும் நடனத்திலும் அப்போதிருந்த இந்த ஆதிக்கத்தைத் தகர்த்தவர்கள் 'சங்கீதபூஷணம்' பொன். சுந்தரலிங்கமும் கலைஞர் வேல். ஆனந்தனும் ஆவர். வேல். ஆனந்தன் 'கலைக் கோவிலை' ஸ்தாபித்தபோது, இந்தியாவிலிருந்து திரும்பிய பொன். சுந்தரலிங்கம், யாழ்ப்பாணத்தில் 'இளம் கலைஞர் மன்றம்' என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். அப்போது இவர்கள் இருவருமே பல எதிர்ப்புகளையும் சவால்களை எதிர்கொண்டனர். பணமும் அந்தஸ்துமான ஒரு வட்டத்துள்ளிருந்து இக் கலைகளை வெளிக்கொணர தீவிரம்கொண்ட இவர்கள்



இருவரும் யாழ்ப்பாணத்தின் தீவகங்களைச் சார்ந்தவர்கள் என்பதுங்கூட இவர்கள் எதிர்கொண்ட சவால்களுக்கு காரணமாகியது. பொன். சுந்தரலிங்கம் புங்குடுதீவைச் சேர்ந்தவர். ஆனால், இவர்களின் முயற்சியிலான இந்த வேளையில்தான் யாழ்ப்பாணத்தில் இசையும் நடனமும், ஆற்றலுடனான எல்லோருக்குமான கலைகளாகும் வாய்ப்பைப்பெற தலைப்பட்டன.

வேல். ஆனந்தனின் நடனக் குழு, இலங்கை முழுவதும் பிரபல்யத்தையும் வரவேற்பையும் பெற்றது. ஆனால், வேல். ஆனந்தன் ஆடலில் தன்னுடைய அங்கீகாரத்தையும் பிரபல்யத்தையும் மாத்திரம் எண்ணவில்லை அதற்காக மாத்திரம் உழைக்கவில்லை. அவர் தன் இனத்தின் அடையாளத்தை, அதன் அங்கீகாரத்தை, அதன் பிரபல்யத்தையே எப்போதும் எண்ணினார்.

அவுஸ்திரேலியாவில் அனா பாவ்லோவாவிடம் மேலைத்தேய 'பாலே' நடனத்தைக் கற்ற ருக்மிணி அருண்டேல், சென்னையில் பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் சிஷ்யைகள் ஜீவரத்தினம், ராஜலக்ஷ்மி ஆகியோரின் நடனத்தைப் பார்த்த லயிப்பில் அக் கலைக்காக 'கலாக்ஷேத்ரா'வைத் தொடங்கிய போது, பரதநாட்டியத்துடன் கதகளியையும் பயிற்றுவித்தார். கதகளி பாத்திரங்களில் தாமே ஆடும் பயிற்சியும் பெற்றிருந்தார். இந்த பின்புலத்தில் தன்னுடைய கலாக்ஷேத்ரா பாணியை அவர் எண்ணினார்.

பரதநாட்டியம், பலவகைப் பாணிகளைக்கொண்டிருக்கிறது. மெலட்டூர் பாணி, மைசூர் பாணி, தஞ்சாவூர் பாணி, பந்தணைநல்லூர் பாணி, வழுவூர் பாணி என்றிவ்வாறு அது அமைகின்றபோது, ருக்மிணி அருண்டேல் பெரும்பாலும் பந்தணைநல்லூர் பாணியை அடியொற்றி, 'கலாக்ஷேத்ரா பாணி' ஒன்றை வடிவமைத்துக்கொண்டார்.

இவ்வாறேதான், பரதநாட்டியத்தில் ஈழத் தமிழர் அடையாளத்துடனான ஒரு பாணியின் தேவையையும் அவசியத்தையும், அதற்கு ஏற்புடைத்தான பல்கலைக்கழக துணையுடன் நிறைவாக்கிவிட வேல். ஆனந்தன் அவாவினார். யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், தலைவர் பேராசிரியர் க.



கைலாசபதியும், கலாநிதி கா. இந்திரபாலாவும் இதில் மிகுந்த அநுகூலமான எண்ணம் கொண்டிருந்தார்கள். ஆனால், கைலாசபதியின் மறைவும், இந்திரபாலாவின் இடமாற்றமும் எதிர்பாராதவையாயின.

இன்று, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பரத நாட்டியத்துக்கு ஒரு பீடம் இருக்கிறது. கல்வித் திணைக்களத்தில் நடனத்தை க. பொ. த. பரீட்சைக்குரிய ஒரு பாடமாக்கி, பாடசாலைகளில் அதனைக் கற்பிப்பதற்கு ஆசிரிய நியமனங்களை ஏற்படுத்தி, அந்த ஆசிரியர்களுக்கு ஆசிரிய கலாசாலைப் பயிற்சி அளிக்கவைத்துப் பெற்ற கற்கையில், இப் பல்கலைக்கழக பிரவேசம் நிகழ்கிறது. இவ்வளவும் வேல் ஆனந்தனின் மிகப்பெரும் பகீரத பிரயத்தன முயற்சி. இதில் அவருடைய எதிர்நீச்சல், நம்மவர்களைத் தாண்டியதாகவேயிருந்தது.

பரதநாட்டியத்துக்கான பல்கலைக்கழக பீடம் அப்போது இந்தியாவிலேயே குஜராத் மாநிலத்தின் பரோடா எம். எஸ். (Maharaja Sayajirao) பல்கலைக்கழகத்தில் மாத்திரம்தான் இருந்தது. 1950இல் இது ஆரம்பிக்கப்பட்டது. கலாக்ஷேத்ரா மாணவரான கீர்த்திமிக்க நடன வரலாற்றாசிரியர் மோகன் கோஹர் பீடாதிபதியாகவிருந்தார். அதன் பின்னர் அந்தப் பெருமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு கிடைத்தது. சென்னை கிருஷ்ணகான சபாவில் நடந்த ஒரு நாட்டிய மாநாட்டில் இந்தியாவின் அனைத்து நடன வகைகளும் சார்ந்த புகழ்பெற்ற கலைஞர்கள், நாட்டிய ஆசான்கள், கலா விற்பன்னர்கள், விமர்சகர் எல்லோரும் இருந்த அவையில் இதற்காக யாழ்ப்பாணம் பெற்ற பெருமையை 'ஈழநாடு' பத்திரிகைக்காக அம் மாநாட்டுக்குச் சென்றிருந்த நான் கண்டேன்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பரதநாட்டியத்துடன் கதகளியும் இடம்பெற்றிருந்தது. கலைஞர் வேல். ஆனந்தன் அங்கு அக் கற்கை நெறிக்கான பொறுப்பாளராகவும் பகுதிநேர விரிவுரையாளராகவுமிருந்தார். முதல் தொகுதி 'டிப்ளோமா' பெறுநர்கள் வெளியேறிய பின்னரும் தொடர்ந்த அக் கற்கை நெறி, நுண்கலைத் துறைக்கு புதிய ஒரு பேராசிரியர் பொறுப்பேற்றதும் நிறுத்தப்பட்டது. பதவியேற்ற பேராசிரியரை மற்றையவர்கள் எல்லோரும் சென்று சந்தித்திருந்தபோது, வேல். ஆனந்தன் அவரைச் சென்று சந்திக்கவில்லை என்பதால் இந் நிலை ஏற்பட்டதென்பது, இரகசியமாய் உறையும் இரகசியம்.

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் நடைபெற்ற வேல். ஆனந்தன் நடன குழுவின் நிகழ்ச்சி ஒன்றுக்கு பிரதம விருந்தினராக வந்திருந்த தொழிற் கட்சி அரசியல் பிரமுகர் ஒருவர் மேடையில் வந்து கலைஞர்களைப் பாராட்டிவிட்டு, வேல். ஆனந்தனிடம் ஒன்று கேட்டார்: "இந்திய கலைஞர்களின் தரத்தில் நீங்கள் ஆடுகிறீர்கள். ஆனால், இலங்கையில் தனித்த இன அடையாளங்களுக்கு உரித்தான உங்களுக்கு, சிங்கள மக்களின் கண்டிய நடனம்போன்று தனித்த நடனம் ஒன்று இல்லையா?" - நான் அருகில் நின்றேன்.

சென்னை நாட்டிய மாநாட்டில் வேல். ஆனந்தனை மனதில் நினைந்துகொண்டதும், பேர்மிங்ஹாம் மேடையில் அப்போது அவரைப் பார்த்ததும், வேல். ஆனந்தனின் 'கலை வாழ்வு'.

அவருடைய நாட்டிய மேடை மிக விசாலமானது. அவர் அளிக்கும் 'நவரசங்களும் முத்திரா அபிநயங்களும்', அவரும் பத்மினி செல்வேந்திர குமாரும் (நடராஜா) இணைந்த 'தாண்டவ நிருத்தியம்', 'விஸ்வாமித்திர மேனகா, 'கீதோபதேசம்', 'பஸ்மாசுர மோகினி' என்பனவும், 'கணையாழி', 'சீதா அபகரணம்', 'திருவிளையாடல்' என்பவற்வற்றோடு, இயேசு பிரானைக் கதாபாத்திரமாக கொண்ட 'அருளும் இருளும்' போன்ற பல நாட்டிய நாடகங்களும் நாட்டிய மேடையில் தடம் பதித்த அவரின் படைப்புகள்.

பின்னர், கீழைத்தேய 'பாலே' நடன வடிவிலான பிரமாண்ட தயாரிப்புகளாக சமூகத்தின் அவலங்களையும், சமூக விழிப்புணர்வையும் சித்தரித்த 'நீறுபூத்த நெருப்பு', 'ஆலயமணி', 'என்னதான் முடிவு', 'விடைகொடு தாயே', 'குருக்ஷேத்திரம்' போன்ற உன்னத படைப்புகளை வியப்புற அறிமுகமாக்கினார்.

பஸ்மாசுர மோகினியில் ரசிகர்களை ஆட்கொண்டவர், ரசிகர்களால் நிரம்பி வழிந்த வீரசிங்கம் மண்டபத்தில் 'பஸ்மாசுரன் -77' நாட்டிய நாடகத்தை கரகோஷத்துடன் நிறைவாக்கி மேடையை விட்டு அகல்கையில், ஒப்பனையுடனேயே பொலிஸ் ஜீப்பில் யாழ் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டார். மறுநாள் அதிகாலை 3 மணிக்கு உடுவில் எம். பி., வி. தர்மலிங்கம் தடுப்புக் கூண்டிலிருந்து அவரைக் கூட்டிவந்தார்.

83க்கு முன்னதான, 77 கலவரம் 'பஸ்மாசுரன் - 77'.

மாலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டத்துறையில் வடக்குக்கு பெருமை சேர்த்த அந்தோனிப்பிள்ளை

உதைபந்தாட்டத்துறையில் பல்வேறு சாதனைகள் படைத்து வரும் வடக்கு மாகாணத்துக்கு குறிப்பாக யாழ்.மாவட்டத்துக்கு பெருமை சேர்த்தவர், சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (கிளிபேட்). அவர் இலங்கை தேசிய உதைப்பந்தாட்ட அணியில் விளையாடிய வீரராவார். பாடசாலைக் காலம் தொட்டு இன்றுவரை உதைபந்தாட்டத்துடன் நெருக்கத்தைக் கொண்டவர். இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தின் உப தலைவராகவும் இருந்தவர். இவரைக் கௌரவிக்கும் முகமாக விளையாட்டுத் துறை அமைச்சு யாழ்ப்பாணத்தில் நடத்திய தேசிய விளையாட்டு விழாவில் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுவதற்கான வாய்ப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1957இல் யாழ்ப்பாணம் பாசையூரில் பிறந்த இவர், யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்றார். 1966 இல் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியில் இரண்டாம் பிரிவு உதைபந்தாட்ட அணியிலும், 1967 - 1971 வரை 5 வருடங்கள் முதலாம் பிரிவு அணியிலும் இடம் பெற்றார். கல்லூரி அணியில் ஆரம்பத்தில் இடது மத்திய கள வீரராக விளையாட ஆரம்பித்து, மத்திய கள வீரராகவும் இடதுகரை முன்னணி வீரராகவும் பின்னர், இடது உள் முன்னணி வீரராகவும் விளையாடியுள்ளார். 1969, 1970 ஆம் ஆண்டுகளில் கல்லூரி அணிக்கு தலைவராக கடமையாற்றியுள்ளார்.

1968 இல் யாழ்.மாவட்ட இளைஞர் உதைபந்தாட்ட அணியின் தலைவராக கடமையாற்றிய போது,போட்டியிலும் கலந்துகொண்டார். அப்போதைய இலங்கைப் பாடசாலைகள் அணியின் பயிற்றுவிப்பாளர் அல்பேட் பெர்னான்டோ இவரை, இலங்கை பாடசாலைகள் அணிக் குழாமில் இணைத்துக் கொண்டார்.

1969 இல் இந்திய-இலங்கை விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடைபெற்றபோது, இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட அணியில் இடம் பிடித்தார். இந்த அணியானது, இந்திய அணியை வெற்றி கொண்டு சம்பியனானது. தொடர்ந்து இலங்கை அணி பயிற்சிகளுக்காக ஏறக்குறைய சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு செல்ல வேண்டி ஏற்பட்டது. இலங்கை தேசிய அணிகளில் தொடர்ந்தும் விளையாடுவதில் கவனம் செலுத்தினால் இவரது கல்விக்கும் பாடசாலையின் சட்ட திட்டங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் இடையூறு ஏற்படுமென நினைத்து இவரது பாடசாலை அதிபர்



1969ஆம் ஆண்டு மட்டுமே இவர் இலங்கை தேசிய அணியின் பயிற்சிகளுக்கு செல்ல அனுமதி அளித்தார்.

அப்போது பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்காகவும் யாழ்.தெரிவு அணிக்காகவும் விளையாட இவருக்கு விசேட அனுமதி வழங்கினார்கள்.

சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இருந்து இலங்கை தேசிய அணியில் இடம்பெறும் வீரர் ஒருவருக்கு அதியுயர் விருது வழங்கி கௌரவிப்பது என 1971 இல் தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க மீண்டும் இலங்கை தேசிய உதைபந்தாட்ட சிரேஷ்ட அணியில் இடம்பெற்று இந்தியா சென்றார். இதன் மூலம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் அதியுயர் விருதை வென்ற முதலாவது வீரன் என்ற பெருமையும் பெற்றார்.

பாடசாலையில் படிக்கும்போதே யாழ்.மாவட்டத்தில் இருந்து, இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம்பெற்ற ஒரே ஒருவர் இவரே.

1967 இல் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் அணியில் இடதுகரை முன்னணி வீரராக விளையாட ஆரம்பித்து, அந்த அணி சம்பியன் பட்டத்தை வெல்வதற்கு முக்கிய பங்காற்றினார்.

சென்.அன்ரனிஸ் கழக அணியில் பல வருடங்கள் இடதுகரை முன்னணி வீரராகவும், பின்னர் மத்திய கள வீரராகவும், தொடர்ந்து நடு பின்கள வீரராகவும் இறுதியில் கோல் காப்பாளராகவும் விளையாடியுள்ளார். இவர் ஒரு கோல் காப்பாளரும் கூட.

1969 இல் இலங்கை பாடசாலை அணியில் இடம் பிடித்த காரணத்தினால் பாசையூர் சென்.அன்ரனிஸ் கழகத்துக்கும் இவருக்கும் பயிற்சியாளராக இருந்த ஆ.மு. மரியநாயகம் அப்போதில் இருந்து இவரை தமது உதவிப் பயிற்சியாளராக பயன்படுத்தினார்.

1974 ஆம் ஆண்டு தொடங்கி பல வருடங்கள் சென். அன்ரனிஸ் தமிழகத்தின் பயிற்ச்சியாளராக கடமையாற்றி அந்தக் கழகம் யாழ்.மாவட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சம்பியன்களை வெல்வதற்கு முக்கிய பங்காற்றினார்.

இவரிடம் பயிற்சி பெற்ற பல வீரர்கள் அணியில் பங்குபற்றினார்கள். 1975 இல் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் ஆசிரியராக இணைந்து கொண்ட அந்தோனிப்பிள்ளை பல வருடங்கள் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளராக கடமையாற்றினார்.

நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக நாட்டைவிட்டு வெளியேறவேண்டி ஏற்பட்டதுடன் வெளிநாடு சென்று அங்கும் பல போட்டிகளில் வென்றார்.

1977 இல் யாழ். உதவி அரச அதிபர் பிரிவு இளைஞர் அணிக்கிடையிலான போட்டியில் யாழ். உதவி அரச அதிபர் அணி வெற்றி பெற்றது. 1994 தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை யாழ்.பல்கலைக்கழக அணிக்குப் பயிற்ச்சியாளராக இருந்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு வடபிராந்தியத்திற்கான உதைபந்தாட்ட பயிற்சியாளராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நியமிக்கப்பட்டார்.

2001 இல் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் ஒழுங்கமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

2002 இல் சமாதான உடன்படிக்கையின்போது இலங்கை-மாலைதீவு அணிகளுக்கு இடையிலான போட்டியை யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடத்துவதற்கு முன் நின்றார்.

யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தில் நீண்ட காலம் செயளாளராகவும் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

2002 இல் லண்டன் சென்று பயிற்சிகளை பெற்ற இவர் 2009 இல் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான பயிற்சி, 2009 இல் அதற்கு மேலதிகமான பயிற்சிகளை பெற்று சான்றிதழ்களை பெற்றார்.

2015 இல் வடக்கு மாகாண லீக்குகள் ஒன்றிணைந்து வடமாகாண உதைப்பந்தாட்ட பேரவையை ஆரம்பித்தபோது அதன் தலைவராக இருந்தார்.

இன்றுவரை உதைபந்தாட்டம் மற்றும் அனைத்து விளையாட்டுக்களிலும் வடக்கு மாகாணம் முன் நிற்க வேண்டுமென்று அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும் இவருக்கு டான் ரீவி வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்குவதில் பேருவகை கொள்கின்றது.

# அரைநூற்றாண்டு தாண்டிய அபார கலைஞன் அருணா

ஈழத்தில் அரைநூற்றாண்டையும் தாண்டி பயணிக்கும் அருணா இசைக்குழுவின் ஸ்தாபகரும் மூத்த இசைக் கலைஞருமான அருணா என அழைக்கப்படும் சுப்பையாஅருணாசலம் தனது 79வது வயதிலும் இன்றுவரைதொடர்ந்து இசைத் துறையில் பயணித்து வருகிறார்.

இந்தியாவை பூர்வீகமாக கொண்ட சுப்பையாவுக்கும் வேலணையை சொந்த இடமாக கொண்ட சிவக்கொழுந்துவுக்கும் பிறந்த எட்டுப் பேரில் ஆறாவதாக 1946இல் வேலணையில் பிறந்த அருணா சிறுவயதிலேயே இசை ஆர்வம் கொண்டிருந்தார்.

காரைநகர் இந்துக் கல்லூரியில் இசையை கற்பித்ததந்தையின் இசை பின்னணிஅருணாவிடமும் ஒட்டிக்கொண்டது. தந்தையின் ஹார்மோனியத்தை வாசிக்க தொடங்கியஅருணா சர்வேஸ்வரசர்மா, சண்முகானந்தம், டிவிபிச்சையப்பாஎனபலரிடம் வயலின் இசைக்கபயின்றார்.

தந்தையிடம் இருந்த ஹார்மோனியத்தையும் இசைக்கபழகிக்கொண்டார்.சின்னவயதில் இசை நிகழ்ச்சிகளுக்குசெல்லும் அருணா சின்ன மேள நிகழ்ச்சிகளுக்குசென்று வாசித்துள்ளார். அருணா தனது 5ம் ஆண்டு ஆரம்ப கல்வியை தட்டாதெரு குளங்கரை பாடசாலையில் பயின்றதுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி, கல்வியங்காடு சாதனாபாடசாலைகளில் சாதாரண தரம் வரை கற்றார். இசை நிகழ்வவுக்கு செல்ல ஆரம்பித்ததனால் பாடசாலை கல்வியை இடையில் கைவிட்டார்.

முதன் முதலில் ஹார்மோனியம் இசைக்ககற்ற அருணா வில்லுப்பாட்டுகச்சேரிகளில் மேற்கொள்ள ஆரம்பித்தார்.1960ம் ஆண்டளவில் அருணா, பாடசாலை இசைநிகழ்வுக்குசெல்லஆரம்பித்தார்.அதனால் பாடசாலைகல்வியை இடையில் கைவிட்ட




பிறகு பல நிகழ்ச்சிகளுக்கு சென்றார். கண்ணன் கோஷ்டி, இரட்டையர் கோஷ்டி யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் செலுத்திய நேரத்தில் 1967 கல்வியங்காட்டில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி மூலம் அருணா இசைக்குழுவின் அத்தியாயத்தை ஆரம்பித்தார். அது அருணாவுக்குதிருப்புமுனையைஏற்படுத்தியது.

அதன்பின் பலரும் அருணாவையும் அவரது குழுவினரையும் இசைநிகழ்ச்சிகளுக்குஒப்பந்தம் செய்தனர். தொழில்நுட்பம் வளராத காலத்தில் இலங்கை முழுவதும் எனஅவரதுபெயர் பரவி இருந்தது.யாழ்ப்பாணத்தில் அருணா போகாத கோவிலே இல்லை என சொல்லலாம்.

1967ம் ஆண்டு 300 ரூபாய்க்கு கச்சேரி மேற்கொள்ள ஆரம்பித்தஅருணா இசைக்குழுவின் பயணம் இன்று வரை தொடர்கிறது.

அருணாசலம் 1971ம் ஆண்டு விமலாவதியை காதலித்து திருமணம் செய்தார். 1984 யுத்தம் ஆரம்பித்த [illegible] பணியாற்றினார். பகல் [illegible] இரவு இசை நிகழ்ச்சி என அவருடைய பணிகள் நகர்ந்தது.

யுத்த காலத்தில் இசை நிகழ்ச்சி நடத்த முடியாத சூழலில் தமிழீழ எழுச்சிப் பாடல்களையும் அருணா பாடத் தவறவில்லை. மானமொன்றே வாழ்வென கூறி, சிறீமாட்சி பெற்றெடுத்த சந்திரிக்காவே, ரத்தத்திலே சிவந்த மண்ணே என பல பாடல்கள் உண்டு.

1993 ம் ஆண்டு இயக்கப் பாடல்களை பாட ஆரம்பித்தார்.

பாடகர் சாந்தன், சுகுமாரன், கனகாம்பாள், பார்வதி சிவபாதம், அமுதன் அண்ணாமலை, ரங்கன், உள்ளிட்டபலரும் அருணாவின் ஆரம்பகால இசைகுழுவில் பணியாற்றியுள்ளனர்.

முல்லைத்தீவு கலைஞர்கள் உருவாக்கிய தமிழோசை படத்திற்கு இசையமைத்ததற்காக அருணாவிற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் நேரில் அழைத்து கௌரவித்திருந்தமைவிசேடஅம்சமாகும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து போகும் 1996 வரை சில ஆண்டுகள் புலிகளின் குரலிலும் அருணாபணியாற்றினார்.

ஒரே நாளில் இரண்டு மூன்று இசை நிகழ்ச்சிகளையும் சளைக்காமல் மேற்கொண்டு மக்கள் வரவேற்பை பெற்றவர். புலம்பெயர் நாடுகளிலும் அருணா தனது இசை பயணத்தில் தடம் பதித்தார்.

அருணாவுக்கு ஐந்து ஆண் பிள்ளைகள். மூன்று பேர் இசைக்கலைஞர்களாக உள்ளனர்.அருணா இசை நிகழ்ச்சிகளுக்கு செல்லும் போது தனது மகன்களையும் அழைத்து வருவார். இயற்கை ஞானத்தால் அவர்களும் இசையைபயின்றார்கள்.

அருணா இசைக்குழுவை ஆரம்பித்து பெயர் சொல்லும் ஒன்றாக இன்றுவரை வளர்த்த அருணாவுக்கு வயதான போதும் தளராமல் இசை பயணத்தை இன்று வரை தொடர்ந்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை இருபத்தைந்தில் டான் தொலைக்காட்சி

**ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல**
**வீழ்ந்தபோதெல்லாம் எழுந்தான் என்பதுவே பெருமை**

என்ற வாலியின் கவி வரிகளுக்குப் பொருத்தமாக அமைந்திருப்பது டான் தொலைக்காட்சி மாத்திரமல்ல அதன் இயக்குநர் எஸ்.எஸ். குகநாதன் அவர்களும்தான்.

இலங்கையில் தொலைக்காட்சி சேவை 1979 இல் ஆரம்பிக்கப்பட்டது இது 1982 இல் தேசிய தொலைக்காட்சியாக உருமாற்றம் அடைந்தது. 1992 இல் தனியார் தொலைக்காட்சிகள் ஆரம்பிப்பதற்கு அரசு அனுமதி வழங்கிற்று. ஆயினும் இவை யாவும் தலை நகரை மையப்படுத்தியே இயங்கின. இலங்கை அரசின் அனுமதியுடன் கொழும்புக்கு வெளியே ஆரம்பிக்கப்பட்ட தனியார் தொலைக்காட்சி சேவையாக 2009 இல் யாழ்ப்பாணத்தில் இருந்து தனது ஒளிபரப்பை ஆரம்பித்த டான் தொலைக்காட்சி சேவையைக் குறிப்பிடலாம்.

### டான் தொலைக்காட்சியின் ஆரம்பம்

டான் தொலைக்காட்சி பிரான்ஸ் தேசத்தில் 2000 ஆம் ஆண்டில் டான் தொலைக்காட்சி என்ற பெயரைப் பெற்று ஒளிபரப்பை ஆரம்பித்தது. இலங்கையில் இருந்து புலம்பெயரந்த மூத்த ஊடகவியலாளர் எஸ். எஸ். குகநாதனே இதன் தொடக்ககர்த்தா ஆவார். டிஷ் ஏசியா நெற்வேர்க் என்பதன் குறுக்கமே டான் என்பதாகும்.

எஸ். எஸ். குகநாதன் அவர்கள் இலங்கையின் மூத்த பத்திரிகையான ஈழநாட்டின் ஆசிரிய பீடத்தில் கடமையாற்றி போர் நிலைமைகளால் புலம்பெயர்ந்து பிரான்ஸ் தேசத்தில் வாழ்ந்த சூழலில் தனது 14 சகபாடிகளுடன் இணைந்து 1997 இல் ரிஆர்ரி (தமிழ் றேடியோ ரிவி) என்ற ஒளிபரப்புச் சேவையை ஆரம்பத்து வெற்றிகரமாக நடத்தியிருந்தார். அவரது சகபாடிகள் விடுதலைப்புலிகளுடன் இணைந்து அதனை ரிரிஎன் (தமிழ் தேசிய தொலைக்காட்சி) என இயக்கத் தொடங்கியபோது தனித்துவிடப்பட்ட குகநாதன் 2000 ஆம் ஆண்டு டிசம்பரில் இருந்து தனியொருவராக டான் தொலைக்காட்சி எனப் பெயர் சூட்டி ஒளிபரப்பை ஆரம்பித்தார்.

### தாயகத்தில் சேவை ஆரம்பம்

மேற்குலகில் இருந்து ஐரோப்பிய நாடுகளை மையப்படுத்தி ஒளிபரப்பு இடம்பெற்றாலும் தாயகத்தை நோக்கியே நிறுவுநரின் இதயத்துடிப்பு அமைந்திருந்தது. 2005 இல் தமிழகத்தில் டான் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டது. சவால் மிக்க போட்டிச் சூழலில் மூன்று ஆண்டுகள் ஒளிபரப்புச் சேவையை டான் தொலைக்காட்சி மேற்கொண்டது. 2008 இல் கொழும்பு அலுவலகமும் 2009 இல் யாழ்ப்பாண அலுவலகமும் திறக்கப்பட்டன. அன்றில் இருந்து பிரதான ஒளிபரப்புச் சேவை யாழ்ப்பாணத்தில் இருந்து உலகப் பரப்பை நோக்கிச் செல்லத் தொடங்கியது. இன்று டான் தொலைக்காட்சியின் ஒளிப்பதிவுக் கூடங்களும் அலுவலகங்களும் கொழும்பு, யாழ்ப்பாணம், ஹட்டன், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருக்கின்றமை நிறுவன வளர்ச்சியின் ஓர் அடையாளம் எனலாம்.

### இருபத்துநான்கு மணிநேர சேவை

இந்தியாவிற்கு வெளியே தமிழில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது இருபத்துநான்கு மணிநேர ஒளிபரப்பு சேவை என்ற பெருமை டான் தொலைக்காட்சிக்கே உண்டு. அதுபோல பிரான்சு நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட பிரெஞ்சு மொழி அல்லாத முதல் ஒளிபரப்பு சேவை என்ற பெருமையையும் டான் தொலைக்காட்சி (முந்தைய ரிஆர்ரி) கொண்டுள்ளது.

### பத்திற்கும் மேற்பட்ட அலைவரிசைகள்

டான் குழுமத்தில் பத்திற்கும் மேற்பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகள் காணப்படுகின்றன. 2011 இல் நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடியேற்ற நாளில் (04.08.2011) ஓம் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டது. 2012 இல் பாடல்களை வழங்கும் டான் மியூசிக் மற்றும் திரைப்படங்களை காட்சிப்படுத்தும் கே 4 யு என்பன ஆரம்பிக்கப்பட்டன. 2012 இல் டான் நியூஸ், கல்வி ரிவி ஆகிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. 2013 இல் ஹோலி மேரி ரிவி ஆரம்பிக்கப்பட்டது. 2015 இல் செரண்டிப் என்ற பெயரில் காத்தான்குடியில் இருந்து இஸ்லாமிய அலைவரிசை ஆரம்பிக்கப்பட்டு அது 2016 இல் இருந்து பிறை ரிவி என்ற பெயரைப் பெற்று இயங்குகின்றது. 2019இல் யாழ் ரிவி என்ற சிங்கள ஒளிபரப்பு சேவை ஆரம்பிக்கப்பட்டது.

### டான் குழுமத்தில் இணைந்த ஈழநாடு

தனது ஊடக வாழ்வை19ஆவது வயதில் ஈழநாடு பத்திரிகையில் ஆரம்பித்தவர் குகநாதன். ஈழநாடு பத்திரிகை 1959 இல் தொழிலதிபர் கே.சி.தங்கராஜா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபோட்ட பத்திரிகை என்பது குறிப்பிடத்தக்கது.

**"ஏசுவார்கள் எரிப்பார்கள்,உண்மையை எழுதுங்கள் உண்மையாய் எழுதுங்கள்"**

என்பது தவத்திரு யோகர் சுவாமிகள் ஈழநாட்டிற்கு வழங்கிய தீர்க்கதரிசன வார்த்தை ஆகும். 1981 இல் இனவாதிகளால் தீயிடப்பட்ட ஈழநாடு 1980 களின் பிற்பகுதியில் தனது வருகையை நிறுத்திக்கொண்டது. ஈழநாடு பத்திரிகையை மீண்டும் முன்பின் புனைபெயர்கள் இல்லாமல் அதேபெயருடன் வெளிக்கொணர வேண்டும் என்று விழைந்த குகநாதன் 2017 ஈழநாட்டின் உரிமையாளர்களிடம் முறைப்படி அனுமதியைப் பெற்று டான்குழுமத்துடன் இணைத்துக் கொண்டார். இன்று தினசரி நாளிதழாக டான் குழுமம் ஈழநாட்டை வெளிக்கொணர்கின்றது.

### ஆங்கில ஒளிபரப்பு காலத்தின் கட்டாயம்

ஆங்கில மொழியிலான சேவை ஒன்றை அல்லது பகுதி நேர சேவை மற்றும் செய்தி அறிக்கையிடலை டான் தொலைக்காட்சி ஆரம்பிப்பது காலத்தின் தேவையாகக் கொள்ளப்படுகின்றது. புலம் பெயர் தேசத்தில் இருக்கும் நம் இளைய உறவுகளை தாயகத்துடன் இணைப்பதற்கு இத்தகைய சேவை உதவும் என நம்பலாம்.

### சமூகவலைத்தளங்களிலும் டான்

தொலைக்காட்சி ஒளிபரப்பின் முக்கிய நிகழ்ச்சிகள் இன்றைய உலகப் போக்கிற்கு அமைவாக யுரியுப் தளத்திலும் முகநூல் பக்கத்திலும் வெளியிடப்படுகின்றன. இதன் மூலமும் தமிழகம் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ளோர் இலங்கையின் பல்வேறு பாகங்களில் உள்ளோர் டான் தொலைக்காட்சியை கேபிள் இணைப்பில் பார்க்கும் வசதி அற்றோர் பயன்பெறுகின்றனர்.

### குரலற்றவர்களின் குரல்

தலைநகரை மையப்படுத்தியே தொலைக்காட்சி ஒளிபரப்புகள் அமைந்திருக்கும் என்ற மரபை. டான் தொலைக்காட்சி மாற்றி அமைத்தது. தனது தளத்தை பிரதானமாக யாழ்ப்பாணத்தில் அது அமைத்துக் கொண்டது. உலகத் தமிழர்களை ஈழமண்ணோடு இணைத்து வைத்தது.

எல்லாத் தரப்பினரையும் திருப்திப்படுத்தி, பாதுகாப்பு அனுமதிகளைப் பெற்று யாழ்ப்பாணத்தில் இருந்து இத்தகைய அலைவரிசையைக் கட்டி எழுப்புவது என்பது இலேசான காரியம் அல்ல. இதற்குப் பின்னால் எஸ்.எஸ். குகநாதனின் முகாமைத்துவ ஆளுமை ஒளிந்திருக்கின்றது.

அரசியல் சமய சமூக பேதமின்றி அவரவர் தத்தமது கருத்துக்களைச் சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் தெரிவிப்பதற்கான வாய்ப்புகளை டான் தொலைக்காட்சி வழங்குகின்றமையும் இதற்குப் பிரதான காரணம் ஆகும்.

### தற்போது ஒளிபரப்பாகும் முக்கிய நிகழ்ச்சிகள்

ஸ்பொட் லைற், கேள்விக்கு என்ன பதில்,எது சரி எது பிழை , நெற்றிக்கண் முதலிய முதலிய அரசியல் சார்ந்த நிகழ்ச்சிகளும் டான் பட்டிமன்றம் சொற்சமர் மாணவர் விவாத நிகழ்ச்சி, அந்தக் காலம் இந்தக் காலம் , கதை நேரம் கலந்துரையாடல் நிகழ்ச்சி,தீம் தனா பரத நாட்டிய நிகழ்ச்சி நல்லதமிழ் கேட்போம் - தமிழறிவோம் நிகழ்ச்சி, பாரதீ பெண்களுக்கான நிகழ்ச்சி, நலந்தானா? - மருத்துவ நிகழ்ச்சி, வணக்கம் தமிழ்ஒளி - காலை நேர நிகழ்ச்சி, மழலைகள் நேரம் முதலிய டான் தமிழ்ஒளியின் பிரத்தியேக தயாரிப்பு நிகழ்ச்சிகள் உலகப் பரப்பை நோக்கிச் செல்கின்றன. டான் தமிழ்ஒளி தவிர ஓம் ரிவி கல்வி ரிவி போன்ற ஏனைய அலைவரிசைகளும் பல்வேறு நிகழ்ச்சிகளை தயாரிக்கின்றன. செய்திகள் தனியான சேவைத் தயாரிப்பாக உள்ளது.

### இருபத்தைந்தாண்டுகளில் சாதித்தது என்ன?

பிரதானமாக ஈழ மண்ணின் அரசியல் சார்ந்த குரலாக டான் ஒலிக்கின்றது. போரின் பின்னரான காலப் பகுதியில் மக்களின் பிரச்சினைகளை வெளிச்சம் போட்டு உரிய தரப்புகளின் கவனத்திற்குக் கொண்டு சென்றதில் டான் தொலைக்காட்சிக்கு முக்கிய பங்கு உள்ளது. கைதிகள் விடுதலை, காணாமல் போனோர் விவகாரங்கள் நிலங்கள் விடுவிப்பு என முக்கிய விடயங்கள் கூர்மைபெறுவதில் டான் தொலைக்காட்சி தனது ஊடகப் பங்களிப்பை வழங்கியிருக்கின்றது.

தாயகத்தையும் புலத்தையும் இணைக்கும் முக்கிய ஊடகமாக டான் தொலைக்காட்சி தன்னை அடையாளப்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக நல்லூர் உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளின் நேரலை உலகை தாயகத்துடன் இணைத்துக் கொள்கின்றது.

கலை, பண்பாடு, கல்வி, பொருளாதாரம் அரசியல் மருத்துவம் விளையாட்டு சார்ந்த நிகழ்ச்சிகளில் உள்ளூர் வளவாளர்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றார்கள். கருத்துருவாக்கம் மேல்தட்டில் இருந்தே கீழ்நோக்கி அமையும் என்ற வழமையைப் புரட்டி அடிமட்டத்தில் இருந்து அது உதயமாகும் என்ற யதார்த்தத்தை டான் வழங்கியிருக்கின்றது.

இலங்கையின் முக்கிய பொருள்களின் விளம்பரங்கள் டான் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகின்றன. இது பொருளாதாரம் எம்மை நோக்கி நோக்கி வருகின்றமைக்கு உதவுகின்றது. அத்துடன் இருநூறுக்கும் மேற்பட்டோர் தொழில்வாய்ப்பைப் பெறுவதற்கும் டான் தொலைக்காட்சி களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

### சாதனைத் தமிழன் விருது

சாதனைத் தமிழன் என்ற உயர்விருது டான் தொலைக்காட்சியால் வருடந்தோறும் வழங்கப்படுகின்றது. இவ்விருது உலகோரால் மதிக்கப்படும் உயர் தகைமையைப் பெற்றதாகும். சிவபூமி அறக்கட்டளை நிறுவுநர் செஞ்சொற்செலவர் கலாநிதி ஆறு. திருமுருகன், திருமறைக்கலாமன்ற இயக்குநர் (மறைந்த) அருட்கலாநிதி நீ. மரியசேவியர், நாடகத்துறைப் பேராசிரியர் சி. மௌனகுரு முல்லைமண்ணின் தொழில் முயற்சியாளர் சாஜிராணி, யாழ். பல்கலைக்கழக முன்னாள் வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன், இசையமைப்பாளர் கண்ணன், அமுதகலாஜோதி மோகன் சுவாமி என்ற வரிசையில் நாதஸ்வர மேதை பிஎஸ் பாலமுருகன் இந்த ஆண்டு இவ்விருதைப் பெறுகின்றார். அத்துடன் வாழ்நாள் சாதனையாளர் என்ற விருதும் வெள்ளிவிழாவையொட்டி ஆற்றல் மிக்க பெருந்தகைகளுக்கு வழங்கப்படுகின்றது.

### கரம்பொன் பெற்ற பசும்பொன்

பசும்பொன் என்பது சுத்தமான தங்கத்தைக் குறிக்கின்றது. யாழ் மண்ணின் கரம்பொன் கிராமம் சுப்பையா குகநாதன் என்ற பசும்பொன்னை தந்து பெருமை பெற்றது. ஊடகப் பணியில் 50 ஆண்டுகளை நெருங்கும் குகநாதனின் தலைமையில் இணைந்த உள்ளங்களின் ஒருங்கிணைந்த உழைப்பின் வெற்றியே டான் தொலைக்காட்சியின் இருபத்தைந்தாண்டுகாலப் பயணம் ஆகும். அச்சு ஊடகராகவும் இலத்திரனியல் ஊடகராகவும் தனது பயணத்தை மேற்கொள்பவர் குகநாதன். அவர் பட்ட சவால்களை அவரே அறிவார். இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல வீழ்ந்தபோதெல்லாம் எழுந்தார் என்பதுதான் அவர் செய்த சாதனை. சூரிய சந்திரர் உள்ளவரை இப்பயணம் சிறந்தோங்கட்டும்.

**செந்தமிழ்ச்சொல்லருவி**
**சந்திரமௌலீசன் லலீசன்**
(முதல்வர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
டான் தொலைக்காட்சியின் நீண்டகால
நேயர் மற்றும் நிகழ்ச்சி அளிக்கையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org